# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ்... ஆசிரியர்: பால்வண்ணன்

785



785
2-54

REGISTRAR OF BOOKS
10 JUN 1954
MADRAS

பைசா நகர

சாய்ந்த கோபுரம்

4 அ

4 AS

# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ்... ஆசிரியர்: பால்வண்ணன்

மலர் 1 | விலை அணா நான்கு | 1954 ஜூன் 12 | இலங்கையில் சதம் 30 | இதழ் 24

## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| வெளிப்புறம் கடைசி அட்டை | ரூ. 200 |
| உட்புறம் அட்டை | ரூ. 150 |
| உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 100 |
| உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 60 |
| உட்புறம் கால் பக்கம் | ரூ. 35 |
| உட்புறம்பத்தியில் ஓர் அங்குலம் | ரூ. 5 |

## சந்தா விபரம்

உள்நாடு:

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 12 |
| ஆறுமாதச் சந்தா | ரூ. 6 |
| மூன்றுமாதச் சந்தா | ரூ. 3 |
| தனிப்பிரதி அணா | 4 |

வெளி நாடு:

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 13 |
| ஆறுமாதச் சந்தா | ரூ. 7-8 |
| மூன்று மாதச் சந்தா | ரூ. 3-12 |

## இதனுள்...

| | பக்கம் |
|---|---|
| வாருங்கள் வேலைமாநகர் நோக்கி! (தலையங்கம்) | 12 |
| உலக அரங்கம் | 2 |
| துன்ப உலகம் (தொடர் கதை) | 3 |
| இத்தாலி | 9 |
| இலக்கணப்பகுதி | 15 |
| அழகு | 17 |
| ஜெய்ஹிந்த் சபா! | 20 |
| கல்வி (பாட்டு) | 21 |
| அமுதமும் நஞ்சும் | 23 |
| யாவளோ இவள்? (இலக்கியப் பகுதி) | 27 |
| நர்ஸ்நந்தினி (பெண்கள் பகுதி) | 28 |
| சாக்கியகுமாரி (சரித்திர இதழ்) | 31 |
| மழைபெய்விக்க... (விஞ்ஞானம்) | 33 |
| மல்லிகா (சிறுவர் தொடர் கதை) | 34 |
| முன்னேற்றம் | 36 |
| திரை அரங்கம் | 38 |
| செய்திச் சுருள் | 39 |
| கேளுங்கள் | 40 |

JUN 1954

★ திராவிடநாடு திராவிடருக்கே ★

19111



# உலக அரங்கம்

## மலேரியாவால் மரணம்

இந்தியாவில் சாதாரணமாய் ஒவ்வொரு வருஷத்திலும், 7,50,00,000. பேர் மலேரியா என்னும் தொத்து நோயால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களில் சுமார் 7,50,000 பேர் மரணமடைகிறார்கள். இதனால் தேசத்திற்கு ஏற்படும் நஷ்டமதிப்பு ஒரு வருடத்திற்கு சுமார் 10 கோடி ரூபாயாகும்.

## கால்நடை நிபுணர்களின் சாதனை

பத்து வருடங்களுக்கு முன் ஆப்பிரிக்கர்கள் கால்நடைகளை நன்றாக கவனிப்பதில்லை. பின் புகாண்டா மக்களுடைய கூட்டுறவினால் உகந்தா கால்நடை இலாகா நிபுணர்கள் இதில் கவனம் செலுத்தி வெற்றிபெற்றனர். விக்டோரியா ஏரிக்கருகிலுள்ள எண்டபி நகரத்தில் கால் நடை அபிவிருத்தி ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கப்பட்டது. பல இடங்களில் புகாண்டா விவசாயிகளுடைய உதவியினால் சோதனை நிலையங்கள் நிறுவப்பட்டன. முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள விவசாயிகள் 'பஹிமாக்கா'க்களாகிய இடையர்களிடம் கால்நடைகளை ஒப்புவிக்கும் வழக்கத்தை மாற்றி தாங்களே பராமரிக்கலானார்கள். கால்நடைகளுக்கு வரும் நோய்களைத் தடுக்க ஆராய்ச்சிப் பண்ணையில் சோதனை நடந்து வருகிறது வெக்கை நோயைக் கட்டுப்படுத்த மாற்று மருந்து கண்டுபிடித்து விட்டார்கள். தெள்ளுப்பூச்சியினால் பரவும் கிழக்குக் கரைநோய் எனப்படும் சுரமும்; ஸெட்ஸீ ஈயினால் பரவும் உறக்க நோயுந்தான். ஆப்பிரிக்காவில் கால் நடைகளுக்கு வரும் கொள்ளை நோய்கள், இவைகளைத் தடுக்க இப்போது ஆராய்ச்சி நடந்து வருகிறது. கால்நடை நிபுணர்களின் முயற்சியினால் உகந்தாவிலுள்ள கால்நடைகளான ஸெபு, நந்தா, ஜாதிமாடுகள் அபிவிருத்தி அடைந்திருக்கிறது.

## ராக்கட் விமான உலகரிகார்டு

நியூமெக்ஸிகோவிலிருந்து மேலே கிளம்பின ராக்கட்விமானம் மணி ஒன்றுக்கு 4300 மைல் வேகத்தில் பறந்து பூமியிலிருந்து 158 மைல் உயரத்துக்குச் சென்றது. இதற்குமுன் ராக்கட் சென்ற அதிக உயரம் 136 மைல்கள்தான். எனவே 158 மைல் உயரந்தான் தற்பொழுதுள்ள உலக ரிக்கார்டு.

## புயலின் கோரம்

29—5—54 சனிக்கிழமை அன்று பகல் 3 மணிக்கு, இடைக்காட்டூருக்கு அருகிலுள்ள குவள்வேலி கிராமத்தில், இடிமழையுடன் கடும் புயல்காற்று வீசியது. 30 நிமிட நேரம் விடாமல் புயல் வீசிக்கொண்டிருந்தது. இதன் விளைவாக சுமார் ரூ 10 ஆயிரம் வரை பொருட்சேதம் ஏற்பட்டது. புயலின் வேகத்தால் பலர் தூக்கி யெறியப்பட்டுக் காயமடைந்தனர், பல வீடுகள் சரிந்தன. புயலின் வேகம் தாங்காமல் பறவைகள் இறந்து விழுந்தன. இயற்கையின் கோர விளையாட்டுக்களில் இது ஒன்று.

## சிறியவன் பெரியவனானான்!

ரோம்நகரில் பிராங்கோ பண்டினி என்ற 5 வயது சிறுவன் நோயுற்று குணமானதும் பெரியவர்களுக்குக் காணப்படும் குணங்கள் தோன்றின. குரல் வயதான மனிதரின் குரலாக மாறிவிட்டது. மீசையும் தாடியும் வளர்ந்துவிட்டது. சிறுவர்களுடன் பேசவோ, விளையாடவோ அவன் விரும்பவில்லை. ஆகையால் அவனது பெற்றோர் அவனை சிறிது நாள் பள்ளிக்கு அனுப்பவில்லை. பிளாரன்ஸில் சில நிபுணர்கள் இவனைப் பரிசோதனை செய்து, சில கிளாண்ட்ஸ் வயதானபிறகு செய்ய வேண்டிய வேலையை இப்போதே செய்ய ஆரம்பித்து விட்டது என அறிந்தனர். புரொபஸர் ஜிகார்ஜிரோபிளாக் என்ற சாஸ்திர நிபுணர் ஆபரேஷன் செய்து அவனை சிறுவனாக்கினர். இப்போது அவன் சிறுவரோடு நன்றாக விளையாடுகிறான். பழகுகிறான். பள்ளிக்கூடம் செல்லுகிறான்.

## பார்லிமெண்டில் கைகலப்பு

ஜப்பான் பிரதமர் யோஷிடோ உலகசுற்றுப் பயணம் போவதை முன்னிட்டு, போலீஸ் சம்பந்தப்பட்ட முக்கிய சர்க்கார் மசோதா ஒன்றை நிறைவேற்றுவது பற்றி கூட்டத் தொடரை நீடிப்பதுபற்றி விவாதிக்க பார்லிமெண்டில் சபாநாயகர் மணி அடித்தார். அவ்வளவுதான்—சோஸலிஸ்டு எதிர்கட்சியினர் இந்த முயற்சியை முறியடிக்க சபாநாயகர் ஆசனத்தை நோக்கிச் சென்றனர். சர்க்கார் கட்சியினர் அவர்களைத் தடுக்கவே, இரு கட்சிகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. கையில் அகப்பட்டவைகளைத் தூக்கி அடித்தனர். பெண்களும் (மெம்பர்) இதில் கலந்து கொண்டு எதிர்கட்சியினரை அடித்தனர். சிறிது நேரத்துக்குப்பின் அமைதி ஏற்படுத்த போலீஸார் வந்தனர். அவர்களும் சண்டையில் கைகலந்தனர். பலத்த கைகலப்புக்குப்பின் அமைதி ஏற்பட்டது. 24 போலீஸாருக்கும், 30 சபைக்காவலருக்கும் காயம் ஏற்பட்டது. எம். பிக்களில் காயமுற்ற இருவரில் ஒருவருக்கு பலத்த அடி.

## மணிக்கு கோடி விடை

நியூயார்க்கிலுள்ள வர்த்தக ஸ்தாபனம் மின்சார சக்தியினால் இயங்கும் புது கருவி ஒன்றை கண்டுபிடித்திருக்கிறது. மணி ஒன்றுக்கு ஒரு கோடி கணக்குகளை இந்த மின்னணுக்கருவியினால் செய்ய முடியும். இக்கருவிக்கு கணக்குகளைப் போடவும் அவற்றைத் தீர்க்கவும் காந்த நாடாச் சுருள்கள் உள்ளன. இவை விநாடிக்கு 15,000 எழுத்துகள் அல்லது எண்ணிக்கைகளைப் பதிவு செய்கின்றன.

தொடர் நாவல் :

# துன்ப உலகம்

## இதற்கு முன்

[தண்டர்-தென்-திரான்க் மாளிகையின் சீமானின் ஆதரவில், அவர் மக்களோடு சமமாக வளர்க்கப்பெற்று வந்தான் கேண்டிட். என்னும் ஓர் இளைஞன். அம்மாளிகையின் ஆசான பங்ளாஸ். அவர் ஒரு தத்துவப் பேராசிரியா. அவருடைய சீடர்களிலே ஒருவன் கேண்டிட். அவன் அந்தச் சீமானின் மகள் கியுன் காண்ட் மீது காதலுற்றான். அவளும் அவனைக் காதலித்தாள்.

காதலின் விளைவால், இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி முத்தமிட்டுக்கொண்டார்கள், ஒரு நாள் இரவு உணவுக்குப்பின்! அதைக் காணப்பொருதகியுன்காண்ட்தந்தை அவனை உதைத்து வெளியேற்றினார். முத்தத்தின் பரிசாக உதைகள் பெற்று வெளியேறிய கேண்டிட், புள்கேரியப் படையில், விருப்பத்திற் கெதிராக, பலவந்தமாக சேர்க்கப்பட்டு விட்டான். அந்தப் படையினின்றும் தப்பியோட முயன்றபோது, பிடிபட்டு ராணுவ சட்டப்படி கசையடிகள் வாங்கினான். கசையடிகள் முழுவதும் வாங்கமுடியாமல், சுட்டுக் கொன்றுவிட வேண்டிய போது, புள்கேரிய மன்னனால் மன்னித்தும் காப்பாற்றப் பட்டான்.

புள்கேரியர்கட்கும் அபேரியர்கட்கும் போர்மூண்டது. போரின்முடிவில், களத்திலிருந்து தப்பி யோடி கால் நடையாக ஆலந்து நாட்டில் தஞ்சம் புகுந்தான் அவன்; அங்கு உணவு வேண்டி ஒரு மதக் குருவை அடைந்தான்; அவர் போப்பாண்டவரைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறத் தெரியாத காரணத்தால், அக்குருவின் மனைவியால் நீர்க்குடம் வீசியெறியப்பட்டு, மண்டையில் காய முற்றான். அதைக்கண்ட அவ்வூர் பரோபகாரி ஜேம்ஸ் என்பவர் கேண்டிட்டைத் தன்னில்லம் அழைத்துச் சென்றார். மண்டைக் காய மாற்றி, அவனைத் தன்னுடனேயே வைத்திருந்தார்.

ஒருநாள் உலவச்சென்ற கேண்டிட், தொத்து நோய்க்காளாகி, பிச்சைக்கார வடிவி லிருந்த தன் ஆசாரியர் பங்ளாஸைச் சந்தித்தான். அவனிடமிருந்து தண்டர்-தென்-திரான்க் மாளிகை புள்கேரியபடை வீரர்களால், தீக்கிரையாக்கப் பட்டு, சீமானும், சீமாட்டியும், இளஞ்சீமானும் கொல்லப் பட்டாரென்றும், கியுன் காண்டும் அவர்களால் கற்பழிக்கப் பட்டுக் கொன்று வீழ்த்தப்பட்டாள் என்றும் அறிந்து மயக்கமுற்று வீழ்ந்து, எழுந்து கியுன்காண்டை எண்ணிக்கதறி, அழுதுகண்ணீர் வடித்தான்! பின்பு, ஜேம்ஸை அடைந்து தன் ஆசானுக்கு பட்டுள்ள தொத்து நோயைப் போக்க வைத்திய வசதிவேண்டினான். பங்ளாஸ், ஒருகாதையும் ஒரு கண்ணையும் பறிகொடுத்து, உடல் நலமுற்றார்! அவரும் ஜேம்ஸிடமே கணக்கெழுதும் வேலையில் அமர்ந்தார். வியாபாரத்தின்பொருட்டு. ஜேம்ஸ், கேண்டிட், பங்ளாஸ் மூவரும் லிஸ்பன் நோக்கி கடலில் பிரயாணமானார்கள். கப்பல் லிஸ்பன் துறைமுகத்தை அடையும் நேரத்தில், திடீரென்று ஆகாயமெங்கும் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன! பெரும்புயல் வீசத்தொடங்கியது! கடல் மிகக்கொடூரமாக அலைந்தது! குழவி முதல் அனைவரும் கூக்குரலிட்டு அழுதார்கள்! அந்தோ கப்பலும் நிலைதடு மாறியது! பின்பு]

நிலை தடுமாறிய கப்பலிலிருந்தோர் கண்களுக்கு லிஸ்பன் துறைமுகப்பட்டினம் தெரிந்தது; ஆனால், கப்பல் புயல் வீச்சினால் மேலே செல்ல முடியாது, கடல் அலைகளோடு மிக வேகமாக அலைந்தது! கப்பலிலிருந்த எல்லோரும், கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு, நடுங்கி அழுது கொண்டிருந்தனரேயன்றி, காற்றின் வேகத்தினால் கிழிந்து விழும் பாய் மரங்களைத் தடுத்து நிறுத்தித் தொங்கவிட உதவி செய்ய முன் வரவில்லை; அவர்கள் தெய்வத்தை நினைத்துத் துதி பாடி பிரார்த்தனை செய்ய ஆரம்பித்து விட்டார்கள்!

பாய் மரத துணிகள் கிழியத் தொடங்கியதைத் தொடர்ந்து கப்பலின் அடி, பக்கத் தட்டுப் பலகைகள் உடையவும், பிளக்கவுமாயின. கப்பலோட்டிகளுடன் சேர்ந்து தன்னாலான உதவிகளைச் செய்து கொண்டும், பயத்தினால் கதறி அழுது




கொண்டிருந்த மக்கட்குத் தைரிய உரை கூறிக்கொண்டும் நின்றிருந்த பரோபகாரி ஜேம்ஸை, அக் கப்பலோட்டிகளில் ஒருவன், கன்னத்தில் அறைந்து கீழே தள்ளினான். அடிபட்ட ஜேம்ஸ் கப்பலில் (கீழே) வீழ்ந்தான். அடித்த மாலுமி, ஜேம்ஸை அடித்ததனால் தனக்கேற்பட்ட மூளைக் குழப்பத்தில், அலையும் கப்பலில் சரியாக நிற்க முடியாமல், உடைந்து கடலில் வீழ்ந்து கொண்டிருந்த மரத் துண்டொன்றை பிடித்து நிற்க முயன்றான். கடலில் வீழ்ந்திட இருக்கும் மரத் துண்டின் மீது தன்னை அடித்த மாலுமி சாய்வதைக் கண்ட ஜேம்ஸ், அந்த மாலுமியைப் பிடித்திழுத்து நிறுத்த முயன்றதனால் கடலில் வீழ்ந்தார்! மாலுமி தப்பினான்!

ஜேம்ஸ் கடலில் கடைசியாக மூழ்கும் முன் மேலே எழுந்தார்! அப்போது கேண்டிட் அந்தக் காட்சியைக் கண்டுவிட்டான்! அவன் உள்ளம் பதைத்தது! "பங்ளாஸ்! அதோ, ஜேம்ஸ்!" என்று கூறியபடியே கடலில் குதிக்க முயன்றான். அப்போது பங்ளாஸ் அவனைத் தடுத்து நிறுத்தி, "கேண்டிட், லிஸ்பன் துறைமுகம், ஜேம்ஸை விழுங்கும் காரணத்தால் ஆகியுள்ளது! அதனால், ஜேம்ஸ் கடலுக்குள் மூழ்குகின்றார். அதைத் தடுக்க நீ யார்? நடப்பதை நடக்காதிருக்ச் செய்ய உன்னால் முடியுமா?" என்று தத்துவம் பேசினார்.

"அந்தோ, நம்மை ஆதரித்த வள்ளல் ஜேம்ஸ் கடலில் கலந்து விட்டாரே! ஜேம்ஸ், நான் நன்றி கெட்டவனாகவுள்ளேன்; நீர் எல்லோரிடமும் கருணை காட்டினீர்! உன்னிடம் இந்தக் கடல் கருணை காட்டவில்லை! இது நல்ல உலகமன்று நகர உலகம்!" என்று ஜேம்ஸின் மரணத்திற்காகக் கண்ணீர் வடித்தான்.

கேண்டிட்டின் ஒப்பாரியைக் கடல் கேட்டதோ. அல்லவோ! ஆனால், கப்பலின் பாகங்கள் சிறுகச் சிறுகப் பிளந்திடும் ஓசையை கப்பலிலுள்ள பிரயாணிகள் கேட்டார்கள்; சங்கை

நெருங்கிக் கொண்டிருக்கும் மரணத்தைக் கண்டு அஞ்சி அலறித் துடித்துக் கதறினார்கள்! அவர்களைத் தேற்றிட எண்ணிய பங்ளாஸ், கேண்டிட்டை நோக்கி, "சீடனே, இது மிக நல்ல உலகம்; இதில் நாம் நல்லவர்களாகவே இருக்கவேண்டும்! அஞ்சி அழுகின்றவர்கட்கு ஆறுதல் கூறுவோம், வா!" என்று அழைத்தான்.

"சாவைக் கண்டு வேதனைப் படுவோரை வேதாந்த கருத்துக்களால் தேற்ற முடியாது! இந்தக் கப்பல் உடைந்து கொண்டுள்ளது! வீசுகின்ற புயல் இந்தக் கப்பலை எப்பக்கம் திருப்பி எப்பாறையின்மீது மோதி, தூள் தூளாக்கப் போகின்றதோ தெரியவில்லை! இந்த நேரத்தில் அமைதியாயிருப்பதுதான் நல்லது!" என்று கூறிக்கொண்டே இருக்கும்போது கப்பலின் அடிப் பாகம் திடீரென்று பிளந்து, கடல் நீர் "குபுகுபு" என்று உள்ளே நிரம்பி, கப்பலைக் கடலில் ஆழ்த்தியது! "ஓ" வெனும் மக்களின் அழுகை ஒலி, அதைக் காட்டிலுமான கடல் அலையின் பேரிரைச்சலிலே கலந்து விட்டது!

ஜேம்ஸ் இறக்கக் காரணமான மாலுமி கடலை வெகு வேகமாக நீந்திச் சென்று லிஸ்பன் துறைமுகத்தை அடைந்தான். அவனைத் தொடர்ந்து கேண்டிட்டும், பங்ளாஸும் கப்பலின் சிதறிய துண்டுகளைப் பிடித்துக் கொண்டு, கரையேறினார்கள். மற்றவர் எல்லோரும் கடலில் மாண்டார்கள். மூவரும் துறைமுகக் கரையை அடைந்து பூமியின்மீது நின்றார்கள். அப்போது திடீரென்று பூமி நடுங்கிற்று! கடல் பொங்கி எழுந்து, நங்கூரங்களை நகர்த்தி, நின்றிருந்த கப்பல்களைத் துண்டுகளாக்கியது! பெருங் கட்டடங்களெல்லாம் இடிந்து, சரிந்து வீழ்ந்தன! காற்றின் வேகத்தினாலும், நில அதிர்ச்சியினாலும், இடிந்து வீழ்ந்து கொண்டிருந்த கட்டடங்களின் கற்கள் சிதறிப் பறந்தோடி, நாற்புறமும் விரவின! அதனால் கேண்டிட்டின் உடலில் அநேக இடங்களில் காயங்கள் ஏற்பட்டன!

தெருக்களும் பெரு வீதிகளும் இடிந்து வீழ்ந்த கட்டடங்களால் நிரம்பின! பூமி நடுக்கத்தோடு ஏற்பட்ட சுழற் காற்றினால் மாளிகைகளும். வீடுகளும் சாம்பல் மேடுகளாயின. கட்டிலிலே இருந்த கட்டிளங் காதலர், புவி நடுக்கத்தினால், அப்படியே புதைக் குழியில் புகுந்தார்கள். தொட்டிலிலே தூங்கிய குழந்தைகள் சின்னா பின்னமாகி, அவற்றின் உறுப்புகள் சிதறியோடின! எங்கு பார்த்தாலும், பிணக் குவியல்களே தென்பட்டன, லிஸ்பனில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியின் கொடுமையால்! காதலனை இழந்த காதலியும், காதலி பிணமானதைக் கண்டகாதலனும், மனைவி மண்ணிலே மறையக் கண்ட கணவனும், இடிந்த வீட்டின் சுவர் கணவன் மீது வீழ்ந்து அதனால், அவன் மண்டை உடைந்து, மூளை சிதறியோடி மாண்டதைக் கண்ட மனைவியும், கண்ணீர் விட்டுக் கதறி அழுத குரலோசை, மீண்டுமொரு புவி நடுக்கமோ, சுழற் காற்றின் ஓசையோ, என அச்சுறுத்தியது!

கேண்டிட், பங்ளாஸ், தப்பிய மாலுமி அனைவரும் லிஸ்பனினுள் பூமி நடுக்கத்தின் விளைவைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் கேண்டிட்டின் காலின் மீது, ஒரு இடிந்த வீட்டின் கல் சரிந்து வீழ்ந்தது! அந்தோ, அவன் அப்படியே கீழே வீழ்ந்தான்! மாலுமியோ தான் உண்ணுவதற்கும், குடிப்பதற்கும் வேண்டிய பணத்தைத் தேடி, கீழே விழுந்திருந்த பிணங்களைப் புரட்டிக் கொண்டும், இடிந்த வீடுகளின் கற்குவியல்களைக் கிளறிக் கொண்டிருந்தான்.

பங்ளாஸ், அந்த மாலுமியை நோக்கி "என்ன தேடுகிறாய்?" என்று கேட்டார்.

"இழந்தோர், இறந்தோர், கைப் பொருள்கள் ஏதேனும் என் கைக்குக் கிடைக்கத் தேடுகின்றேன்" என்றான் அந்த மாலுமி.

"இத்தகையதொரு நிகழ்ச்சிக்கு என்ன காரணமாக இருக்க முடியும்?" என்று பங்ளாஸ் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

"உலக விசாரணை நாள் வந்து விட்டது! அதனால்தான் புவி நடுக்கமும், கடல் கோளும் ஏற்பட்டுள்ளன! நாமெல்லாம், ஆண்டவன் முன் விசாரிக்கப் பட்டு நியாயம் வழங்கப்படப் போகிறோம்!" என்று கூறினான் கேண்டிட்.

இதோ எனக்குத் தேவையான பணம் கிடைத்து விட்டதென்று தன் கைக்குக் கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு மதுக்கடை நோக்கி ஓடினான் மாலுமி.

"பிறர் ஆபத்திலே சிக்கியிருக்கும் வேளை அகப்பட்டதைச் சுருட்டும் அக்ரமக்காரர்களிலே ஒருவன் இந்த மாலுமி" என்றார் பங்ளாஸ்.

"இவன் கொலைக்கஞ்சா இரக்கமற்ற கொடுங்கோலன்! இவனாலன்றோ பரோபகாரி ஜேம்ஸ் பாழ் கடலுக்கு இரையானார்!" என்றான் கேண்டிட்.

இப்படிப் பங்களாஸும் கேண்டிட்டும் பேசிக் கொண்டிருந்த போது, அந்த மாலுமி குடித்து விட்டு, ஒரு அழகியமங்கையைஇழுத்துக் கொண்டு வந்தான்! அவள் அவனுடன் மல்லாடிக் கொண்டிருந்தாள்!

"லிஸ்பனிலே நான் கண்ட முதல் அழகி இவள் என் விருப்பத்தின் விருந்துக்கு அழைத்து வந்துள்ளேன்!" என்றான் அந்த மாலுமி.

"அழைத்து வரவில்லை; இழுத்து வந்திருக்கிறாய்! துரோகி, எங்கே கண்டாய் அவளை! அயோக்கியா, அவளை விட்டுவிடு! ஆபத்திலுள்ளவர்களை ஆதரிப்பதுதான் அழகு! உன் காம ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவளை அலங்கோல படுத்தி விடாதே!" என்றான் கேண்டிட்.

"ஆம் நண்பனே, பாழடைந்த வீட்டிலே பதைத்த உள்ளத்தோடு நின்றிருந்த இந்தக் கன்னியைப் பாதுகாத்திட வேண்டியதுதான் நம்பொறுப்பு. அந்தப் பொறுப்பை உணர மறுத்

## அட்டைப்படம்

இன்றுள்ள உலக அதிசயங்களில் ஒன்று சாய்ந்தகோபுரம். இது இத்தாலிய நாட்டில் பைசா என்னும் நகரத்தில் இருக்கிறது. இந்த கோபுரத்தின் மீதுஇருந்து பல விஞ்ஞானிகள் பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் — கடமை உணர்ச்சியை உலகிற்குக் கூறிய உத்தமன் "மாஜினி" யின் உடலும் பைசா நகரின் சாய்ந்த கோபுரத்தின் பக்கலில் தான் அடக்கம் செய்யப்பட்டது. உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரத்தையே இவ்வாரக் கலைமன்றம் தாங்கி வருகிறது.

தால் பேசாமலிருப்பதுதான் நல்லது! அதை விட்டு, செத்தவர்களும் செத்துக் கொண்டிருக்கின்றவர்களும் நம்மைச் சூழ இருக்க, சித்தம் கலங்கி சோர்வுற்றிருக்கும் இந்தச் சிங்காரியைச் சித்திரவதைச் செய்யாதே! சந்தர்ப்பத்தைச் சதி செயல்களுக்கும் சாத்திர விரோத காரியங்களுக்கும் பயன் படுத்தாதே! உலக நீதிக்குக் கட்டுப்படு!" என்றார் பங்ளாஸ்.

"உன்னுடைய உலக நீதிக்குக் கட்டுப் பட்ட மனிதன் அல்லன் யான்! நான் பிறந்தது படேவியாவிலே! ஜப்பானுக்குச் செல்வதற்கென ஏற்பட்ட அநேக சந்தர்ப்பங்களிலே, நான்கு முறை சிலுவைச் சின்னத்துப் பிணங்களின் மீது நடந்துள்ளேன்! பெரும் நரக உலகமிது! இங்கே நீதியும் நேர்மையும் ஏது?" என்று கூறி விட்டு, தன் கைப்பிடியிலிருந்த இளங் கன்னியை, அவள் கதறியும் விடாது, இறுகத் தழுவித் தூக்கிச் சென்றான், அந்த மாலுமி!

அந்த மாலுமி சென்ற பின்பு, "இத்தகைய பூமி அதிர்ச்சி புதிதல்ல!" என்றார் பங்ளாஸ்.

"அதனால், அக்ரமங்களும் புதிதல்ல என்று கூறுகிறீர் போலும்!" என்றான் கேண்டிட்.

"இது போன்றதொரு பூமி அதிர்ச்சி சென்ற ஆண்டிலே, அமெரிக்காவிலே உள்ள லிமா (Lima) நகரத்திலேயும் ஏற்பட்டது. அங்கும் இங்கும் போன்றே அக்ரமங்களும், அட்டூழியங்களும், ஆபத்துக்களும், அவதிகளும் ஏற்பட்டன. இங்கு இன்று ஏற்பட்டுள்ள காரண காரியங்களே அன்று, அங்கு அமெரிக்காவிலும் ஏற்பட்டன. லிமாவுக்கும், லிஸ்பனுக்கும் பூமியின் அடியிலே கந்தகத் தீக்குழம்பாறு ஓடிக்கொண்டிருக்கிறது போலும்!" என்றார் பங்ளாஸ்.

பேசிக் கொண்டிருந்த கேண்டிட், காற்றில் பறந்து வந்தொரு கல் தன் மீது வீழ்ந்ததால் மயக்கமுற்றான்! அதைக் கண்டவுடனே, பங்ளாஸ் சிறிது தூரம் சென்று, ஆங்கிருந்த ஊற்றிலிருந்து நீர் கொண்டு வந்து கேண்டிட்டை மூர்ச்சை தெளியச் செய்தார்.

கண் விழித்தெழுந்த கேண்டிட்டும், பங்ளாஸும், மடிந்தவர்கள் போக, மரணமடையாது எஞ்சியவர்களுக்கு உதவி புரியவும், அவர்களோடு அவர்களுக்கான வேலைகளில் ஒத்துழைக்கவும் முன் வந்தார்கள். அப்போது அவர்கட்கு உணவும் கிடைத்தது. அதனால் அவர்கள் இழந்த பலத்தை ஓரளவு பெறும் வாய்ப்பேற்பட்டது. கைப்பொருளையும், வீடு வாசல்களையும், மக்களையும், மனைவியையும், கணவனையும், பெற்றோரையும் இழந்து வேதனை அடைந்து கொண்டிருந்த, புவி நடுக்கத்தின் கோரக் கொடுமைக்காளானவர்களுக்குச் சிறிது உணவு அளிக்கப்பட்டது, கருணை கொண்ட அந் நகர வாசிகள் சிலரால்!

நல் உணவு உண்டு பழகிய சிலர் தங்கட்கு அளிக்கப்பட்ட, கருணையின் காரணமாக பரிமாறப்பட்ட உணவு கீழ்த்தரமாக இருக்கக் கண்டு கண்ணீர் விட்டார்கள். அவர்களைப் பங்ளாஸ் தேற்றினார். ஒருவன் வாய்விட்டே அழுதுவிட்டான்! அவன் பக்கத்திலே இருந்த பங்ளாஸ், அவனை நோக்கி, "தம்பி, அழாதே! ஏன் அழுகின்றாய்! ஆண்டவன் எல்லாம் நன்மையின் பொருட்டுத்தான் நிகழ்த்துவார். நமக்கேற்பட்டுள்ள இந்தக் கதியும் நன்மைக்கேயாகும் என்று உள்ளந் தேறியிரு! என்று கூறினார்.

அருகில் நின்றிருந்த கேண்டிட், "நல்லுணவு உண்டு பழக்கப்பட்டவன்! பாவம், கலங்குகிறான்! பங்ளாஸ், சாந்த உரைகள் கூறுகின்றீர், சாகாது செத்துக் கொண்டிருப்பவனிடம்! தீமையும் நன்மைக்கே என்கிறீர்!

## ஆசைத்தம்பியின் வெற்றி

விருதுநகர் தொழிலாளர் பகுதியான 22-வது வார்டின் நகரசபை உபதேர்தல் மே மாதம் 27-ம் நாள் நடைபெற்றது. அத்தேர்தலில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சுயேட்சை அபேட்சகராக நின்றார். அவரை எதிர்த்து வீராச்சாமி என்பவர் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக போட்டியிட்டார். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி 431 ஓட்டுகள் பெற்று வெற்றிபெற்றார். கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் வீராச்சாமி 111 ஓட்டுகள் பெற்று படுதோல்வி அடைந்தார்.

ஆனால், அவன் உள்ளமோ, அளித்தத் தீமை என்னை ஏன் சுட்டெரிக்கவில்லை என்று கேட்கிறது! அவனை மனம் தேறிக் கொள் என்று அவனுக்குத் தத்துவ உபதேசம் புரிகின்றீர். அவனோ, மனம் ஏன் இருக்கின்றது என்று தனக்குத்தானே கேட்டுக் கொள்கின்றான். இந்த நிலையில் உம் உரையை அவன் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?" என வினவினான்.

கேண்டிட்டும் பங்ளாஸும் சிறிது தொலைவில் தனியாகச் சென்றார்கள். பின்பு, பங்ளாஸ், கேண்டிட்டை நோக்கி, "சீடனே, பூமி நடுக்கமும் நன்மைக்கே ஏற்பட்டுள்ளது என்று நான் சொல்வதை நீயும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறாய்! லிஸ்பனிலே ஓர் எரிமலை இருந்தால் அந்த எரிமலை இங்கிருந்து வேறு எங்கேயாகிலும் சென்றுவிடுமா? அது இங்கிருந்து நெருப்பைக் கக்கிக் கொண்டுதானே இருக்கும். ஆங்காங்கு இருக்கவேண்டிய பொருள்கள் ஆங்காங்கே இல்லாமல் வேறு எங்காகிலும் இருக்க முடியுமா?" என வினவினார்.

"தத்துவ பேராசிரியரே, எரிமலை கக்கும் எரிப்பினால் அழிவே அன்றி ஆக்கமென்ன? நீங்கள் அடிக்கடி கூறுகின்ற காரண காரிய விளக்கப்படியே எரிமலை இருக்கும் காரணம் அழிவுக் காரியத்திற்குத்தான் என்று சொல்லலாமே ஒழிய, எரிமலை தீக்குழம்பைக் கக்குவது நன்மையின் பொருட்டு என்று எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும். புவி நடுக்கம் ஏற்பட்டுள்ளது. பல உயிர்கள் மாண்டன! பல வீடுகளும், மாளிகைகளும், மண்மேடுகளாயின! இவை பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்ட நன்மைகளா? தீமைகளா? எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் இந்த உலகத்தில் நடப்பவை யாவும் நன்மைக்கே என்றும், அதனால் இது மிகவும் நல்ல உலகமென்றும்? ஏன் இதைத் துன்ப உலகமென்று கூறக் கூடாது?" என்று தன் ஆசானைக் கேட்டான், கேண்டிட்.

"கேண்டிட், புவி நடுக்கத்தினால் எதிர்காலத்தில், ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், இந்த உலகத்திலும் நன்மையே ஏற்படும்! என் சித்தாந்தம் பொய்க்காது! நீ வேண்டுமானால் பொறுத்துப்பார்!" என்றார் பங்ளாஸ்.

"ஆம், ஆசிரியரே, உண்மையாக எதிர்காலத்தில் நன்மைகள் பல இந்தப் பூமி அதிர்ச்சியினால் ஏற்படப்

போகின்றன! ஆனால், அவை பெரும் பணக்காரர்கட்கும், வணிகர்கட்கும், கொள்ளை அடிப்போர்கட்கும், ஏய்த்துப் பிழைப்போர்கட்குமே யாகும்! கைப் பொருளிழந்து, கந்தலாடைக்கும் வக்கின்றி, கையையே தலையணையாகக் கொண்டு, கடும் பனியையும் குளிரையும் பொருட்படுத்தாது, காரிருட்டிலே, காலை முதல் மாலை வரை உழைத்ததனால் ஏற்பட்ட களைப்பின் மிகுதியால், கண்ணுறங்குகின்ற ஏழைமக்கட்கு இந்தப் பூமி அதிர்ச்சி பெரும் தீமை இழைத்ததே யன்றி, நன்மை ஒன்றும் செய்திடப் போவதில்லை.

இடிந்த மாளிகைகளைப் புதுப்பித்திடும் பணியில் கொத்தர்கள் மிக லாபமடைவார்கள். கட்டட வேலைகட்கு கல், மண், சுண்ணாம்பு விற்போர் கொழுத்த பணக்காரர்களாவார்கள். சிற்ப வேலைகளும், சித்திர வேலைகளும் தெரிந்தவர்கள் சிங்காரச் சீமான்களின் வீடுகளுக்கும், மாளிகைக்கும் அலங்கார வேலைகள் பல புரிந்து அதிக பணம் சம்பாதிப்பார்கள். உழைப்பதையே துணையாகக் கொண்டவர்கள், உழைத்திடவும், அதனால் கிடைக்கின்ற கூலியிலே கண்காணிப்போனுக்கு விழுக்காடு கொடுத்துவிட்டு, மீதி பணத்திலே கால்வயிற்று உணவுக்கும் கதியின்றிக் கலங்கி வாழவுமே யன்றி வேறென்ன நன்மை அடையப் போகின்றார்கள்! பங்ளாஸ், பாவ புண்ணியம் பேசுகின்றவன்கூட சில நேரங்களிலே பகுத்தறிவு துணை நாடுகின்றான். ஆனால் நடப்பவை யாவும் நன்மைக்கே என்று பேசும் உம்போன்ற தத்துவ வாதிகள் என்றும் எதிலும், நன்மையையே பார்க்கின்றார்களே யன்றி தீமையின் பக்கம் கூடத் திரும்ப மறுக்கின்றார்கள். அதனால்தான் இது துன்ப உலகம் என்று கூறுகின்றபோது, துன்பங்களை மறந்து, இன்பங்களையே கண்முன் கொணர்ந்து பார்த்துவிட்டு இது இன்ப உலகம்தான் என்று மறுத்துக் கூறி விடுகின்றீர்!" என்று தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டான் கேண்டிட்.

பங்ளாஸ்-கேண்டிட் ஆகிய இரண்டு பேர்களுடைய வாதங்களைக் கேட்டுக் கொண்டமர்திருந்த, கறுப்புடையணிந்த நியாய விசாரணைசெய்வோன் ஒருவன் பங்ளாஸை நோக்கி, "ஐயா, நீ மனிதன் இழைக்கின்ற பாவத்தில் உனக்கு நம்பிக்கை இல்லைபோலும்! பாவம் செய்வதுகூட, நன்மைக்கே என்று கூறிடுவீர் போலும்! என்று வினவினான்.

"நான் பாவத்தில் நம்பிக்கை அற்றவன் மாத்திரமன்று; பாவமும் பக்குவமான சமயத்தில் நன்மைக்கே யாகும் என்று துணிவுடன் கூறுகிறேன்" என்றார் பங்ளாஸ்.

"அப்போது, நல்ல உலகமாகிய இதில் மனிதனின் மரணமும், தேவத் தண்டனையும் நிலவக் காரணமென்ன?" என்றான் அந்தக் கறுப்புடைக்கார நியாய விசாரணைக்காரன்.

"தேவையின் பொருட்டுத் தான் மனிதனின் வீழ்ச்சியும், தேவ தண்டனையும் ஏற்படுகின்றனவே யன்றி, இந்த உலகத்தைத் துன்ப மயமாக்குவதற்காக வல்ல!" என்றார் பங்ளாஸ்.

"உனக்கு விடுதலை உணர்விலே நம்பிக்கை இல்லை போலும்!" என வினவினான் அந்த நியாய விசாரணைக்காரன்.

மன்னிக்க வேண்டுகின்றேன். விடுதலை உணர்ச்சி, சர்வதேஸ்வ எண்ணத்துடன் இணைந்திருக்க வேண்டும். நாம் சுதந்தரமாக வாழ இருப்பதால்!..." என்று பங்ளாஸ் கூறிக் கொண்டிருந்த போது, அந்த நியாய விசாரணைச் செய்வோன் மதுக்கோப்பையை நாடினான். பங்ளாஸும் கேண்டிட்டும் அவ்விடத்தை விட்டு நடந்தார்கள்.

பூமி அதிர்ச்சியால் லிஸ்பன் பட்டணத்தின் நான்கின் மூன்று பாகங்கள் நாசமாயின. மேலும், பூமி அதிர்ச்சி ஏற்பட்டு நாட்டிற்கு நாசமேற்படாமலிருக்க வேண்டி, லிஸ்பனின், **கோயிம்பரா** பல்கலைக் கழகம், உயிரோடு மனிதர்களை நெருப்பில் எரித்தால் ஆண்டவன் சாந்தமுற்று பூமி அதிர்ச்சி ஏற்படாமற் செய்வார் என்று கூறியதுமன்றி அத்தகையதொரு பெரு விழாவையும் நடத்த ஏற்பாடு செய்தது. தீயில் உயிரோடு பொசுக்கி, புவி அதிர்ச்சியைச் சாந்தப் படுத்துவது என்ற எண்ணத்துடன் ஆள்தேடி அந் நாட்டின் பெரும் பதவிக்காரர்கள் அலைந்து திரிந்தார்கள்.

கோழிக் குஞ்சுகளுடன், உப்பிட்ட பன்றி இறைச்சியைத் தின்ன மறுத்த இரண்டு யூதர்களையும், ஞானஸ்நானத் தாயை மணந்த ஒரு **பாங்க்** மகனையும் பிடித்தார்கள். அத்துடன் தம் எண்ணம்போல் எதையும் பேசிக் கொண்டிருந்த பங்ளாஸையும், அவர் பேச்சுக்களை ஆமோதித்துக் கேட்டுக் கொண்டிருந்த கேண்டிட்டையும் பிடித்தார்கள். எல்லோரையும், குற்றவாளிகளாகக் கருதப்பட்ட இந்த ஐந்து பேரையும், தீயில் உயிருடன் வேகவைத்துப்! புவி அதிர்ச்சியைச் சாந்தப்படுத்த உறுதி கொண்டார்கள்.

கேண்டிட்டும், பங்ளாஸும் மற்றவர்களும் தனித்தனி அறைகளிலே அடைக்கப் பட்டார்கள். அவர்கள் அந்த அறைகளிலே சூரிய வெளிச்சத்தையே பார்க்க முடியாதபடி காக்கப் பட்டார்கள்ள். பேராசிரியர் பங்ளாஸ் பெரும் துயர்தனில் மூழ்கினார். தொத்து நோயால் மாண்டிருந்தாலும் நல்லதாயிருந்திருக்கும்! பாவம்! அவர் வாழ்வு தீக் கிரையாவதாக முடிந்தது! அவர் அந்தத் தொல்லையையும் காரண காரியங்களின அடிப்படையிலே நன்மையாகவே எண்ணினார்!

கேண்டிட் இளைஞன் அன்றோ! பெருவாழ்விலே திளைத்திருக்க எண்ணிய வேளையில் காதல் தந்த பரிசைப் பெற்றுக் கொண்டு, புள் கேரியர்களின் கசையடிகளையும் வாங்கிக் கொண்டு, கப்பல் உடைந்ததனால் கடலிலும் சாகாது உயிரோடு தீயில்


**உலக அறிஞர்கள் சிந்திய அமுதத் துளிகள்**

1. தாகூர் முத்துக்குவியல் 0 8
2. விவேகானந்தர்வீரவுரைகள் 0 8
3. இராமகிருஷ்ணர் அருள் வாக்குகள் 0 8
4. மாஜினி மணிமொழிகள் 0 8
5. இங்கர்சால் அறிவுரைகள் 0 8
6. ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் 0 8
7. ஏசுநாதர் அருள் வாக்குகள் 0 8
8. அண்ணாவின் உவமைகள் 0 8
9. கீதை உபதேச மொழிகள் 0 8
10. லெனின்பொன்மொழிகள் 0 8
11. ஸ்டாலின் புரட்சி
12. மொழிகள் 0 8
13. வள்ளலார் வாய்
14. மொழிகள் 0 8
15. கம்பர் கற்பனைகள் 0 8

கருணாநிதி கருத்துரைகள் 0 8
திருக்குறள் மூலம் 0 8

விபரங்களுக்கு :
கலைமன்றம் - சென்னை-1

வேக வேண்டுமென்றால் அவன் மனம் சும்மாவா இருக்கும்! தீயிலே, தான் எரிக்கப்படப் போகிறோம் என்று எண்ணிய மாத்திரத்தில் அவன் உடலெங்கும் ஓடிய இரத்தம் சில்லிட்டுப் பயந்து கீழே வீழ்ந்தான்! நெடுநேரத்திற்குப் பின்பு கண் விழித்தான். தன்னைச் சுற்றிலும் சூரிய வெளிச்சமே இன்றி இருள் சூழ்ந்திருக்கக் கண்டான். "ஓ!" வென அலறினான்; கதறினான்; தரையிலே முகத்தைப் புதைத்துக் கண்ணீர் விட்டுக் கலங்கினான்.

"கியுன் காண்டைப் பிரிந்து வந்த நான் வழியிலே பசியால் வாடி வதங்கிச் செத்திருக்கக் கூடாதா! புள்கேரிய வீரர்களிடம் பெற்ற சவுக்கடிகளால் என் உடலில் நரம்புகள் அறுந்து நான் மாண்டிருக்கக்கூடாதா அல்லது, போரிலே அபேரிய வீரன் எவனாகிலும் என்னைச் சுட்டுக் கொன்றிருக்கக் கூடாதா! மத வெறி கொண்ட மதக்குருவின் மனைவி வீசியெறிந்த குடத்தின் ஓடு என் மண்டையில் உண்டாக்கிய காயம் ஆழமுடையதாகி, ஆற்றமுடியாததாகி, என் ஆவி போக்கி இருக்கக்கூடாதா! அந்தோ, ஜேம்ஸ்! பெரும் பரோபகாரி உம்மை கடல் விழுங்கியதே! அந்தக் கடல் என்னை விழுங்கி இருக்கக் கூடாதா? ஐயோ! எப்படி நான் உயிருடன் சுடுந் தீயில் வெந்து சாவேன்! கியுன் காண்ட், நீ புள்கேரியர்களிடம் சிக்கிப்பட்டத் துன்பத்தைவிட பெரும் துன்பம் நான் அனுபவிக்க நேரிட்டிருக்கிறதே! தீ! தீ! தீ! தேன்மொழியாளே, என்னைச் சுட்டெரிக்கப் போகிறது தீ! அந்தத் தீ, பெருந்தீயுங்கூட அல்லவாம்! சிறுந் தீயில்தான் எங்களை வேக வைக்கப்போகின்றார்கள்; இந்த லிஸ்பன் நாடாள்வோர்! ஐயோ! பெருந் தீயானாலும் விரைவில் உடலைச் சாம்பலாக்கும்! சிறு தீ என்னைச் சிறுகச் சிறுக சித்திரவதைச் செய்தல்லவோ சீவனை பிரியவைக்கும்! பங்ளாஸ்! இந்த உலகம் நல்ல உலகம்; என்றாயே! இது பாதகர்கள் நிறைந்த உலகம்; பாழ் உலகம்; துன்ப உலகம்! இப்போதாகிலும் உணர்ந்து கொண்டீரா, அல்லது இந்தத் தீ எரிப்பு விழாவும் நன்மைக்கே என்று சும்மா இருக்கின்றீரா? நாம் சந்திக்கவும் முடியாதபடித் தனித் தனிச் சிறைவாசம் ஏற்பட்டிருக்கின்றதே!" என்று கண்ணீர்விட்டு அழுது கொண்டே இருந்தான்.

ஒருவாரம் கழிந்தது. கேண்டிட்டும், பங்ளாஸும் பாதிரிகள்போல புனித உடலங்கிகளும், காகித முடிகளும் அணிவிக்கப் பெற்றார்கள். கேண்டிட் உடலங்கியிலும், காகித முடியிலும், தலைகீழான தீ நாக்குகளும், வாலும், நகங்களுமில்லாத பேய்களும் சித்திரமாக வரையப்பட்டிருந்தன! பங்ளாஸ் உடையிலும், முடியிலும் நேரான தீ நாக்குகளும் வாலும், நகங்களுமுடைய பேயுருவங்களும் எழுதப்பட்டன. எல்லோரும் ஊர்வலமாக வீதி வீதியாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். மக்கள் சூழ நின்றிருந்தார்கள். வழியெல்லாம் பலியாக்கப்படுவோர் முன்னே இசை முழங்கிச் சென்றது. அந்த இசைக்கேற்ப, கேண்டிட் கசையடிகளைப் பெற்றான்! பலி அளிப்பு இடத்தை நெருங்கினார்கள்.

கேண்டிட் கசையடிப்பட்டு, இரத்தம் கசிந்த உடலுடன்நின்றிருந்தான். **பாஸ்க்** மகனும், இரண்டு போர்ச்சுகல் யூதர்களும் தீயில் கொளுத்தப்பட்டார்கள். பின்பு வழக்கத்திற்கு மாறாக, பங்ளாஸ் தூக்கிலிடப்பட்டார். அதைக் கண்ட கேண்டிட், "ஆ! பங்ளாஸ்!" என்று கதறி அழுது, "இருக்கின்றவைகளில் நல்லதான இந்த உலகமே இப்படி இருந்தால், மற்ற உலகங்கள் எப்படி இருக்குமோ? கசையடிக்காக நான் கவலைப்படவில்லை; காரணம்; நான் புள்கேரியர்களிடமே கசையடி வாங்கிப் பழகிவிட்டேனே! என் பங்ளாஸ், பேராசிரியர், தத்துவ ஞானி, தூக்கில் தொங்குவதை நான் எப்படிக் கண்டு சகிப்பேன்! இதற்கென்ன காரணம்? என் அன்புக் களஞ்சியம், மாதர் திலகம், கியுன்காண்ட் மரணமும், கருணைக் கடல் ஜேம்ஸின் வீழ்ச்சியும், இந்த உலகத்தில் அவசியம், இன்றியமையாதபடி நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளா? ஆம் என்றால், இந்த உலகம், துன்ப உலகம்தான்" என்று தனக்குத்தானே எண்ணிக்கொண்டிருந்த வேளை தன் மீது பலமாக பல முறை சவுக்கடிகள் வீழ்ந்தன. கேண்டிட் நீண்ட நேரம் உபதேசம் செய்யப்பட்டான்; கசையடி கொடுக்கப்பட்டான்; மன்னிக்கப்பட்டான்; ஆசீர்வதிக்கப்பட்டான்! பின்பு தள்ளாடிக் கீழே விழுந்து உருண்டு செல்ல ஆரம்பித்த நேரத்தில் ஒரு மாது அவனை நெருங்கி, "இளைஞனே, உள்ளத்திலே உரம் பெறு! என்னைத் தொடர்ந்து வா!" என்று மெல்லிய குரலில் கூறினாள்!

(தொடரும்)


புதிய வெளியீடு!

A. V. P. ஆசைத்தம்பி அவர்களின்

கருத்துக் களஞ்சியம்

# சிலந்திக்கூடு

பக்கம் 112 — மூவர்ண முகப்பு — விலை ரூ. 1—0—0

— வியாபாரிகளுக்கு கழிவு உண்டு —

விபரங்களுக்கு

| | |
|---|---|
| கலைமன்றம் | M.S. ராமுலு கம்பெனி |
| P. B. No. 275 | 286, சைனா பஜார், |
| சென்னை-1 | சென்னை-1 |

# சொர்க்கவாசல்

## சிறப்பு மலர்

★ நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி தன் வாழ்க்கையில் நடந்த மறக்கமுடியாத சம்பவங்களை எழுதியிருக்கிறார்.

★ கவிஞர் கண்ணதாசன் 'சொர்க்கவாசல்--ஒரு புரட்சிக் காவியம்' என்னும் தலைப்பில் ஒரு சிறு காவியமே எழுதியிருக்கிறார்.

★ அறிஞர் அண்ணா, கே. ஆர். ராமசாமி, உடுமலை நாராயணகவி, காசிலிங்கம், காளியப்பா, ராமச்சந்திரன், பத்மினி, அஞ்சலி- இன்னும் பலரின் வாழ்க்கைக் குறிப்புகள் படங்களுடன் இடம் பெறுகின்றன.

★ தலைவர்கள், பேரறிஞர்கள், நடிகர்கள், கவிஞர்கள் இன்னும் கலையார்வமுள்ள அனைவரும் எழுதுகின்றனர்.

★ 'சொர்க்கவாசல்' உருவானதைப் பற்றிய குறிப்புகள், சுவையான நிகழ்ச்சிகள், படத்தைப்பற்றி பத்திரிகைகளின் கருத்துரைகள் இன்னும் பல இடம் பெறுகின்றன.

★ ஏராளமான படங்கள் மலரை அழகு செய்கின்றன.

அழகான - கண்கவரும் மூவர்ண முகப்பு. முழுவதும் கிளேஸ் தாள்.

**48 பக்கங்கள் - விலை அணா எட்டு**

எல்லா ஏஜெண்டுகளும், வியாபாரிகளும் தேவைக்கு எழுதவும்!

பிரதிகள் வி. பி. பி. மூலம்தான் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்குக் குறையாமல் எழுதவேண்டும்.

விவரங்களுக்கு:

# கலைமன்றம்

த. பெ. எண் 275, சென்னை-1.

# இத்தாலி

தென் ஐரோப்பாவின் மத்தியிலுள்ள தீபகற்பம் இத்தாலி எனப்படும். இது கிழக்கே ஏட்ரியாடிக் கடலாலும், மேற்கே டிரீனியன் கடலாலும், தெற்கே மத்தியதரைக் கடலாலும் வடக்கே ஆல்ப்ஸ் மலைத் தொடர்களாலும் சூழப் பட்டுள்ளது. ஆலப்ஸ் கணவாய்களான மான்ட் செனி, செயின் காடர்டு, சிம்ப்லான், செயின்ட் பெர்னார்டு ஆகியவைகள், இத்தாலியின் மீது அன்னிய நாட்டார் படையெடுக்க எளிதாக இருந்தது.

பரப்பளவு:— இத்தாலி 1,19,710 சதுர மைல் விஸ்தீரண முள்ளது. இதன் நீளம் 700 மைல். அகலம் 150 மைல்.

இயற்கைப் பகுதிகள்:- இத்தாலியை வடக்கேயுள்ள ஆலபஸ்பகுதி, போநதி பாயும பிரதேசம், அபபினைன் மலைகள் என மூன்று இயற்கைப் பகுதிகளாகப் பிரிக்கலாம். ஆல்ப்ஸ் பகுதி செங்குத்தாக மிக உயரமாக இருக்கிறது. சராசரி உயரம் சுமார் 10,000 அடி. இங்குள்ள பிளாங்க் சிகரம் 15,780 அடி உயர முள்ளது. போநதி பாயும் பிரதேசத்தில் முன்பு ஏட்ரியாடிக் கடல் வியாபித்திருந்தது. சுற்றுப்புற மலைகளிலிருந்து வந்த மண் பிற்காலத்தில் இவ்விடத்தை நிரப்பி சம பூமியாக்கியது. அபபினைன் மலைகள் வடக்கே டிரீனியன் கடலருகே ஆரம்பித்து, தீப கற்பத்தின் இடைப்பகுதியில் ஏடடிரியாடிக் கடலருகே வந்து திரும்பவும் தென்பகுதியிலுள்ள டிரீனியன் கடல் பக்கம் வந்து முடிகிறது. ஆர்னோ, டைபர் என்னும் ஆறுகள் இங்கே உற்பத்தியாகிறது.

தட்ப வெப்பம்:— இந் நாட்டின் தென் பகுதியில் மத்தியதரைத் தட்ப வெப்பம் காணப்படுகிறது. கோடையில் வெப்ப நிலை 75 டிகிரி பாரன் ஹீட். குளிர்காலததில் வெப்ப நிலை 40 முதல் 45 டிகிரி பாரன் ஹீட் வரையுள்ளது. இங்கு குளிர்காலத்தில் தான் மழை அதிகம். மழை சரா சரி 30 அங்குலம் பெய்கிறது. வட பகுதியில் மத்திய ஐரோப்பியத் தட்ப வெட்பம் காணப் படுகிறது. இங்கு கோடையில் வெப்ப நிலை 75 டிகிரி பாரன் ஹீட். குளிர் காலத்தில் 35 டிகிரி பாரன் ஹீட். 40 முதல் 60 அங்குல சராசரி மழை பெரும்பாலும் கோடைகாலத்தில் பெய்கிறது.

மக்கள் தொகை:— 1951-ம் வருடத்திய கணக்குப்படி மக்கள் 467 இலட்சம். போ சமவெளியில் ஜன நெருக்கம் அதிகம். ஒரு சதுர மைலுக்கு 650 பேர் வசிக்கின்றனர். மக்களில் 97 சத வீதம் கத்தோலிக்கர். மீதி 3 சத வீதம் யூதர்களும், புரோட்டஸ்டான்டுகளும்.

விவசாயம்:- மொத்தம் உழுது பயிர் செய்யப்படும் நிலங்கள், 766 இலட்சம் ஏக்கர். இதில் 91.3 சதவீதம் உற்பத்திக்குரிய நிலமாகவும், மற்றவை காடுகளாகவும் இருக்கிறது. சாகுபடி நிலத்தில் தானியப் பயிர் 55.7 சத வீதமும்; தீவனப் பயிர் 32.5 சத வீதமும்; பருப்பினத்தைச் சேர்ந்த தாவரம் 6.5 சதவீதமும்; கைத்தொழிலுக்கு வேண்டிய விளை பொருள் 2 சதவீதமும்; பீட் கிழங்கு 1.5 சத வீதமும் பயிராக்கப் படுகிறது.

| விளைபொருட்கள் | — | விளையும்நிலப் பரப்பு (1000 ஏக்கர்களில்) |
| --- | --- | --- |
| கோதுமை | — | 11,649 |
| ரை | — | 212 |
| அரிசி | — | 354 |
| ஓட்ஸ் | — | 1,168 |
| உருளைக்கிழங்கு | — | 946 |
| மக்காச்சோளம் | — | 3,065 |



வெஸுவியஸ் மலையின் அடிவாரத்தில் நேப்பிள்ஸ் நகரின் தோற்றம்

உணவு தானியத்தில் கோதுமை மிக முக்கியமானது. கோதுமை நாட்டுக்குத் தேவையான அளவு விளையாததால் மூன்றிலொரு பங்கு வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியாகிறது. போ சமவெளியும், முகத்துவாரமும் நெல் பயிராகுவதற்கு ஏற்ற இடம். ஒலிவ வித்துக்களும் திராட்சையும் இத்தாலியில் ஏராளமாக விளையும் பொருள்களாகும். ஒலிவ எண்ணெய் உற்பத்தியிலும், மது உற்பத்தியிலும் இத்தாலி உலகில் இரண்டாவது இடம் வகிக்கிறது. ஆளியும், சணலும் வட இத்தாலியில் சிறிது விளைகின்றன.

ஆடுமாடுகள்:— இத்தாலியிலுள்ள 74 இலட்சம் மாடுகளில் பெரும்பான்மை வடக்கேயுள்ள ஆற்றங்கரைகளை அடுத்த புல்வெளிப்பிரதேசங்களில்காணப்படுகின்றனபால்பண்ணைத் தொழில் இங்கு நன்கு நடைபெறுகிறது. ஆடுகள் அப்பினைனச் சேர்ந்த வளங்குறைந்த பிரதேசங்களில் காணப்படுகின்றன. 123 இலட்சம் செம்மறியாடுகளும், 310 இலட்சம் வெள்ளாடுகளும் இங்கு உள்ளன. வடக்கே பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழில் நடைபெறுகிறது. பட்டு உற்பத்தியில் இத்தாலி ஐரோப்பாவில் முதலாகவும், உலகில் மூன்றுவதாகவும் இருக்கிறது.

தாதுப் பொருள்கள்:— இரும்பு. காரீயம், வெள்ளீயம், பாதரசம் ஆகியவை டஸ்கனியில் கிடைக்கின்றன. போ நதி சம வெளியில் மதிப்பில் குறைந்த ரக இரும்புத் தாது மண் கிடைக்கிறது. இங்கு நிலக்கரி யின்மையால் கைத்லொழில்கள் தடைபட்டிருக்கிறது. மின்சாரத்தின் உதவியால் சில கைத் தொழில்கள் நடைபெறுகிறது. கிடைக்கக் கூடிய 80 இலட்சம் குதிரைத் திறன் நீர்ச் சக்தியில் 30 இலட்சம் பயன் படுகிறது.

கைத் தொழில்:— வட இத்தாலி தான் நாட்டின் கைத் தொழிலில் கேந்திரஸ்தானம் வகிக்கிறது. பட்டு, கம்பளம், பருத்தி நூல் உற்பத்தி முதலியவைகளே முக்கியக் கைத் தொழிலாகும். 196 டன் பட்டும், 2, 08, 500 டன் பஞ்சு நூலும், 1,44,250 டன் நூல் துணியும், 45,000 டன் கம்பளித் துணியும் உற்பத்தியாகின்றன. கைத் தொழிலுக்கு வேண்டிய பட்டு முழுவதும் நாட்டிலேயே கிடைக்கிறது. கச்சாக்கம்பளமும், பருத்தியும் இறக்குமதி செய்யப் படுகின்றன. கோமோ, மிலான், பெர்காமோ நகரங்கள் பட்டுத் தொழிலிலும், டூரின் நகரம் பருத்தி நெசவிலும் ஈடுபடடவை. இந்த 10 இலட்சம் டன் இரும்பும், 25 இலட்சம் டன் எஃகும் உற்பத்தியாகின்றன. டூரின் மோட்டார்களுக்கும், மிலான் டயர்களுக்கும், ஜெனோவா கப்பல்கட்டும் தொழிலுக்கும் பேர் போனவை.

போக்கு வரத்து:— வட இத்தாலியில் சாலைகளும், ரெயில்வேக்களும் அதிகம். வடக்கே யுள்ள ரெயில்வேக்கள் மிலானிலும், பொலோனாவிலும் வந்து சேர்ந்து, அங்கிருந்து ஆல்ப்ஸ் கணவாயின் வழியாக செல்லுகின்றன. தெற்கே கடற்கரையையடுத்து மின்சார ரெயில் வேக்களே முக்கியமாயிருக்கின்றன. சாலைகளின் மொத்த நீளம் 1,07,300 மைல். ரெயில்வேக்கள் 13,500 மைல்.

வர்த்தகம்:— ஏற்றுமதியை விட இறக்குமதியே அதிகம். கோதுமையும், நிலக்கரியும் பெரும்பாலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்தும், கோதுமை அர்ஜென்டினாவிலிருந்தும் இறக்குமதியாகின்றன. ஐரோப்பாவிலிருந்து மற்றத் தேவைப் பொருளகள் இறக்குமதியாகிறது. கச்சாப் பட்டும்,



பனியில் உறங்கும் இயற்கை

போலிப்பட்டும், நூல் துணிகளும் மிகுதியாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

முக்கியமான நகரங்கள்:— ரோம், மிலான், நேப்பிள்ஸ், டூரின், ஜெனோவா, பாலெர்மோ முதலியவை இத்தாலியின் முக்கிய நகரங்கள். 1951-ம் வருடத்திய ஜனக் கணக்குப்படி ரோமில் 16,95,477-பேரும் மிலானில் 12,92,934-பேரும், நேப்பிள்ஸில் 10,27,800 பேரும், டூரினில் 7,20,032 பேரும், ஜெனோவாவில் 6,83,023 பேரும், பாலர்மோவில் 5,01,005 பேரும் உள்ளனர்.

வரலாறு:— ரோமானிய சாம்ராச்சியம் அழிவுற்றதிலிருந்து இத்தாலியின் வரலாறு தொடங்குகிறது. 5-ம் நூற்றாண்டில் இத்தாலி ஜெர்மானியிலிருந்து வந்த மிலேச்சர்களால் பலமாகத் தாக்கப் பட்டது. கி. பி 410-ல் அலாரிக் (Alaric)அரசனும், 455-ல் வாண்டல்கள் (Van lals) என்னும் கூட்டத்தாரும் ரோம்நகரை கொள்ளையடித்தனர். 476-ல் ஜெர்மானிய வீரன் ஓடவேசரின் ( )dovacer) தாக்குதலுக்கு ஆற்றாது, ரோமானியச் சக்கரவர்த்தி ராம்யலஸ் அகஸ்டஸ் அரசு துறந்தான். இதனுடன் பழைய ரோமானிய சாம்ராச்சியம் மறைந்தது. 493-ல் கிழக்குக் காத்தியர்களின் தலைவன் தியோடேரிக், ஓடவேசரைச் சண்டையில் தோற்கடித்து ராவென்னாவைக் கைப்பற்றினான். இவன் 526 வரை பைசாண்டியச் (கிழக்கு ரோமனிய) சக்கரவர்த்தியின் சம்மதம் பெற்ற அரசன் என்ற பட்டம் தாங்கி, இத்தாலியை ஆண்டான். இவன் ஆட்சியின் கீழ் இத்தாலி சிறிதளவு ஒற்றுமையையும் அமைதியையும் அடைந்தது. இவன் இறந்த பிறகு கிழக்கு ரோமானிய சக்கரவர்த்திகள் இத்தாலியைக் கைப்பற்ற முயன்றனர். அதனால் இத்தாலியின் அமைதி குலைந்தது. கிழக்குச் சக்கரவர்த்தி 1-ம் ஜஸ்டினியனின் தளபதிகளான பெலிசேரியஸ௲ம், நர்செஸ௲ம் பல ஆண்டுகள் காத்தியர்களுடன் போர் புரிந்து இத்தாலியைக் கைப்பற்றினார்கள். ஜஸ்டியனின் பிரதிநிதி ராவன்னாவிலிருந்து இத்தாலியை ஆண்டுவந்தான், ஆனால் காத்தியர்கள் பன்முறை ரோமைத் தாக்கி அந்நகரைப் பாழ்படுத்தினர். அதன் பிறகு லாம்பார்டுகளின் மிகப்பயங்கரமான படையெடுப்பு நடை பெற்றது. லாம்பார்டு தலைவன் ஆல்பாயின், வட இத்தாலிமீது படை யெடுத்து 568-ல்லாம்பர்டு ஆட்சியை நிறுவினான். ஆனால் இவனால் இத்தாலி முழுவதும் கைப்பற்ற முடியவில்லை. ரோமும், ராவன்னாவும், தென் இத்தாலியும், சிசிலியும், பைசாண்டி சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன. ஆனால் ராவன்னா 751-ல் லாம்பர்டு ஆட்சியின் கீழ் வந்தது. லாம்பர்டு அரசர்கள் பாவியா என்னும் நகரத்திலிருந்து இரும்பு முடி தாங்கி, இரண்டு நூற்றாண்டுகள் வட இத்தாலியில் ஆட்சி புரிந்து வந்தனர்.

8-ம் நூற்றாண்டில் நேப்பிள்ஸ் ஒரு தனி நாடாயிற்று. ரோமும் போப்பின் தலைமையின் கீழ் தனி குடியரசு நாடாயிற்று. லம்பார்டுகள ரோமைத் தாக்கிய போது மதத் தலைவர் போப்பே அதை சமாளிக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு ரோமின் முடிதரிக்கா அரசராக விளங்கியவர் 1-ம் கிரொகரி ஆவர். இவர் ரோம் நகரில் அமைதியை நிலை நாட்டி மக்களுக்குத் தைரியம் கூறி வந்தார். கிரொகரிக்குப் பின்வந்த போப்புகள் பிரான்க் (Frank) அரசர்களின் உதவியை நாடியதால், பெபினும், அவனது மகன் சார்லமேனும் இத்தாலி மீது படையெடுத்தார்கள். 754-ல் பெபின் ராவன்னாவைக் கைப்பற்றி போப்புக்

[13-ம் பக்கம் பார்க்க]



ஏடரியாடிக் கடலில் சிறுவன் ஓட்டும் சிறு கப்பல்

# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ் ... ஆசிரியர்: பால்வண்ணன்

சென்னை — 12—6 54 — சனி


## வாருங்கள்

## வேலைமாநகர் நோக்கி!

இம் மாதம் 19, 20-ஆம் நாட்களில் நடைபெறவிருக்கும் வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டிற்கு வாருங்கள் தோழர்களே வாருங்கள்!!

வேலைமாநகரில் நடைபெறவிருக்கும் நமது முதல் நாள் மாநாட்டிற்கு பல ஆண்டுகளாக எழுத்தின் மூலம்—பேச்சின் மூலம் திராவிடத்திற்கு உண்மையான பணிபுரிந்த உண்மை வீரர் தோழர் ஈழத்து சிவானந்த அடிகள் அவர்கள் தலைமை தாங்குகின்றார். புயல்வேகத்தில்பேசும்போதும்கூட இலக்கியமணம் கமழப் பேசி இந்நாட்டு மக்களின் உள்ளத்தில் நல்லெண்ணங்களையும்—சீரிய கருத்துக்களையும் உண்டாக்கும் ஆற்றல் படைத்த தோழர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைக்கின்றார் சமூக சீர்திருத்த மாநாட்டை.

பிரான்சு நாடு தந்த பேரறிஞன் வால்டையரைப் போல் நையாண்டி செய்வதன்மூலமும், நகைச் சுவை உண்டாக்குவதன்மூலமும் இந்த நாட்டின் அறியாமை இருளை அகற்றிடும் விளக்கொளியான நண்பர் நெடுஞ்செழியன் அவர்களின் வீர முழக்கத்தை கேட்க வாரீர்.

ஈரோட்டு சிங்கம், இணையிலா பேச்சாளர் என்று எதிர்க் கட்சியினரும் பாராட்டும் அளவுக்கு உயர்ந்த முறையில் சிறந்த வகையில் அரசியல் ஊழல்களை அம்பலப்படுத்திக் காட்டும் ஆற்றல் மிக்க நாவன்மை படைத்த நல்லறிவாளர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் "ஐரோப்பாவின் மறுமலர்ச்சி" என்றதலைப்பில் உரை நிகழ்த்தி திராவிடத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கப் போகிறார். இன்னும் தோழர்கள் அ. பொன்னம்பலனார், பாட்டு மொழி பேசும் கவிஞர் கண்ணதாசன், கலைஞர் மு. கருணாநிதி, என். வி. நடராஜன், பேராசிரியர் க. அன்பழகன், இளம் வழுதி முதலிய தோழர்களின் அரிய சொற்பொழிவை கேட்டிட வாரீர்.

மாணவர் தலைவர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் இரண்டாம் நாள் நடைபெறும் அரசியல் [illegible]ாட்டுத் தலைவராகவும், தோழர் நாஞ்சில் கி. மனோ[illegible]ன் அவர்கள் திறப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர் தம் அறிவு விருந்தை உண்ண வாரீர்.

மேலும் இம் மாநாட்டில் தூத்துக்குடி தோழர்கள் சிறையில் பல நாள் அடைபட்டு இன்று ஜாமீனில் வெளி வந்திருக்கும் நமது இலட்சிய வீரர்களான—மலை குலைந்தாலும் மனம் குலையாத மாவீரர்களான—கே. வி. கே. சாமி, சங்கப்பழம், நடராஜன், சிவசாமி முதலியவர்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

திராவிடத்தின் இணையற்ற கலைஞர்களான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நடிப்புச் செல்வர் எஸ் எஸ். ரஜேந்திரன், இசைஞர் நாகூர் அனிபா குழுவினர் முதலியோர் கலந்து கொள்ளுகின்றனர்.

மேலும் நமது இயக்கத்தின் உயிர் நாடியான அறிஞர் அண்ணா அவர்களும், இன்னும் பல தோழர்களும் கலந்து கொள்கின்றனர்.

தோழர்களே! வேலைமாநகர் மாநாடு நமது அறப் போராட்ட வெற்றி விழாவுக்குப் பின்னர் நடைபெறுகிறது. வெற்றிப் போதையில் நாம மகிழ்ந்திருக்கும நேரத்தில் 'வருக, வருக' என்று அழைக்கிறது. அடுத்தப் போராட்டம் எது? திராவிடம் பிரிய என்ன என்ன, நல்ல அறப் போராட்டங்களைத் தீட்ட வேண்டும் என்ற பல பயனுள்ள திட்டங்களை வகுக்க இருக்கும் வேலை மாநகருக்கு வாருங்கள்! வாருங்கள்!

மாணவ மணிகளே வாருங்கள்! மாதர் குல மணிகளே வாருங்கள்! நாட்டின் நலம் விரும்பும் நல்லவர்களே! வாருங்கள். "நமது நாட்டை நாமே அடைவோம். திராவிட நாடு திராவிடருக்கே" என்ற கோஷம் எழுப்பிய வண்ணம் வாருங்கள் வேலைமாநகர் நோக்கி!


காதல் பூங்காவிலே புகுந்து பறித்த மணமலர்

**ரோமியோ - ஜுலியத்**

**விலை ரூ. 1—0—0**

இந்நூலைப் பற்றி —

ரோமியோ ஜுலியத் மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய அவலச் சுவை நாடகங்களில் சிறப்புடைய தொன்று அந்நாடகக் கதையை அப்படியே வைத்துக் கொண்டு ஆசிரியர் 'ஊடு நவி' சுவையுள்ளதொரு கதையை எழுதியிருக்கிறார். மூலத்திலிருந்து சிறிதும் பிறழாதிருப்பதும் கதையில், வேகம், உணர்ச்சி, எழுச்சி, நெகிழ்ச்சி, யாவும் நன்கமைந்துள்ளன. இனிய தமிழ் நடை, காதல் கதையானாலும் விரசம் யாதும் இல்லை. அனைவரும் படிக்கலாம்.

—சுதேசமித்திரன்—19 5-52

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

விபரங்களுக்கு :

கலைமன்றம்

P. B. No. 275 சென்னை-1

## இத்தாலி

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

களித்தான். 774-ல் சார்லமேன் லம்பார்டுகளை அழித்து, ரோம், ராவன்னாவிலும் போப் ஆட்சியை நிலை நிறுத்தினான். சார்லமேன் 800-ல் கிறிஸ்துமஸின் போது புனித ரோமானிய சக்கரவர்த்தி என முடி சூட்டிக்கொண்டான் போப் 3-ம் லியோவால். சார்லமேனுக்குப் பிறகு அவனுடைய சாம்ராச்சியம் சிதறுண்டு போயிற்று.

877-ல் முகமதியர்கள் பலம் பெற்று சிசிலியைக் கைப்பற்றினர். மாகியர்கள் வடக்கே படையெடுத்து நாட்டைப் பாழ் படுத்தினர். இந்நேரத்தில் 962-ல் ஜெர்மானிய அரசனை 1-ம் ஆட்டோ, வட இத்தாலியைக் கைப்பற்றி, அமைதியை நிலைநாட்டினான். ஆட்டோவும் அவனது சந்ததியார்களும் தங்களை இத்தாலியின் சக்கரவர்த்திகள் என்று கூறிக்கொண்ட போதிலும் இவர்களால் தென் இத்தாலியைக் கைப் பற்ற முடியவில்லை.

11-ம் நூற்றாண்டில் ராபர்ட் கிஸ்மார் தலைமையில் நார்மானியர்கள் இத்தாலியைக் கைப்பற்றினர். இவர்கள் பாலெர்மாவைத் தலைநகராகக்கொண்டு அரசு செலுத்தினர். இந்த நூற்றாண்டில் போப், சக்கரவர்த்தி இருவருள் யார் பெரியவர் என்பது பற்றி, போப் 7-ம் கிரொகரிக்கும், 4-ம் ஹென்றிக்கும் சண்டை ஏற்பட்டு 1077-ல் ஹென்றி சரணாகதியடைந்தான். ஆனால் 1084-ல் இவன் ஒரு சேனையைத் திரட்டி ரோமைத் தாக்கினான். போப் நார்மானியர்களால் காப்பாற்றப் பட்டார். சக்கரவர்த்தி 5-ம் ஹென்றியும், போப் 2-காலிகஸ்டசும் செய்து கொண்ட வர்ம்ஸ் (Worms) உடன்படிக்கைப்படி இச்சண்டை 1122-ல் முடிவடைந்தது.

11-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வெனி, பீசா, ஜெனேவா, மிலான் போன்ற நகரங்கள் படைமானியப் பிரபுக்களாலும், பிஷப்புக்களாலும் ஆட்சி செய்து வரப்பட்டாலும் அந்நூற்றாண்டின் இறுதியில் அந் நகரங்கள் தத்தம் மக்களாலேயே ஆளப்பட்டு வந்தது. 12-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நகரங்கள் நகர சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கான்சல்கள் (Consuls) என்ற கவர்னர்களால் ஆளப்பட்டு வந்தன. டஸ்கனியில் 1115-ல் பானிபேஸ் பிரபுவின் மகளான மாடில்டாவின் ஆதிக்கம் மறைந்த பிறகு பிளாரன்ஸ் நகரத்தில்குடியரசு ஏற்பட்டது. காமோ, லோடி போன்ற நகரங்கள் தங்கள பக்கங்களிலுள்ள நாட்டைக் கைப்பற்றுவதிலும் படைமானியப் பிரபுக்களை முறியடிப்பதிலும் முயன்றிருந்தனர். இதனால் பெரிய குழப்பம் ஏற்பட்டு, குவெல்ப், கிபலின் என்னும் கட்சிகள் தோன்றின. பலநகரங்கள் ரோமானிய சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டாலும் பொருளாதார விஷயங்களில் சுதந்தரமாகவே நடந்தன. ஆனால் மிலான், சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தையே எதிர்த்தது. இதை விரும்பாத சக்கரவர்த்தி பிரெடரிக் பார்பராசா (Frederick Barbarossa) மிலான் மீது படையெடுத்து அந்நகரின் ஒரு பகுதியை எரித்தான். இதனால் 1167-ல் வட இத்தாலியின் வியாபார நகரங்கள் தம் உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு ஒன்று கூடி லாம்பார்டு சங்கத்தை நிறுவின. போப்பிற்கும் சக்கரவர்த்திக்கும் நடந்த சண்டையில் இந்த சங்கம் போப் பக்கம் சார்ந்து கொண்டு 1176-ல் லக்னேனே என்னுமிடத்தில் சக்கரவர்த்தியின் சேனையை முறியடித்தது. கான்ஸ்டன்ஸ் உடன்படிக்கையின்படி இந்நகரங்கள் பூர்ண சுதந்திரமடைந்தன. இதன் பிறகு எல்லா நகரங்களும் முன்னேற்ற மடைந்தன.

12-ம் நூற்றாண்டின் இறுதியில் நார்மானியர்களின் இராச்சியம் புனித ரோமானிய இராசசியத்தோடு இணைந்தது. பார்ப்பராசாவின் மகன் ஹென்றி, நார்மன் இளவரசியாகிய கான்ஸடன்ஸ் என்பவளை மணந்து, 1194-ல் சிசிலியின் அரசனை முடி சூட்டி, 1195-ல்



மீன் பிடித்து கூடைகளில் சேகரித்தல்

பிரெடரிக் என்னும்குழந்தையை நாட்டுக்கு அளித்து விட்டு இறந்தான். பிற்காலத்தில் 1218-ல் 4-ம் ஆட்டோ இறந்த பிறகு இவன் 2-ம் பிரெடரிக் என்னும் பெயருடன் பட்டத்துக்கு வந்தான். இவன் போப் 3-ம் இன்னோஸென்டுடன சண்டையிட்டு இறந்தான். இதன் பிறகு மான் பிரெடு சிசிலியின் அரசனுனான். 1265-ல் ஆஞ்சுவின் இளவரசனுனசார்லஸ், போப் 4-ம் கிளமென்டின் உதவிக்கு வந்து மான் பிரெடை பெனவென்டோவில் தோற்கடித்து சிசிலியின் சிங்காதன மேறினுன். பிரெடரிக்கின் பேரன் சிசிலியை மீட்க முயன்று நேப்பிள்ஸில் சிரச் சேதம் செய்யப் பட்டான். தான் இழைத்தக் கொடுமைகளால் சார்லஸ் சிசிலியர்களால் வெறுக்கப் பட்டான். ஒரு சமயம் ஒரு பிரஞ்சு போர் வீரன ஒரு சிசிலிய மணப் பெண்ணுக்கு இழைத்தத் தீங்கின் காரணமாக பாலெர்மா நகர மாந்தர்கள் கலகம் செய்து, பிரெஞ்சு மக்களையும், போர் வீரர்களையும் கொலை செய்தனர். இக்கலகம் சிசிலி முழுவதும் பரவி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தை ஒழித்தது. இதன் பின் சிசிலியர்கள் ஆரகன் அரசன் 3-ம் பீற்றரை அழைத்து அரசராக்கிக் கொண்டார்கள். இதனுல் பழைய நார்மன் அரசு இரண்டாகப் பிரிந்து தொடர்ந்து யுத்தம் நடந்து கொண்டே யிருந்தது. கான்ராடின் மரணத்தோடு போப்—சக்கரவர்த்தி சச்சரவு முடிவடைந்தது. 1296-ல் 4-ம் பிலிப்புக்கும் 8-ம் பொனிபாஸுக்கும் பாதரிமார்களின் வரி விதித்தலைப் பற்றி சச்சரவு ஏற்பட்டது. பிலிப்பின் நண்பர்கள் போப்பை அடித்துத் துன்புறுத்தியதால், வயது முதிர்ந்த அவர் இறந்தார். இதன் பிறகு போப்புகள் ரோமை விட்டு பிரஞ்சு நாட்டிற்கு அருகிலுள்ள ஆவீன்யான் என்னும் ஊரில் வந்து தங்கினுர்கள். இது பாபிலோனிய சிறைவாசம் என்று அழைக்கப் பட்டது. இதனுல் புனித ரோமானிய சாம்ராச்சியம் 1313-ல் மறைந்தது. இது சமயம் ரோமானிய சாம்ராச்சியத்தின் ஆதிக்கத்தை நாடு முழுவதும் பரப்ப எண்ணங்கொண்டு இத்தாலி மீது படையெடுத்த ஏழாம் ஹென்றி ரோமிலிருந்து நேபிள்ஸுக்குப் போகையில் இறந்தார். இதன் பிறகு இத்தாலி தம்மை இங்கிலாந்தையும் பிரான்ஸையும் போல சுதந்தர நாடாக பாவித்து வந்தது. இதனுல் குவெல்ப், கிபலின் கட்சிகள ஒரு பொருளுமில்லாமல் போய் விட்டது. போப், ஆவீன்யானிற்குச் சென்ற பிறகு, ரோமில் அமைதியின்றி கலகமும் கொள்ளையும் நடந்தது. இதைக்கண்ட கோலாடிரியன்ஸி என்ற இளைஞன் 1347-ல் புரட்சி செய்து, இத்தாலி முழுவதற்கும் ஓர் அரசாட்சியை உண்டாக்கி, ரோமை தலைநகராக்கினுன். 1354-ல் எதிரிகள கலகம் செய்து இவனைக் கொன்ருர்கள். இதன் பிறகு போப்பை ரோமுக்குக் கொண்டு வந்தால்தான் நாட்டில் அமைதி ஏற்படுமென்று அறிந்து காதரின் என்ற ஒரு பாதிரி அம்மையார் 1376-ல் போப்பைக் கண்டு ரோமுவுக்கு அழைக்க, 1377-ல் போப் 11-ம் கிரொகரி ரோமுக்குத் திரும்பினுர். இத்துடன் பாபிலோனிய சிறைவாசம் முடிவடைந்தது. 1378-ல் இரண்டு போப்புகள் தேர்ந்தெடுக்கப் பட்டதால் கிருஸ்துவ சமுதாயத்தில் பெரும் பிளவு ஏற்பட்டது. நாளடைவில் கட்சி சண்டைகளாலும் அடிக்கடி அதிகாரிகள் மாறியதாலும் மக்கள் வெறுப்புற்றனர்.

இந்த சமயத்தில் பணக்கார வியாபாரக் குடும்பத்தினர் தத்தம் நகரத்தை தாமே ஆள விரும்பினுர்கள். இவர்களை பலர் பின் பற்றவே, ஆண்டு தோறும் இவர்களே அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாளடைவில் இவர்கள் தேர்ந்தெடுக்காமல் பரம்பரையாக ஆட்சி செய்யத் தொடங்கினர். இவர்களில் முக்கியமானவர்கள் மிலானை ஆண்டு வந்த வீஸ்கான்டீ (Visconti) வமிசத்தினர். இதே போல் வெரோனுவில் ஸ்கேலா வமிசத்தினரும், பெர்ராராவில் எஸ்டென்ஸி (Estens) வமிசத்தினரும், மான்டுவாவில் கோன்சகா வமிசத்தினரும், பலெளன் யாவில் பெபோலிகளும், பிளாரென்ஸில் முதலில் அல்விஸ்ஸிகளும் பிறகு மெடிச்சிகளும் ஆண்டார்கள். இவர்கள் காண்டாட்டியெரி (Condottiere) என்ற பெயர் கொண்ட கூலிப்படைத் தலைவர்களின் உதவியினுல் மிக்க சக்தி வாய்ந்தவர்களாய் வரம்பில்லா ஆட்சி நடத்தி வந்தனர்.

—அடுத்த இதழில் முடியும்.



டைபர் நதியோர எழிற் காட்சி

# இலக்கணப் பகுதி

பாவலர் - வேலாயுதசாமி

## பாடம் 4.

சென்ற பாடத்தில் நிலைமொழி யீற்றிலுள்ள லகர வொற்று, வருமொழி முதலிலுள்ள தகர வினத்தோடு புணரும்போது உண்டாகும் மாறுதல்களைப் பற்றி விளக்கினேம்.

இப்பாடத்தில் நிலைமொழி யீற்றிலுள்ள லகர வொற்று, வருமொழி முதலிலுள்ள தகர வினத்தோடு புணருங்கால் முற்கூறிய படியே சில விகாரங்களை யடைகின்றன வென்பதை உதாரணத்துடன் விவரிப்போம்.

நிலைமொழி யீற்றில் தனிக்குறிலடுத்து வரும் ல் என்னும் மெய்யெழுத்தானது, வருமொழி முதலிலுள்ள தகர வினத்தின் எழுத்துக்களோடு புணரும்போது லகர வொற்று றகர வொற்றாக மாறுவதன்றி வருமொழி முதலிலுள்ள தகர உயிர்மெய் யெழுத்துக்களையும் தன்னினமாக மாற்றி விடுகிறது.

உதாரணம் :— நிலைமொழி யீற்றில் தனிக்குறிலடுத்து ல் என்னும் மெய்யெழுத்துள்ள மொழி கல், வருமொழி முதலில் த என்னும் உயிர்மெய் யெழுத்துள்ள மொழி தரை இவ்விரண்டு மொழிகளும் புணரும் போது,

கல் + தரை = கற்றரை என்றாகிறது. இதில்,

கல் என்பதிலுள்ள ல், ற் ஆகவும், தரை என்பதிலுள்ள த, ற ஆகவும் மாறியுள்ளதை யறிக. இவ்வாறே,

நிலைமொழி யீற்றில், இணைக்குறி லடுத்து ல் என்னும் மெய்யெழுத்துள்ள மொழி முதல் வருமொழி முதலில் தி என்னும் உயிர்மெய் யெழுத்துள்ள மொழி திங்கள், இவ்விரண்டு மொழிகளும் புணரும் போது,

முதல் + திங்கள் = முதற்றிங்கள். என்றாகிறது. இதில்,

முதல் என்பதிலுள்ள ல், ற் ஆகவும், திங்கள் என்பதிலுள்ள தி, றி ஆகவும் மாறியுள்ளதை யறிக.

நெடிலடுத்து வரும் மொழிகளும் இவ்வாறேயாம்.

மேற்சொன்ன மூவகை மொழிகளுக்கும், பல உதாரணங்களைக் கீழே படியுங்கள்.

தனிக்குறி லடுத்து வருவன.

சொல் + தொடர் = சொற்றொடர்.
கல் + தூண் = கற்றூண்

இணைக்குறி லடுத்து வருவன.

கடல் + திரை = கடற்றிரை.
எழில் + தோகை = எழிற்றோகை.

நெடிலடுத்து வருவன.

மேல் + திசை = மேற்றிசை
பால் + துளி = பாற்றுளி

நிலைமொழி யீற்றில் ல் உள்ள மேற்கண்ட சொற்கள், வருமொழி முதலிலுள்ள மற்ற உயிர் மெய்யெழுத்துக்களோடு புணரும்போது எவ்விதம் மாறுகின்றன வென்பதை அடுத்த பாடத்தில் விளக்குவோம்.

[ தொடரும் ]

# கலை அரங்கம்

## கலை முன்னேற்ற மாத இதழ்

★

ஆசிரியர்: **கலைச்செல்வன்**

- தமிழ் நாட்டு ஸ்டுடியோக்கள்
- மறக்க முடியாத சம்பவம்
- ஸ்டுடியோ பயணம்
- திரைப்படக் கவிஞர்கள்
- திரைக்குப் பின்
- உருவாகும் படங்கள்
- மேல் நாடுகளிலே, வட நாட்டிலே
- உங்கள் பக்கம்
- தெரியுமா?
- தெரிந்து கொள்ளுங்கள்
- அவர்கள் கூறுகிறார்கள்
- புது மொழிகள்
- சுவையான செய்திகள்
- கேள்வியும்-பதிலும்

**முதலிய புதிய அம்சங்களுடனும், ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று வெளிவருகிறது.**

**முழுவதும் கிளேஸ் காகிதம் : மூவர்ண முகப்பு.**

**48 பக்கங்கள் — விலை அணா எட்டு.**

அதிக பிரதிகள் வேண்டும் ஏஜெண்டுகள் முன் கூட்டியே அறிவிக்கவும்.

★

— விபரங்களுக்கு —

**கலை அரங்கம்**

த. பெ. எண் 275 :: சென்னை-1

வர்ணனைக் கட்டுரை

# அழகு

A. K. வில்வம்

அழகே! என் இதயக்கோவிலில் நீங்காது ஒளிவிடும் இன்பக் கலையே! அங்கிங்கெனாதபடி—அனைத்துலகும் அமைகிழ சாட்சி தரும் உள்ள பொருளே! தொட்ட இடமெல்லாம் கணகளில தட்டுப்படும் உயிர்ச் சத்தே! உவகைப் பெண்ணே! இவ்வுலகின் சொந்தக்காரி! 'உன் முழுத் தோற்றம்' இதுதான் என்று சுட்டிக் காட்ட-கட்டியணைக்க என்னால் முடியாவிட்டாலும், கண்களால் பார்க்க-கண்டுகளிக்க-பேச, எழிலைக்குடிக்க உன்னைப்பற்றி இசைபாட என்னால் முடிகிறது! குடிக்கத் தெவிட்டாத மலைத்தேனே! குங்கும நிறத்தில் குளிர்க்கின்ற அழகுப் பெண்ணே! என் காதல பண்ணே!! தாயகத்துத் தமிழ்மண்ணே! குறள் வெண்பாவே! குற்றமில்லாக்கன்னியே! கோகினூர் வைரமே! விளக்கம் தரமுடியுமா கலையரசி, உன்னால், என் வெடித்திடும் அறிவு வினாக்களுக்கு! 'பிள்ளை'யைப் போல்-'பாரதி'யைப் போல் பறந்துவிடப் போகிறாய்—'பகுத்தறிவின்' வளர்ச்சிகண்டு! பயப்படாதே! பதுங்காதே! என் அழகு பாவையே! பக்கத்தில் வா! வரமாட்டாயா? "பெண்ணுக்கணிகலம் நாணுடைமை" என்ற நாலடியாரைப் படித்தவளோ? இருந்தாலும் பாதகமில்லை!! என்றும் நீதான் என் காதலியாயிற்றே! அழகணங்கே! ஆண்டவன் இருப்பதாகக் கூறுகின்றனர் சிலர்—அவர்கள் அவனைப் பார்த்துப் பேசி, போட்ட மாளிகையில் தங்களுக்கு ஓர் இடம் 'ரிசர்வ்' செய்துவிட்டு வந்தவர்கள்! 'இலையென்றுரைக்க தையரியமில்லை — தொலையென்றதனைத்துறக்கவும — துணிவில்லை" என்று பாடுகிறார் நாமக்கலலார்! இவர் பயந்தவர்! "அன்பே ஆண்டவன்—அறிவே கடவுள்" என்பவர் பலர்!! அவர்கள் அறிஞர்கள்-பகுத்றிவு வாதிகள்! ஆனால் காட்சிக்கினியாளே! கடலலை அரசி! இன்பத்தின் பெட்டகமே! உணர்ச்சி ஊற்றே! அந்த 'அன்பில்' கூட அழகே! ஆண்டவன் இல்லை! நீதான் ஆனந்த நடனம் ஆடுகிறாய்! என்று அழுத்திக்கூறுகின்றேன், அசையாத கலையுணர்வோடு! அழகே! ஆண்டவன் அன்புடையவனா? அசையாதே! அப்படியே நில்! ஆட்டையும் அதைக் கொல்ல புலியையும்; மானையும்—அதன் குடல் கிழிக்க நரியையும்; பாம்பையும் அதைக் கீற-கீரியையும்; எலியையும் அதன் தசையைத் தின்ன பூனையையும்; புழுவையும் அதைப் பிடித்துக் கடிக்க வலலூரையும்; மனிதனையும் அவனை ரிகஷாவில பூட்டி சவாரி—செய்ய இன்னொரு மனிதனையும் படைத்து—கொடுமை செய்யும்—கோரதாண்டவம் ஆடும்! அந்த கொடுமையாளனை—படுமோசக்காரனை—நாளும் கடவுளா ஆடுகின்ற அழகி!! அசையாமல் நீ பதில் சொல! அன்புடையவன் தானா ஆண்டவன்! ஒப்புக்கொள்கிறாயா இதையும் நீ! நேர்மை தவறாதே — நடுநிலை நில! நெஞ்சில் கை வை! பழமை நஞ்சை கக்கி விடு!! நங்கையே! இப்பொழுது சொல்! அற்பர்களின் கற்பனைப் பிள்ளையான கடவுள், கருணையின் இருப்பிடமாக முடியுமா? விழிக்காதே! விதண்டாவாதம் எண்ணாதே! பதில சொல்ல முடியாத பாவையே! பதுங்கு-ஓடிப்போ! பழமையிடம் போய்ச சொல் இனி அது வாழ முடியாது என்று!! ஏன் நீ கூடக் கூசுகிறாய்,— மூமைப் பேயின் முகத்தைப பார்க்க? சரி! சரசி! காலம் சொல்லிவிடும் செய்தியை! நீ வா நாம் காற்றுடன் பறக்கலாம்! பட்டுப்பூச்சின சிறகினில் படுத்து—பறந்து செல்லலாம்!! பங்கஜ மலரே நீ விரைந்துவா !!

புடம்போட்ட தங்கத்தில்-சுட்ட வெண்சங்கின் சுடர் அலையில கானம் பாடும் வானப்பறவையே! அழகெனும் மழை பொழிந்து அகிலத்தைச் சிரிக்க வைக்கும்—சிலிர்க்க வைக்கும் சிங்காரமுகியே!! நீ சிந்தும் அந்த அழகு மழைத் துளிகளில் ஒரே ஒரு துளியாவது! துடிக்கும் பாம்பை விரல்களில் இடுக்கிக் கொண்டு கலங்கிய கண்களுடன் வேதனை தாளாமல் நிற்கின்ற மயிலின் மேல்—ஆறு முகத்தையும்-பனிரெண்டு கரத்தையும் பெற்று—கரத்திற்கொரு கட்டாரியை பிடித்துக்கொண்டு—பயங்கரப் பூச்சியைப போல்-மனிதனால் படைக்கப்பட்ட அந்த ஆண்டவனிடம் ஒருதுளியாவது சிந்தக்கூடாதா? அழகுதுளியே!! பார்க்கவே பயங்கரத் தோற்றமளிக்கும் அவனிடம் அன்புமட்டுமல்ல—அழகே! நீகூட இணைந்திருக்கவில்லை! நீ இணைந்திருப்பதாகச் சொல்லும் ஆண்டவனை இல்லை!! "இல்லை யென்பான் யாரடா? தில்லையில் போய்ப் பாரடா?" என்கிறான் ஒரு பச்சோந்திப் பாடகன்!! 'இல்லை யென்பவன் நானடா! தில்லையில் பார்த்துத்தானடா!" என்று புரட்சிக் கவிஞரின் இதயக் குமுறல் அதற்குப் பதில் சாற்றுகிற வேகத்தைப் படித்துவிட்டுதான் உரக்கக் கூவுகிறேன்! தூக்கிய காலை தொங்கவிடவும் முடியாத சக்தி பெற்ற தில்லையப்பனைப் பார்த்துவிட்டு, ஆண்டவன் இல்லை என்று உறக்க கூவுகிறேன். ஆனால் அழகே! நீ இருப்பது உண்மை! கண் கண்ட உண்மை! நாடறிந்த உண்மை! நவிலுவது நான் மட்டும் அல்ல! குவலயம் அறிந்த குளிர் நிலக் கவிஞன் 'கீட்ஸ்' (Keats) கூறுகிறான்! "ஆண்டவன் இல்லை அழகே உண்மை! உண்மையே அழகு" என்று! ஆண்டவனைப்பற்றி என்னிடம் பேசாதே என்கிறார் சீனப் பேராசிரியர் கன்பூசியஸ்! இப்படி அந்நாள் தொட்டு இந்நாள் வரை பிறரை 'அசைக்கும்' சக்தி பெற்றுள்ளதாக சொல்லும்-ஆண்டவனை அசைத்து விட்டவர்களின் பட்டியல் அழகே, ஏராளம்! ஏராளம்! ஏதென்ஸ் நகரத்துச் சிந்தனையாளர் முதல் காஞ்சி செம்மல் வரை நீண்டு கொண்டே போகிறது! அந்த புரட்சியாளர்களின் பட்டியல்!!

அழகே! பவழக்குவியலே! பொன் மலையே! புருஷ மாலையே! ஆசைக் காதலி! உலகம சுற்றிடும் உல்லாசப் பெண்ணே! உயிரே! பயனற்ற கதை

பேசி இவ்வளவு நேரம் முத்தான நேரத்தை தத்தம் செய்துவிட்டேன்! முன்நீர் மோகினி! பனனீர்ப் பார்வைக்காரி! நித்தம் நித்தம் உன்னை எங்கெங்கு சந்திக்கிறேன் - எத்தனைப் பொருள்களில் காண்கிறேன்! விழி நிறைந்த உன் தோற்றத்தால் மொழி பேச மறந்து பித்தனாகின்றேன்! சித்தம் கலைகின்றேன்! மீண்டும் தெளிகிறேன்! காண்கிறேன் புத்தம் புதிய உருவில்உன்னை! எங்குமா நீ! செந்தாமரை அடியாளே! என் சொல்வேன் என்நெஞ்சககிளர்ச்சியை, மனமலர்ச்சியை!

சேளாய்! கேளாய்! என் கடமைக் குரலை-என்று காலை மலர்ந்ததும்-உரிமையோடு - ஒய்யாரக் கொண்டையாட கூவுகிறதே சேவல்! அந்தச் சேவலின் வளைந்தாடும் கொண்டையிலே! எழுவாய்-எழுவாய்! துன்பம் நிறைந்த உன் நாட்டின் துயர் துடைக்க-பகை முடித்து-தடை ஒடித்து-விலங்கொடிக்க-என்று கூறாமல் கூறி தன் பரிதிக் கரங்களால் தட்டியெழுப்பும் பகலவனின் பவளச்சுடர் பொழிவில், அழியாத ஒளிமழையில் பாராய்! பாராய்! என்னுடலை - என் விடுதலை வாழ்வை-என்று சொலலாமல்சொல்லி பறக்கச் சிறகு விரிக்கும் பட்சிக் கூட்டத்தில் அழகே உன் வனப்பைக் கண்டேன்! வாய் இழந்தேன்! பெண்ணின் கண்ணில், சுருண்ட கூந்தலில், சரிந்த கன்னத்தில், விரிந்த இதழில், வழுந்தப் புன்னகையில், வழிந்திடும் காதற்பண்ணில், அது வந்திடும் குரலில், "வா! வா!" என்று கண் அசைத்து வரவேற்கும் விண்மீனில், அதன் விழி பேசும் விசித்திர மொழியில், எழுகின்ற இசையில், இப்படி எண்ணும் சிந்தையெலாம் எழில் ஏந்திழையே! என் சொல்வேன் உன் மாணிக்கச் சிரிப்பைக் கண்டதல்லால்!! கண் இமையே! என் ஆவியுடன் அந்தரங்கமாகப பேசும்! காதல சுந்தரி! கன்னல சாறே—செந்நெல் பொலிவே! செங்கையணைப்பே! இளந்தோகையே! அழகே! உன்னை விழி நிரையப் பார்ககிறேன்!! உயிர் இழக்கிறேன்! உன்னுடன் இணைகிறேன்!

உலக அரங்கில் நீ எத்தனை உருவில் நடனமாடுகிறாய்! அழகே! நீ இல்லையென்றால் காதல இல்லை! காவியம் இல்லை! ஓவியம் இல்லை! சிற்பமில்லை! சித்திரம் இலலை! சிந்தனை இல்லை! கருத்தில்லை! கலையிலலை! இதனால் அறிஞன் இல்லை! கவிஞன் இலலை! கலைஞன் இல்லை! ஓவியன் இல்லை! சிற்பி இலலை!! இத்தனைப் பெருக்கும் உயிர்தரும் முத்தணங்கே! நீ காதல் உருகொண்டு, பிரான்சில் களி நடமும், இங்கிலாந்தில் துயர் நடமும், இத்தாலியில் இசை நடமும், ஜெர்மானியில் சோக நடமும், அமெரிக்காவில் டாலர் நடமும், ரஷ்யாவில் இன்ப நடமும், ஆரிய நாட்டில் சோர நடமும், திராவிடத்தில் தற்கொலை நடமும் ஆடுவதைக் கண்டு! நான் ஆயாசப் படுகிறேன்! ஆனால், ஆத்திரப் படுவதிலலை! "மன்னன் எவ் வழி அவ் வழி குடிகள்" என்பதுபோல—மக்கள் மனவளம் எப்படியோ அதன் அடிப்படையில்தான் அழகே உன் பொலிவை பார்க்க முடிகிறது!

ஆண்டவனில் இருந்து—ஆண்டிவரை பெண் உருகொண்டு மபக்கிடும் மோகினியே! தூக்குமேடை ஏற நேர்ந்தாலும் உன்னைத் துணைகொண்டு தானே செல்கிறார்கள் பெண்கள்! ஆண்களைவிட உன்னை பெண்கள்தான் அதிகமாக வரவேற்கிறார்கள்!! நீயும் அவர்களிடம்தான் துள்ளி விளையாடுகிறாய்! கிள்ளாமல் ஆண்களின் இதயங்களை கிள்ளி விடுகிறாய்!

கான மயிலென அழகே, நீ அவர்களிடம் ஆடுவது - கண்டுவிட்ட சில இளம் வான் கோழிகள் வலைவீச எண்ணி விலை கொடுத்து வாங்கிய 'வெண்மாவை' பூசிக்கொண்டு வாராயோ, அழகே! எழில் தாராயோ, என்று ஏங்கிக் கிடக்கின்றனர் - என் செய்வேன் அழகே! ஏன்செல்லவில்லை! செயற்கைப்பூச்சிற்கு கட்டுப் பட மாட்டாயா? அடிமையாக மாட்டாயா? 'ஆம்' என்கிறாயா? அதுதான் நல்லது யாருக்கும்! எதற்கும்! எப்பொழுதும்! அடிமையாகாதே! அடிமையாகாதே! அடிமை வாழ்வைவிட சாவின் மடியே சாலச் சிறந்தது! இந்த சாம்ராஜ்பத்தையே என் காலடியில் வைபபதானாலும் நான் என் கொள்கைகளை விட்டுவிட்டு பிறருக்கு அடிமையாக மாட்டேன் என்றான் பெரும் புலவன் 'பைரன்'! ஆம்! அடிமையாகாதே! இதை உன் இதயத்தின ஆழத்தில் - அழகே! நீ அழுத்திப் பதியவை! பாரறியச் சொல்! 'அடிமையாகாதே' என்று பறைசாற்று!

0 0 0

அழகே! கனி சொற்குலையே! கண் ஒளியே! கற்பனையில்—கவின் புதையலில்—கலைப்பொருளில் - மட்டும் காண வில்லை, உன்னை! சிம்புட் பறவையின் சிறகில், சிங்க இளைஞனின் திருப்பு முகத்தில், திறந்த விழியில், நிமிர்ந்த நெஞ்சில், புலிச் செயல் செய்து நரிச் செயல் ஓட்டிடும் வீரனின் பொருதடக்கை வாளில், அவளின் பொங்கும் மணி மார்பில், புறங்கொடா மறத்தில, போர்களத்தில அழகே நீ நிற்கிறாய்! மலைதரும் மணியில, அலைதரும் முத்துச் சுடரில், கலைதரும் களிப்பில், பேசாமல் பேசிடும் சிற்பங்களில், பேசும் பெண்ணின் கழுத்தின் சுருக்கத்தில், பளிங்குநிற நெற்றியில் வளைந்தோடும் கருங் கோட்டில், கருமணியில், கனி இதழ் பிளவில், அதன் சுவையில், சுந்தர அழகே நீ சொட்டுவதைப் பார்க்கிறேன்! கட்டுண்ட பாம்பாகிறேன்! குழையும் நெஞ்சம் பெருகின்றேன்! உன் திரண்ட உடலை அணைக்க முடியாமல் குமுறுகின்றேன்! குயில்மொழி சிந்தாயோ?

இயற்கையன்னையின் மூத்தமகளே! நேசமுள்ளமானே! பாசமுள்ள தேனே! நான் விரும்பும் கண்மணி! பரந்தவானப்பரபபில்படகெனமிதக்கும் வெண் மேகக் குன்றுகளில், அழகே, உன் முத்து நகை படர்ந்திருக்கின்றது!! அழகே உயர்ந்த மலையிலே உற்சாகம்—உருளும் அருவியிலே உன் ஓட்டம் உறைந்து கிடக்கிறது கண்கள் மொய்க்கும் இடமெல்லாம் தையலே! உன்முகமா? அழகே! முத்தமிழ் நாட்டிலே, சந்தனக் காட்டிலே, சிந்தனை ஏட்டிலே, தாசன் பாடடிலே! குளிர் இலைகளின் தட்டிலே! கூத்தாடும் முல்லை மொட்டிலே, கிள்ளைக் கூட்டிலே, மழலைத் தொட்டிலிலே, ஓவியன் வட்டிலிலே, காஞ்சிப்பட்டிலே, பெண்ணின் கட்டுடலிலே, அழகே, நீ களிநடம் புரிந்து கானம் பாடுவதை காண்கிறேன்! உவகையடைகிறேன்! உயிரெல்லாம்! உடம்பெல்லாம் நனைகின்றேன்!

0 0 0

உயிர் கவர் உலகோவியமே! "பெரிதுமானம் உயிர் பெரிதல்ல'

என்று கூறிடும் கவரிமானின் கண்மிரட்சியில்! குருதி ஒரு சொட்டு உள்ளவரை மண்டியிடாதே மாவீரனே — மாற்றானுக்கும் என்று முழக்கமிடும் சிங்கத்தின் முகத்திலே! வையம் ஆண்ட வண்டமிழ் மரபே! வளைந்துகொடுக்காதே! வா! வெளியில்! வாகை சூடுவோம்!! வான் புகழ் கொள்வோம்—ஓடும் நரிகளை எள்ளுவோம் என்று பேசிடும் கடும் புலியின் ஏறு நடையில்! எழிலரசி! என் கண்ணே! உன்னைக் காண்கிறேன்! அன்ன நடைக்காரி! மின்னல் இடைப்பூவையே! பறக்கும் ரத்தினப் பறவையே! தண்ணொளி சிந்தி எண்ணத்தைககிளரும் எழில வெண்ணிலவே! நீலககடற் பரபபே, ஆர்பரிக்கும் அலையே! அதினின்று எழுகின்ற நீர்திவலையே! தெளிக்கும் மணற்பரப்பே! வெண் நுரையே! இவை எல்லாம் அழகே, நீயாயிருக்கக் காண்கின்றேன்! அடடா! கோலச சிற்றிடையே! நீலக்கயல் விழியே! நிமிர்ந்த இடையே! குடத்தை அணைக்கும் மங்கையர் செங்கரஙகளில்-செந்தூர விரல்களில்! உன் மாணிககச் சிரிப்பினைக் கண்டேன்! காணிக்கையாக்கி விட்டேன் என்னையே! அழகே! தென்றலுடன் கூடித் தெம்மாங்கு பாடும் தென்னை கீற்றுகளில் ஊஞசலாடும் உனைக் காண்கிறேன்! உளம் களிககின்றேன்! உணவை மறக்கின்றேன்! உறககம் இழக்கின்றேன்! அழகே! உன்னால் எனக்கு ஓயாத உயிர்வாதை—உள்ளப் போதை! நான என்ன செய்வது! உன்னைக் கண்டால் உருளும் பந்தாகிறேன்! நெறியிலலாமல உருளுகின்றேன்! இந்த உலகத்தைப்போல!

0 0 0

சிவந்த ரோஜாவின் இதழிலே சிரிக்கின்ற அழகே! மகரந்தக் குழலே! கொவவை நிறத்தழகி! புளளி மான்களின் துள்ளலில, மயிலின் நடனத்தில், குயிலின் கீதத்தில், குளிர்ப் பூங்காவில, கிளைகளில் குதித்தோடும் மந்திகளிடத்தில், வண்ண மலரின் வாடாத மேனியில், பஞ்சென தோன்றும் வெண் முயலிடத்தில், அணிலின் ஆட்டத்தில், பளிங்கு நீர்பபரப்பில், முளைத்தாடும் தாமரைத் தட்டில, அல்லி இதழ் அடுககில், மொய்க்கும் வண்டுகளிடத்தில், அழகே உன்னையள்ளி—அள்ளி விழுங்குகிறேன்! குறையவில்லை! குறையாத அழகு சுரபியே-நான் மணிமேகலையாக மாறி விடுகிறேன்! என்னிடம் வந்து விடு! வையமெலாம் வாரி இறைக்கிறேன்! உன்னை வாழ்த்துகிறேன்.

0 0 0

குறையாத கலையே! குலையாத கன்னி! அன்புப் பொன்னி! பனிதூங்கும் பாவையின் பட்டு மேனியில்—பவழ இதழில்-அது சிந்தும் அமுத மொழியில! மழலையின் சிறு விழியில்—குரு நகையில! குழிந்திடும் கன்னஙகளில் — தளிர்ககரங்களில் அழகே! உன் ஓயாத சிரிப்பு—ஒலி செய்கிறது! ஓய்ந்ததா? வான்மழைத் தாரையின் வைரச் சிதறலகளில்! சிந்து பாடும் உழவனின் விரிந்த மார்பில்—உருண்ட விழியில்! பச்சைப் பயிரின் அசைவில்—பூங்காற்றுடன் கதை பேசும் பொன் நிற நெற்கதிர்களில், அழகே! உன் கூத்தைக காண்கிறேன்! சித்தம்குளிர்கிறேன்! மாலைக் கதிரவனின தங்க மழையில்—மஞசள் ஆட்சியில! மேற்கு செவ்வானத்தில்! சிந்தை குளிரும் சந்திரோதயத்தில! பாய்கின்ற ஒளிப் புனலில்! மதிவெள்ளத்தில்! மட்டுமா? அதோ! மணற் பரபபில்—நடமாடும் பொற்சிலைகள் இரணடு— ஆண்—பெண்! ஆம் மனிதப பொன் வண்டுகள! உடலுடன் உடல் வைத்து—இதழுடன் இதழ் தைத்து இன்பம் குடிதது—மானசீக அமைதியில் உரையாடிக் கொண்டிருக்கிறார்களே! அங்குத்தான் அழகே! உன் அலர்ந்த முகத்தை அகலத் திறந்த கண்களால் பார்க்கிறேன்! ஆடாத சிலையே! வாடாத மென்கதலி! பாடாத குயிலே! தேடாத செழுஞ் செல்வமே! காதலைத் தட்டி எழுப்பும் காந்தப் பொருளே! உன்னை விஞ்ஞானியின் மேதையில! விவேகியின விளக்கத்தில! கவிஞனின் குரலில! கலைஞனின் கற்பனையில், அறிவு ஒளி வீசசில், ஏன்—எங்கள் 'அறிஞரின்' பேசசில் நீ ஆனந்த நடனம் ஆடுவதை நான் பார்க்கிறேன்! களிப்பால் என் இதயமும் ஆடுவதையும் கவனிக்காமல இல்லை!

0 0 0

கலை உணர்ச்சியைக் கொல்லும்—கடவுள் உணர்சசியில—கால் வைக்க அஞ்சும் சேல் விழியாளே! கேள்! கேள! கேடு கெட்ட கேலிக் கதையைக் கேள்! ஆனால் அருள் கூர்ந்து இதை அயல் நாட்டவன் காதில் போட்டு விடாதே! வெளியில தலை காட்ட முடியாது!! தமிழ் மண்ணின் புகழுக்கே களங்கம்! மாசு! தாங்க முடியா அவமானம் சூழ்ந்து கொள்ளும்! அழகே! பெற்ற மகனை தாய் கால் பிடிக்க—கதற கதற அதன் தலையை தந்தையே அறுத்து விருந்திட்டானும் திரிபுர மெரித்த விரிசடை கடவுளுக்கு!! அந்த விலங்கு செயலில் அன்பெங்கே! அழகே நீ எங்கே? என் அருமை பக்தனே! உன் பத்தினியை இன்றிரவு மட்டும் என்னுடன் இருக்க விடு—என்று ஐயன் கேட்க! "நஞ்சுண்ட பெம்மானே! இதோ என் பொன்மான்"-என்று கூறி படுக்கை அறை அமைத்துக் கொடுத்தானும் இன்னொரு பக்தன்—எப்படி இருக்கிறது கடவுள் உணர்ச்சி! இதன் பெயர்தான் பக்தி! கலையின் விளைநிலமே! அந்த ஆபாச செயலில் கலையழகு இருக்கிறதாம்! கதையில் நயம் இருக்கிறதாம்! அதிகம் படித்த 'மேதை'கள் சொல்கிறார்கள்! ஐயோ பித்தே! அந்தோ பக்தியே?

0 0 0

கலைத்தோட்டத்தில் கண்களுக்கு விருந்தளிக்கும் வண்ணக் கிளியே! வசீகரப் பொன் வண்டே! வெண் புறுவே! தித்திக்கும் ஏடு தீந்தமிழேடு! இதயம் தடவும் அகம்! மறம் பொங்கும் புறம்! சயங் கொண்டாரின் வீரப்பரணி! போர்முரசுகொட்டும் பொனனேடு! தென்றல்நடையில் தேன் மொழியில்—தமிழ்மழை பொழியும் இளங்கோவின் சிலம்பு! நல்ல குருந்தொகை! நற்றிணை—கற்றவர் போற்றும் கலி! பைந்தமிழ் பேசும் ஐம்பெருங் காபபியங்கள்! சங்கப் பலகையில் தவழ்ந்து வந்த அறிவு ஏடுகளின்! ஒவ்வொரு எழுத்திலும்—நயத்திலும்! அழகே! தேன் சிட்டே! முல்லை மொட்டே உன்னையே காண்கிறேன்! கண் பூக்கிறேன்! அதோடு அல்ல! பாறையை வெட்டி-குருதியைக் கொட்டி-பசும் பொன்எடுக்கும் பாட்டாளி உள்விடும் வியர்வைக்குளத்திலே-வழி நிறைந்திருக்கிறாய் நீ அழகே! கலையின் மெழுகே! அவன் மூச்சிலும் பேச்சிலும்—நீ நெளிந்து காணப படுகின்றாய்! அவன் மனைவில் கலந்த தலையிலும் அழகே நீ நிலை பெற்றிருப்பது

ஏன்? ஏழையானாலும்-நல்ல எண்ண முடையவர்கள் என்பதாலா? ஆம்! எனக்குத் தெரிகிறது—அதற்காகத் தான் என்று!

0 0 0

அழகே! கரிகல் சுரங்கத்தின் நுழைவு வாயிலே! கலை மன்றத்தின் முகப்பே! அழகு சொர்க்கத்தின் பேர ழகுத் தெய்வமே! மின்னும் மணியே! உலகத்தின் பரபபெல்லாம் உன்னைக் கண்டேன்! உவகைக் கொண்டேன்!

காதலின் கலங்கரை விளக்கே! அழகே! தென்னிலத்து மண்ணே! தேன்சுசியும் பரிபளவல்லி! பரவசக் கள் தரும் பாவையே! உலகின் தேவையே! ரசிக்கத் தூண்டும் ரச வல்லி! மோமளமே! தேன் குடமே! நான் இப்பொழுதுதான் உன்னை சந் திக்கிறேன்-சரசமாடுகிறேன் என்று நினைக்கிருயா? இல்லை! உன்னை முதல் முதல் எங்கு சந்தித்து உன் மேல் தணியாத காதல் கொண்டேன் தெரியுமா? செல்லக்கிளியே! செழுந் தேனே! சொல்கிறேன்! செவிகொடு!

இரண்டைந்து திங்கள் அங்கம் நோக, அரும்பாடு பட்டு பெற்று ஆண்மகன் என்றதும், அன்போடு வாரி அணைத்து—அகம் குழைய முகம் துடைத்து—முத்தமிட்டு! ஆசைக்கிளியே! மாசறு பொன்னே! வலம்புரி சங்கே! காசறு விரையே! கரும்பே! தேனே! வயிற்றில் வளர்ந்த வைரமே! என் உயிரமுதே! நான் பெற்ற தங்கச் செண்டே! கற் கண்டே! என்றெல்லாம் கூறி அரும் புப் பருவத்திலே, பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி, பாடும் பொழுது என் அன்புத்தாய்! என்னு டன் பேசினாளே! ஒரு அமுத மொழி! கரும்பு மொழி! தித்திக்கும் தேன மொழி! என்உயிர்மொழி!தாய் மொழி! உலகின் மூத்த முதுதமிழ் மொழி! தமிழ் மொழி! அந்த மொழி யிலே அதன் அமைப்பிலே-அழகே பொங்குகின்ருய்! அப்பொழுதே நீ கண்டேன் உன்னை! மயிலின் கழுத்தே! "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகி யற்றியான்" என்ற ஈரடிக் குறள் பாக்களின் ஒவ்வோர் எழுத்திலும் நீ! வட்ட மிடுகிருய் வான விலலே! பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அழகே! உன்னைக் கண்டால் எனதுள்ளம் நெக்கு நெக்காய் உருகுகின்றது உணர்ச்சிப் பெருக் கால—உவகை மிகுதியால்! ஆம! அழகே! அன்புத் துன்னலாய்! உன முழு உடலே! அழகுப் பெண்ணே! ஆசைப் பிழம்பே! அணைத்துக் கொண்டேன்! கடித்துத் தின்கிறேன் இன்பக்கடலில் விழுந்தேன்! அழகே! உன்னுடன்தான்! உன்னைப் பிரிந் தால—அடடா! என் உயிர் ஏது! உல கம் ஏது! ஒரே கோர பேடு! புழுதிக் காடு! இலலையா அழகே! உண்மை தானே!

# ஜெய்ஹிந்த் சபா!

வழிப்போக்கன்

"ஜெய் ஹிந்த்"

"வந்தே மாதரம்!"

"போலோ பாரத் மாதாகி... ஈ...

சே.........சே...... டீ குடித்துக் கொண்டிருந்த என்னல் அதற்குமேல் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அரசியல் கோஷங்கள் அடுப்படி வரைக்கும் வந்து விட்டதா என்ற ஆச்சரியம் ஒருபுறம்; நிம்மதியாக ஒரு கப் டீ குடித்து விட்டுப் போகலாம் என்று வந்த இடத்தில் காதுகளைக் குடையும் காட்டுக் கூச்சல் கிளப்பி விட்ட எரிச்சல் மறுபுறம்! கோப்பை யைக் கீழே வைத்து விட்டுச் சர்வரை நோக்கினேன்; அவன் சிரித் தான்!

ஒரு நாளைக்கு இருபத்தியெட்டு மணிநேரம் என்று இருந்தால் கூட திருவல்லிக்கேணி டீக்கடை அவ்வளவு நேரமும் திறந்துதான் கிடக்கும். எந்த நேரம் போனலும் அங்கே டீ கிடைக்கும் என்று தைரியமாகப் போகலாம். அந்த வட்டாரத்திலுள்ள ஒரு சில போக்கத்ததுகளும், ரிக்ஷா வாலாக்களும் சம்பளமில்லாமல் 'கூர்க்காவேலை' செய்து கொண்டிருப் பார்கள். டெயிலி டுப் பத்திரிகைகளில் வராத பலே செய்திகளெல்லாம் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக் கும்.

அழுகிப் போன அரசியல் விவகா ரங்கள், காய்ந்து போய்க் கிடக்கும் கலை மார்க்கட்—காரல் மார்க்ஸ்— பொருளாதாரம் — பொதுவுடைமை— வெங்காயம்...... இத்யாதி......இவை களைப் பற்றி நான் முழுவதும் பேசிப் பேசி அலுத்து விட்டு, கொஞ்சமாவது தொண்டையை, நனைத்துக் கொள்ளலாம் என்று இங்கு வந்தால் 'கல்யாணி' ராக ஆலாபனம்!

"ஸார். நீங்கள் இப்போது, என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அர்த்த ராத்திரியிலே எங்கிருந்து இந்த அரசியல் கீதங்கள் ஒலிக்கின் றன என்று எரிச்சல் படுகிறீர்கள்" என்ருன் சர்வர்.

"அடடா, ஜல வாயுக் குண்டு இரக சியத்தையே கண்டு பிடித்து விட்டாய்! அப்பா, திரிகால ஞானி, யாரு இந்த ரெக்ளுட்டுகள்?" என்றேன்.

"ஒன்றுமில்லை ஸார், ஜெய்ஹிந்த் சபாவின் ஜெனரல் பாடி மீட்டிங் உள்ளே நடக்குது"

"ஜெய்ஹிந்த் சபாவா? அப்படி யொன்றும் நான் கேள்விப் பட்டதே இல்லையே!

"நீங்கள் கேள்விப் பட்டிருக்கவே முடியாது ஸார், நடு ராத்திரியில்தான் நாம் சுதந்திரம் வாங்கினேம். அதன் ஞாபகார்த்தமாக இந்த 'நைட் கிளப்' ஆரம்பிக்கப்பட்டு, வாங்கிய சுதந்திரத் தைக் காப்பாற்று வதற்காகப் பல இர கசியத் திட்டங்களைத் தீட்டி, எதிரி களை முறியடித்து முன்னேறிக் கொண்டு வருகிறது."

"ஹூம்......"

"ஒரு தலைவர், ஒரு தளபதி, இரண்டு காரியதரிசிகள்-ஒவிய வேலை களைச் செய்ய ஒரு எடுபிடி—இதுதான் ஜெய்ஹிந்த்! வேறு நிரந்தர அங்கத்தி னர்கள் கிடையாது!"

"அப்படி யென்ருல்?"

"டெம்பரரி அங்கத்தினர்களை அவ் வப்போது சேர்த்துக் கொள்வதுண்டு; காரியம் முடிந்தவுடன் கருவேப்பிலை யைப் போலத் தூக்கி எறிந்து விடு வார்கள்."

"சரிதான்; இந்த சபாவுக்குத் தலை வர் யார்?"

"அகண்ட பாரத்"

அப்போது "டேய், பையா!" என்ற குரலோடு ஓர் உருவம் இருட்டுக் குள்ளிருந்து முன்பகுதிக்கு வந்தது. ஆச்சரியத்தால் ஆறிப் போயிருந்த டீ கொதிக்க ஆரம்பித்தது. வந்தது வேறு யாருமல்ல; என்னுடைய பழங் காலத் தோழன் பண்டாரம் தான்!

பண்டாரத்தைக கண்டதும் என னுடைய பழைய உணர்ச்சிகளுக்கு ஒரே கொண்டாட்டம், போங்கள்!

"என்ன சார், இங்கியா இருக்கீங்க? சௌக்கியமா?" என்று தன் பல்வரிசைகளைக் காட்டிக் கொண்டே கேள்வி வரிசைகளை அடுக்கிக் கொண்டே போனான் பண்டாரம். எங்களுக்கிடையே நின்று கொண்டிருந்த சேர்வர் "சினிமா ஸ்கோப்' படம் பார்ப்பது போல என்னையும் அவனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தான்!

"டேய், இருபது ஸிங்கிள் சாயா எடுத்துக்கிட்டு உளளே வா; ஸார், நீங்களும் வாருங்கள் 'ஜெனரல் பாடி' நடக்குது. கூட்ட நடவடிக்கைகளைக் காண, பார்வையாளர்கள் இல்லாத குறையை நீங்கள் தீர்த்து வையுங்கள்."

பண்டாரத்தோடு உள்ளே போனேன். அடுப்புக் கொட்டியைத் தாண்டியவுடன் 'மீல்ஸ் செக்ஷன்' இருக்கிறது. அங்கேதான் 'ஜெய் ஹிந்த் சபா' எழுந்தருளி யிருந்தது. பண்டாரம் தனது சகாக்களையெல்லாம் எனக்குப் 'பழக்கம்' செய்து வைத்தான். பிறகு கூட்டம் துவங்கியது.

தலைவர் அகண்ட பாரத் பேசுகிறார்:

"அன்புள்ள தலைவர் அவர்களே... நான்சென்ஸ், மன்னிக்க வேண்டும்; இந்தக் கழகத்தான்கள் கூட்டங்களுக்குப போய் அவனுக பேச்சைக் கேட்டுக் கேட்டு எனக்கும் இந்தத் தொத்து நோய் பிடித்துக் கொண்டது,......... பிரிய முள்ள அக்ராசனரவர்களே.....

உடனே பண்டாரம் குறுக்கிட்டான்.

"டேய்முண்டம், யாருடா தலைவன்! மூஞ்சியைப பாரு பேச வந்துட்டான். ஒன்னே மாதிரி அரைவெட்டுகளைத் தலைவராப் போட்டா இப்படித்தான். ஒழுங்காப் பேசுடா........"

"எக்ஸ்கியூஸ்மி! மறந்துட்டேன்!! கண்ணிய மிக்க கனதனவான்களே! நாம் நமது கடந்த கால நடவடிக்கைகளைப் பற்றிப் பேசுவதற்கும், வருங் காலப் போராட்டங்களுக்குத் திட்டம் தீட்டவும் இங்கே கூடியிருக்கிறோம். எல்லோரும் டீ சாப்பிட்டோம்; சிகரெட் குடித்தோம்; இனிமேல் தளபதி தகரடப்பா சபாவின் சேவைகளைப் பற்றி உங்களிடம் அளப்பார்! அதை எல்லோரும் கைதட்டி, ஆரவாரம் செய்து வரவேற்க வேண்டும். உம், கைதட்டுங்கள்!

உடனே கைகள் மோதின. சுளுக்கு விழுந்த விரல்கள் சொடக்கு முறித்துக் கொண்டன. ஆடிக்காற்றிலே புளியம்பழம் விழுவதைப போலக் 'கிளாபஸ்' கள் உதித்தன. இந்த அதிர் வேட்டுகளுக் கிடையிலே தளபதி தகரடப்பா கம்பீரமாக எழுந்து நின்றார்.

"ஸார், பய பெரிய ரௌடி! தகரடப்பான்னு சொன்ன அழுத பிள்ளை வாயை மூடாது"

தகரடப்பாவை உச்சி முதல் உள் ளங்கால் வரை பார்த்தேன். பில்லியன் சீட் ஸ்பிரிங் கம்பிகளைப் போல வளைந்து சுருண்ட மயிர்கள்! எப்போதுமே அதற்கு 'ஹாப்ரி கேஷன்' கிடையாது போலும்! செம்மறியாட்டுக் கொம்புபோல வளைதது முறுக்கி விடப்பட்ட மீசைமேல் எலுமிச்சம் பழத்தைக் குத்தினல் அப்படியே நிற்கும். கழுத்திலே 'தாயத்து' கட்டப்பட்ட கருப்புக் கயிறு. ரௌடி ஜிப்பா! இத்தியாதி வகையறுக்கள்!

பண்டாரம், இவனை எங்கேயோ பார்த்திருப்பதாக ஞாபகம்"

"எங்காவது பொதுக் கூட்டங்களிலே பார்த்திருப்பீங்க ஒரு கூட்டம் தவற மாட்டான்"

"இல்லையே பண்டாரம், எங்கேயோ ரயில்வே ஸ்டேஷனில் பார்த்ததாக நினைவு"

"நீங்க ஒண்ணு! பத்து வருஷமாக இந்த ஊரிலேயே காம்ப்! மெட்ராஸிலேயே அவனுக்கு நெறைய வேலையிருக்கு"

"ஸ்டேஷனிலே, டிக்கட் ரூமுக்கு மேலே இவனுடைய போட்டோ ஒண்ணு போட்டிருக்கு பண்டாரம்"

"இருக்கும் ஸார், இருக்கும்! இப்போதுதான் தேசத் தலைவர்களின் படங்களை நகரசபைகளிலும், மண்டபங்களிலும் திறந்து வைத்துக் கொண்டு வருகிறார்களே! அது மாதிரி நமது தகர டப்பாவின் படத்தையும் யாராவது கலெக்டர் ரயில்வே ஸ்டேஷனில் மாட்டியிருப்பார்"

"புரிந்து கொண்டேன்; இவருக்குப் போலீஸ் பாதுகாப்பு அதிகமோ?"

"என்ன சார் இது? நேருவுக்கே எங்கே போனாலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு இருக்கு. அவர் மெட்ரா

# கல்வி

**கோ.ப.சே**

**பல்லவி**

கல்வியில் சிறத்தல் வேண்டும்—பெண்ணே
காண்பவர் போற்றும் அளவில்! (கல்வி)

**அனுபல்லவி**

பல்வித கலைகள் பயின்று — எதிலும்
பயன் தரும் செயலைப் புரிவாய்! (கல்வி)

**சரணம்**

எழுச்சியுறும்நற் பெண்கள் — நாட்டின்
இணையில் லாதிருக் கண்கள்!
வீழ்ச்சி யுறும்தீச் செயல்கள் — பெண்ணல்
விளையும் அறிவின் வயல்கள்!

ஸுக்கு வந்து போனதிலே அவருடைய பாதுகாப்புச் செலவு மட்டும் கிட்டத் தட்ட ஒரு லட்சம் ரூபாய்—கிராஸ்வேர்டு பம்பர் பிரைஸ்—ஆகியிருக்கிறதாம்! ஆனைப் பட்ட அம்மியும் குழவியுமே ஆகாயத்தில் பறக்கும் போது......... சரி, சரி, அதோ அவன வாயைப் பொளக்கிறான்; கேளுங்கள்"

"அக்ராசனர் அவர்களே, அன்பர்களே, கேளுங்கள்; பொதுவாக இந்த சீசன மிகவும் மோசமான சீசன்! நமக்குத் தோல்விமேல் தோல்வியாகவே வந்து கொண்டிருக்கிறது. நமது அரும் பெரும் தலைவர்—சக்ரவர்த்தி திருமகனார் பஜகோவிந்தசசிடர்—அவர்களே 'மகத்தான தோல்வி' என்று பத்திரிகையில் எழுதிவிட்டார். அது கிடக்க, சென்ற ஒரு மாதத்தில் மட்டும் நாள் ஒன்றுக்கு ஒரு கூட்டம் வீதம் நாற்பத்தெட்டுப் பொதுக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறோம். நமது எதிரிகள் நடத்திய கூட்டங்களில் இரண்டில் குழப்பம் உண்டாக்கியிருக்கிறோம். நமது பொதுக்கூட்டசெலவுக்காக அரியாயபுரி ஆதின கர்த்தா பிடிவாதத் தம்பிரான் அருளிய ஆயிரம் ரூபாய் நன் கொடையிலே, எதிரிக் கூட்டங்களைக் கலைப்பதற்கு சரளைக் கற்கள் இரண்டு வண்டி— இரநூறு ரூபாய, நமது கூட்டங்களுக்கு ஆள் சேர்க்க ஐநூறு ரூபாய், பேச்சாளர்களுக்குத் தாக சாந்திக்காகப் 'புதுச்சேரி' வாங்கியதில் ஒரு நூறு ரூபாய் ஆக மொத்தம் தொளாயிரம் போக, மீதி நூறு ரூபாயைப் பண்டாரத்திடம் கொடுத் திருக்கிறேன். கூட்டங்களை நடத்துவதிலும், கலைப் பதிலும் பங்கெடுத்துக் கொண்டு ஓயாமல் ஒழியாமல் நம்மோடு ஒத்துழைத்த ஸ்ரீமான் சின்ன அனுமாருக்கு இக் கூட்டம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது.........

"சின்ன அனுமாரா? அது யாரு பண்டாரம்?" என்றேன் இடையிலே.

"சும்மா யிருங்க ஸார், அதோ மூலையிலே உடம்பை நெளிச்சிக்கிட்டு இருக்கான் லெ, அவன்தான்"

"இப்போது பண்டாரம் நூறு ரூபாய்க்குக் கணக்குச் சொல்வார்கள்" என்று அகண்ட பாரத் அறிக்கை விடுத்தார். உடனே எல்லோரும் நூறு ரூபாய்—நூறு ரூபாய் என்று கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

"டேய், ஏண்டா கத்துறிங்க, நான் கணக்குக் குடுக்கப் போறனே, அதுக்குள்ள என்ன அவசரம்? இந்தாங்கப்பா, பிட் நோட்டீஸ்—வால்போஸ்டர் அச்சடிக்கக் கூலி, சுவர் எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பு, இங்கே அங்கே போகவரச் செலவு—இது, அது—எல்லாம் சேர்த்து நூறு ரூபாய் ஆச்சு—போதுமா?"

உடனே கைதட்டல்! ஆரவாரம்!!

"இன்னும் யாராவது பேச வேண்டியிருக்கா?"—அகண்டபாரத!

சின்ன அனுமாரும் இன்னொரு நபரும் ஒருவரை ஒருவர் காதுகளைக் கடித்துக் கொண்டார்கள்.

"எனக்காகத் தளபதி தகரடப்பாவே பேசி விட்டதால், நான் பேசுவதற்கு ஒன்று மில்லை. எனவே எனது சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்" என்று கூறி விட்டுச் சின்ன அனுமார் உட்கார்ந்து கொண்டார்.

"இவர் பொதுக் கூட்டங்களில் கூட பேசுவதுண்டா?"

"நல்லாக் கேட்டிங்க, ஸார்! சொற்செல்வன் அனுமார் கூட இவன்கிட்ட பிச்சை வாங்கணும். அடுக்குத் தொடர்லே பேச ஆரம்பிச்சான்னு, எல்லோரும் 'ஆ'ன்னு வாயைப் பொளந்துகிட்டே இருக்கணும். ஆமாம்! பேச்சிலே கொஞ்சம் கொரங்குச் சேட்டையும் இருக்கும், அவ்வளவுதான்!

தயங்கித் தயங்கி ஒல்லியா, உயரமா இருந்த ஒரு உருவம் எழுந்தது.

"ஓ, நீ ஒருத்தன் பாக்கியா? சரி, சரி, சிக்கிரம் பேசித் தொலை. செகண்ட் ஷோ முடிஞ்சி ஆளுங்க வருவாங்க, ஏதாச்சும் சான்ஸ் இருக்கான்னு பார்க்கணும்." என்று அலுத்துக் கொண்டார் தளபதி தகரடப்பா. அந்த உருவம் மீண்டும் தயங்கியது.

"ஏய்யா முழிக்கிற, பாடி அழுவுறது தானே" என்றான் பண்டாரம். உடனே, இப்போது கவி. கரிச்சான் குஞ்சு வீர முழக்கம் செய்வார்' என்று ஒலி பரப்பினர் அகண்ட பாரத்! அப்போது தான அதன் முகம் மலர்ந்தது.

"கவியா?" என்றேன்.

"ஆமா, வாறு ஒண்ணு தான இல்லே!"

கவிஞர் முழக்கம் இது:—

''வீரர்களே' சூரர்களே!
வீறுகொண்ட காளைகளே!
பாரினிலே நேரினிலே
பாடவந்த கரிச்சான்குஞ்சு
சீருடனே வணக்கம் சொன்னேன்
செப்புவது கேட்பீர்!
நாட்டினிலே வீட்டினிலே
பாட்டையிலே கோட்டையிலே
நாளுக்குநாள் ஓங்கியுமே
காலராபோல், காற்றைப்போல்,
காட்டாற்று வெள்ளம்போல்,
கதிரவன்போல் பரவிவரும்
கழகத்தையே ஒழித்திடவே
ரத்தத்தினுல் எழுதிச்
சத்தியமும் செய்தோம், இனிச்
சித்தம் கலங்கோம்!
பித்தம் தெளியோம்!
ஒழிந்தே தீருவோம்!
அழிந்தே முடிப்போம்!

ஹா......ஹா...... மேசை மீதிருந்த டீக் கோப்பை களெல்லாம் வீர உணர்ச்சியால் துள்ளிக் குதித்து ஆகாயத்தில் பறந்தன.

''வாழ்க பஜகோவிந்தம்!
வீழ்க நிஜகோவிந்தம்!!

கவிஞர் உட்கார்ந்தார். மீண்டும் இருபது சிங்கிள் சாயாக்கள் பறந்து வந்தன. உடனே பண்டாரம் எழுந்து 'கூட்டம் கலைந்தது, இனிச் சொந்த வேலைகளைப் பார்க்கலாம்' என்றார் தளபதி தகரடப்பா 'சினனவரை'க்கூட்டிக் கொண்டு உடனே வெளியேறினர். அகண்ட பாரத்துக்கு வாய்நிறையத் தூககம்! கொட்டாவி அவர் தாடையைப் பிளந்தது. அங்கேயே 'அனந்த சயனம்' செய்துகொண்டார். கவி. க. குஞ்சை அப்படியே கற்பனை யுலகத்தில் மிதக்க விட்டுவிட்டு, நானும் பண்டாரமும் வெளியே வந்தோம்.

"பண்டாரம், உன்னுடைய 'பிஸினஸ்" எபபடி இருக்கிறது?" என்றேன்.

"பெட்டிக் கடை வியாபாரத்தைப் பத்திக் கேக்கிறிங்களா? அதை விட்டுத் தொலைச்சி ரொம்ப நாளாச்சி! இப்போ 'அரசியல் பிஸினஸ்' நடத்துகிறேன். எத்தனையோபேர் எத்தனையோ விதமாக அரசியலைப் பயன்படுத்திக்கொண்டு பணத்தை வாரிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே 'நம்மது' தனிரகம்!

"திராவிட கழகத்தை ஒழிக்க வேண்டுமா?— பிடிவாதத் தம்பிரான் மடிமடியாகத் தருவார். கம்யூனிஸ்டுகளை விரட்டவேண்டுமா?—முதலாளிகள் அள்ளி அள்ளித் தருவார்கள்.

கேட்டபொழுது கேட்ட தொகை வந்து விடும். ஆனால் அவர்களை எல்லாம் அடியோடு ஒழித்துக்கட்ட எங்களால் முடியவே இல்லை, ஸார்! ஆனைப்பட்ட எங்கள் சக்ரவர்த்தியே அவர்களுடைய கணக்கைத் தீர்த்து விடுகிறேன் என்று கர்ச்சித்தார். பாவம், அவருடைய கணக்கைத்தான் தீர்த்துவிட்டார்கள்!

"இன்னொன்று! அவர்களை ஒழித்து விட்டால் என்னுடைய 'பிஸினஸ்' டல்லாகிவிடும். எனவே அவர்களும் வாழவேண்டும்; இவர்களும் வாழவேண்டும்; எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே யல்லாமல் வேறொன்றறியேன் பண்டாரம் நானே!"

"சபாஷ்!"

"ஸார், பெர்னார்ட்ஷா என்பவர்: முட்டாள்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அயோக்கியர்களால் நடத்தப்படும் ஜனநாயகம்னு சொன்னாராம். ஆனால் நான் அப்படி சொல்ல மாட்டேன். அரசியலிலே நேர்மை, செல்லாக்காசு! கண்ணியம் என்பது கள்ளநோட்டு! ஜனநாயகம் ஒரு விளையாட்டுப் பொம்மை!"

"கூத்தாடி மீசைபோல் நிலையில்லா வாழ்வு அரசியல்" என்றேன்.

"கழுதையை விட்டுத் தள்ளுங்க, ஸார்" என்று அலட்சியமாகப் பெருமூச்சுவிட்டான். பிறகு எதையோ நினைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

"ஸார், நீங்களுந்தான் எத்தனையோ மாநாடுகள், பொதுக் கூட்டங்களை வெற்றிகரமாய் நடத்தியிருக்கிறீர்கள்—இல்லையா?"

"ஆமாம்"

"ஆனால் ஒரு கூட்டத்தையாவது கலைத்திருக்கிறீர்களா?"

"ஏன் இல்லை. எத்தனையோ கூட்டங்களிலே நன்றியறிவிப்புச் செய்திருக்கிறேன். நன்றிகூறும் பொழுதே, கூட்டம் தானாகக் கலைந்துவிடும்."

"நன்றி கூறும் வரைக்குமாவது ஆளுங்க இருக்கானுகளே! எங்க கூட்டங்களிலே சில சமயம், 'திருவாளர் திருஞானம் பேசுவார்' என்று சொல்லிவிட்டால் போதும். இருக்கிற ஜனங்கள் போன இடம் தெரியாது. தலைவரும் ஒலிபெருக்கியாளரும் தான் இருப்பார்கள். ஆனால் நான் சொல்வது அது, அல்ல; நடந்து கொண்டிருக்கும் கூட்டத்தைத் திடீரென்று கலைக்கவேண்டும். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது என்று மறுநாள பத்திரிகைகளில் வரவேண்டும். உங்களால் முடியுமா?"

"என்னால் நிச்சயம் முடியாது. இரண்டாவது என்னைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த இரகசியம் தெரியாது."

"நாளைக்கு ஒரு பொதுக்கூட்டத்தைக் கலைக்கப் போகிறோம். வந்து பாருங்கள்"

"வேண்டாம்; பிறகு அந்தத் தொத்து நோய் என்னைப் பிடித்துக் கொண்டால் உங்கள் கூட்டங்களுக்குத்தான் ஆபத்து!"

அப்போது வெளியே போயிருந்த தகாடப்பா ஒரு சந்துக்குள்ளிருந்து ஓடிவந்தான்.

"என்னடா, அது?" என்றான் பண்டாரம்.

"ஒரு சான்ஸ் வந்திருக்கு"

"இந்த ராத்திரியிலா?"

"ஆமாம். விடியிறதுக்குள்ளே காரியம் முடிஞ்சாகணும். ஐநூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்கிட்டேன்"

"இப்படிக் கொண்டா அதை...... ஹூம்...ஐநூறு ரூபாயா...ஆமாம், விஷயம் என்ன?

"நம்ம திருவல்லிக்கேணி, மைலாப்பூர் ஏரியாவிலுள்ள சினிமா போஸ்டர்களை யெல்லாம் உடனே கிழித்தாகணும். நம்ம ஊரிலே புதுசா ஒரு படம் வந்திருக்கு. படம் ஓடக்கூடாதுங்கறதுக்காக, போஸ்டரைக் கிழிக்கச் சொல்லி ஒரு மகானுபாவன் ரூபா கொடுத்தான்."

"அவன் வாழ்க! போய் ஒரு 'பக்கட்' எடுத்துக்க. அகண்ட பாரத்தை எழுப்பிவிடு. சின்ன அனுமாரை எங்கே? புறப்படு" என்று கூறிவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தான் பண்டாரம்.

"இது இடைக்கால வேட்டை! நீங்க போயிட்டு வர்றிங்களா? இன்னொரு சமயம் சாவகாசமாய்ப் பேசலாம்" என்றான்.

நான் விடை பெற்றுக்கொண்டு விடுதிக்குத் திரும்பினேன்!

❀

# அமுதமும் நஞ்சும்

ஈ. கோ. கதிரவன்

நண்ப,

வழக்கம் போல என்னால் நலம் என்று எழுத முடியவில்லை. என் உள்ளம் உடைந்து அது உருத் தெரியாமல் போய்விட்டது. நஞ்சு கொண்ட நெஞ்சினரின் வஞ்சகம் என் வாழ்வைப் பஞ்சு போல சிதறிப் பறக்கடித்து விட்டது. பாரில் பாங்காக வாழலாம் என்று எண்ணிய என் எண்ணமெல்லாம் பாழாக்கப்பட்டது பாதகர்களால். கருணையின் சின்னங்கள் என்று நான் எண்ணி இருந்தவர்கள், கடுமையின் சிகரங்களாக — கொடுமையின் குன்றுகளாக மாறி என் மனதைக் கொன்றுவிடுவார்கள் என்று நான் எண்ணவே இல்லை. இப்போதுதான் தெரிகிறது. இன்மொழியையும் நன்மொழியையும் மறந்து புன்மொழி பேசும் புல்லர்களுக்குத்தான் இந்த உலகம்! என்னைப் போன்றார்க்கு இல்லை. வரும் நாளும் அருகில் இல்லை.

உனக்கு நான் விளக்கமாக எழுத விரும்புகிறேன். உன்னைத் தவிர வேறு யாருக்கு என் உள்ளக் கருத்தை வெளியிடப் போகிறேன். நீயாவது சிந்தித்துப்பார். அதற்காகத்தான் என்னுடைய கதையை இக்கடிதத்தில் எழுதுகிறேன். இந்தக் கடிதமே நான் எழுதும் கடைசி கடிதம். எனவே ஒன்றையும் மறந்து விடாமல் எழுதுகிறேன். அமுதத்தைப் பெறுவதற்காக முயன்று கொண்டிருந்தபோது நஞ்சு குறுக்கிட்டு என் வாழ்வை நாசமாக்கியதை கூறுகிறேன். நன்றாகப் படித்துப்பார்.

உனக்குத் தெரியும் நான் இருப்பது அஞ்சாமை என்னும் கிராமம். கிராமத்து மக்கள் அஞ்சா நெஞ்சினர்கள் தான். ஆனால் அப்பாவிகள். அறிவு அசைக்க முடியாத அளவுக்கு அறியாமை அவர்களிடம் வேரூன்றி இருக்கிறது. அந்த வேரை வெட்டத்தான் எண்ணி

னேன். ஆனல் வேலியிட்டுவிட்டான் நஞ்சப்பன். என்னுடைய உயிரையும், என் காதலி அமுதாவின் உயிரையும், என் தங்கை இன்மொழியின் உயிரையும் உரமாகப் போடவேண்டி வரும் என்பதை நான் அறியேன்.

நஞ்சப்பனின் தங்கை அமுதா என் இதயராணி என்பது நீ அறியாததல்ல. நஞ்சப்பனுக்குக் காதல், காவியம், கலை இவைகளெல்லாம் தெரியாதவை. தெரிந்தாலும் புரியாதவை. எங்கள் ஊர் ஏரிக்கரையில். நானும் அமுதாவும் நாள்தோறும் மாலையில் சந்திப்போம். அந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டு எங்களை மறந்து மகிழ்ந்திருந்த நாட்கள் எத்தனையோ! கண்ணற்ற காதல் போதையில் நான் தவித்தபோது அமுதா ஆத்திரப்படாமல் தன் பெண்மையைக் காப்பாற்றிக் கொண்டதை நினைக்கும்போது எனக்கு மிகவும் வியப்பாகத்தான் இருக்கிறது. தீஞ்சுவை சொட்டப் பேசுவாள், ஆனல் தீண்டவிடமாட்டாள்—அன்பு கனியப் பேசுவாள், ஆனல் அருகில் விடமாட்டாள்—அத்தான் என்று ஆசையாக அழைப்பாள், ஆனல் திருமணம் ஆகும்வரை செயலில் உரிமை காட்டக் கூடாது என்பாள். அவள் பண்ணோடு இசைக்கும் பைந்தமிழ்ப் பாடல்களுக்கு இந்தப் பாரினையே பரிசாகத் தரலாம். அவள் அழகுக்கு அலங்காரம் தேவையில்லை. நடைக்கு பயிற்சி தேவையில்லை. உடைக்கு மினுமினுப்பு தேவையில்லை. அத்தனையும் அவளிடம் இயற்கையாகவே இருந்தன.

ஒரு நாள் ஏரிக்கரையில் வழக்கம் போல நானும் அமுதாவும் பேசிக் கொண்டிருந்தோம். அங்கே உலாவ வந்த நஞ்சப்பன் எங்களைக் கண்டவுடன் தன் வெறுப்பை முகத்தின் மூலம் காட்டினன்.

“அமுதா, நீ படித்த படிப்பு இவ்வளவு தூரம் உன்னைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது……அன்புக் கரசு, நீ உன் பெயரளவில் அன்புக்கு அரசனக இருக்கலாம். ஆனல் என் தங்கை அமுதாவுக்கு அரசனக இருக்கமுடியாது. உனக்கு ஒரு தங்கை இருப்பதை மறந்துவிட்டாயா?” என்று கூறிவிட்டுப் போய் விட்டான். அமுதா மிகவும் பயந்து விட்டாள், அத்துடன் வருத்தப்பட்டாள். அவளுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறினேன். நஞ்சப்பன் பிடிவாதக்காரன் என்பதை எண்ணும போது எனக்குக்கூட ஐயமாகத்தான் இருந்தது. இந்த சந்திப்புக்குப் பிறகு அமுதாவும் நானும் நீண்ட நாட்கள் சந்திக்கவே இல்லை. அந்த நாட்களில் என் மனம் எவ்வளவு வேதனை அடைந்தது என்பதை விளக்க இந்த ஏடோ எழுதுகருவியோ போதாது.

அத்துடன் மட்டுமல்ல, என் மீது எனது ஊர் மக்கள் கொண்டிருந்த நல்லன்பு மாறத்தொடங்கியது. எங்கள் கிராமத்தில் நான் செய்த சீர்திருத்தங்களை மக்கள் வர வர ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். நான் ஏற்படுத்தி இருந்த இலவசப் பள்ளிக்குப் பிள்ளைகளை முன்பு அனுப்பியவர்கள் இப்போது அனுப்பப் பயப்படுகிறார்கள். காரணம் அங்கே ஆண்டவனைப் பற்றிய படிப்பே கிடையாதாம். கோயில் திண்ணையில் வாரம் ஒருநாள் திருக்குறள் வகுப்பு நடத்திவந்தேன். நான் சொல்லித் தந்ததற்கும் கோயிலுக்கும் ஒரு விதத் தொடர்பும் இல்லையாம். எனவே திருக்குறள் வகுப்பையும் தடைசெய்து விட்டார்கள். நான் செய்தவைகள் எல்லாம் என் நன்மைக்குச் செய்து கொண்டேனம். இப்படி சிறிது சிறிதாக மக்கள் என்மீது மாறன எண்ணம் கொள்வதற்குக் காரணம் என்ன என்பது எனக்கு நீண்டநாட்கள் தெரியாது. பெரியவர்கள் என்னிடம் சில ஆலோசனைகளைக் கேட்பார்கள், அவர்களும் என்னிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டார்கள். கிராமத்திலுள்ள குழந்தைகள் எல்லாரும் என்னிடம் அன்புடன் விளையாடுவார்கள், அவர்களும் வருவதில்லை. எனக்குப் பொழுது போவது மிகவும் கடினமாக இருந்தது.

ஏரிக்கரையிலேயே என் பொழுது முழுவதையும் போக்கிக் கொண்டிருந்தேன். அங்கு ஏதாவது எண்ணிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருப்பேன். இப்படித்தான் ஒரு நாள் எண்ணிக்கொண்டிருந்த போது “அன்பு” என்று யாரோ அழைத்தது என் எண்ணத்தைக் கலைத்தது. திரும்பிப் பார்த்தேன். அருகே அமுதா நின்றுகொண்டிருந்தாள்.

“வா அமுதா, இத்தனை நாட்களுக்குப் பிறகாவது என் நினைவு வந்ததே. மகிழ்கிறேன்.”

“என் மனம் நோக பேசுவதில் நீங்கள் மகிழ்வடைகிறீர்களா? என் நிலை உங்களுக்குத் தெரியாதா?”

“இங்கு வந்திருப்பதைப் பார்த்தால் உன் நிலை இப்போது நல்ல நிலை என்று சொல், உண்மைதானே!”

“எப்போதும் உங்களுக்கு இந்த கேலிப் பேச்சுதான். அந்த நேரத்தில் நம் திருமணத்தைப் பற்றிப் பேசி இருந்தால் எவ்வளவோ பயனுள்ளதாக இருக்கும். அன்பு, நம் திருமணத்தைப் பற்றி யோசித்தீர்களா?”

“பேசிக் கொண்டே இருந்தால் பயன் ஏற்பட்டு விடாது. செயலில் காட்டினல்தான் பயன் ஏற்படும்.”

“அதற்குத்தான் வழி சொல்லுங்களேன். அந்த வழியைப் பின்பற்ற நான் எப்போதும் தயார்.”

“வழிதானே……அமுதா, இன்னும் ஒரே வாரத்தில் கண்டுபிடித்து விடுகிறேன்.”

“எத்தனையோ வாரங்கள் சென்று விட்டன. இன்னும் ஒரு வாரமா?”

“அமுதா! நிச்சயமாக ஒரே வாரத்தில் சொல்லுகிறேன்………நமது ஊர்மக்கள்……”

“ஏன்? சொல்லுங்களேன். நமது ஊர் மக்கள் மறுப்பார்கள் என்கிறீர்களா?…ஆமாம் நீங்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவதில்லையாமே! இலவசப் பள்ளிக்குக் கூட சிறுவர்கள் வருவதில்லையாமே!”

“அமுதா, நம் ஊர் மக்கள் ஏனே பழைய பாதையிலேயே செல்கிறார்கள். திருக்குறளில் நமது ஊர் ஆண்டவனைப் பற்றிக் கூறவில்லையாம். பள்ளிக்கூடத்தில் கடவுளைப்பற்றிச் சொல்லித் தருவதில்லையாம். எனவே அவைகள் மதிப்பிழந்தன.”

“நமது கிராமம் என்றைக்குத்தான் முன்னேறுமோ! இது யாராவது செய்த சூழ்ச்சியாகத்தான் இருக்கவேண்டும். நான் செய்த மாறுதல்களைக்கூட கிராமப் பெண்கள் கடைப்பிடிக்க மறுக்கிறார்கள்.”

“உனக்குக் கூடவா மறுப்பு! ஆம் இது யாரோ சிலரின் தூண்டு

தல்தான். உண்மைக்கும், நன்மைக்கும் காலமில்லை என்பதை இப்போது அனுபவத்தில் உணருகிறேன். அதோ...அந்தப் பெரியவர் நல்லதம்பி வருகிறார். அவரைக் கேட்டால் எல்லாம் விளங்கும் என்று அவர் வருகையை எதிர் நோக்கி இருந்தேன். எங்கள் ஊர் வயதானவர்களில் அவர் மிக நல்லவர் என்று நான் எண்ணி இருந்தேன். ஓரளவு படித்தவர். என் சொற்களை நன்கு மதித்தவர். பல நாட்களாக அவரும் என்னிடம் பேசவில்லை. அவர் என்னை நோக்கி வந்தார். என அருகே அமுதா இருப்பதைப் பார்த்தவுடன் அவர் முகம் மாறியது.

"தம்பி! நஞ்சப்பன் சொன்னது உண்மைதான் அமுதாவுக்கு ஏதோ வசிய மருந்துதான் கொடுத்திருக்கிறாய் போலிருக்கிறது. திருமணம் ஆகவேண்டிய பெண் உன்னையே சுற்றிக் கொண்டிருப்பது நல்லதா? பாவம் அவள் என்ன செய்வாள். நீ பட்டணத்திலிருந்து ஏதாவது மருந்து வாங்கி வந்திருப்பாய் அது செய்கிற வேலை"

"என்ன தாத்தா, நீங்கள் கூடவா நம்பி விட்டீர்கள்? வசியமாவது! மருந்தாவது! நானும் அமுதாவும இன்னும் சில நாளில் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்."

"அடபாவி......எங்களை ஏமாற்றியது போதாதென்று அந்த அப்பாவப் பெண்ணையுமா ஏமாற்றப் பார்க்கிறாய்? நாங்கள் விடவேமாட்டோம்."

"எதற்காக நான் யாரை ஏமாற்ற வேண்டும்?"

"ஏமாற்றவில்லையா? கொஞ்சம் கொஞ்சமாக கோயிலுக்கு இருந்த சொத்தை யெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு எழுதி வைத்து விட்டாய். கோயிலில் கடவுளைப்பற்றி ஒரு நாளாவது சொல்லித் தருகிறாயா?"

"இப்போது நமது நாட்டிற்கு வேண்டுவது கல்விதான். கடவுளல்ல."

"ஓகோ! சாமி இல்லேன்னு சொல்ற கட்சியா நீ? நஞ்சப்பனும் தான் பட்டணத்துக்குப் போனான். நல்ல வேளை, அவன் கெட்டுப் போகவில்லை......அவனில்லேன்னு உன் ஏமாத்து வித்தை தெரியாதப்பா. சரி, சரி உன்னோடு பேசுவதே தப்பு.........அமுதா, உங்கப்பன் பேரைக் காப்பாத்தம்மா" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் அந்தப் பெரியவர்.

நஞ்சப்பனின் நஞ்சு உள்ளமே இத்தனை மாறுதலுக்கும் காரணம் என்பது அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. அமுதா ஏரிக்கரைக்குத் தவறாது வந்துவிடுவாள். எங்கள் நிலை குறித்துப் பேசிக்கொண்டே இருப்போம். நஞ்சினும் கொடிய தன் அண்ணனைப்பற்றி அமுதா நெஞ்சடைக்கப் பேசுவாள். அவள் வீர உரைகளே எனக்கு ஊக்கத்தை ஊட்டிவந்தது. நான்கைந்து நாட்களே சென்றிருக்கும். ஏரிக்கரையில் நீண்டநேரம் அமுதாவுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அமுதா சிறிது நேரம் கழித்து வந்தாள். அவள் நடையில் சுறுசுறுப்பில்லை—உடையில் சுத்தமில்லை—இடையில் நெளிவில்லை மொழியில் தெளிவில்லை — விழியில் உணர்வில்லை. நீண்ட நேரம் அழுதிருக்க வேண்டும், இல்லையேல் அவள் கண்கள் அவ்வளவு சிவப்பாக இருக்க முடியாது.

"ஏன் அமுதா இன்று உருமாறிப் போயிருக்கிறாய்? என்ன அமுதா?"

"அன்பு, உருமாறுவதில் பயனில்லை. உள்ளத்தை மாற்றிக்கொள் என்கிறார்களே அந்தப் பாவிகள்."

"எனக்கு விளங்கவில்லையே, தெளிவாகச் சொல் அமுதா."

"எனக்கு அடுத்தவாரம் திருமணமாம். என்னைக் கேட்காமலேயே நிச்சயித்து விட்டார்கள்." அமுதா இதைக் கூறிவிட்டு விக்கி விக்கி அழுதாள்.

"அமுதா, ஏன் அழுகிறாய்? நீயென்ன ஆடா, மாடா? நினைத்தவர்கள் தங்கள் விருப்பம்போல் செய்வதற்கு. உன் உறுதியான உள்ளமும் நானும் இருக்குமவரை நீ எனக்கேதான், நான் உனக்கே தான்."

"விரைவில் ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள். இங்கிருந்தால் எனக்குத் திருமணம் நடத்திவிடுவார்கள். அன்பு, எனக்குப் பயமாக இருக்கிறதே."

"பயப்படாதே அமுதா, இந்த ஊரைவிட்டே ஓடிவிடுவோம். நீயும் நானும் படித்திருக்கிறோம். எங்கிருந்தாலும் அது நம் வாழ்வுக்கு உதவும்" என்றேன் நான். அமுதாவின் கண்கள் நீரூற்றின் வேலையைச் செய்து கொண்டிருந்தன. என் கைக் குட்டையைக் கொண்டு அதைத் துடைத்தேன். அமுதா என் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள். துயரத்தால் விம்மும் அவள் நெஞ்சித் துன்பத்தினை என் நெஞ்சு நன்கு அறிய முடிந்தது. அவள் என்னை நோக்கி நிமிர்ந்தாள். அவள் உதடுகளிலே ஒருவித துடிப்பு இருந்தது. சிறிதுநேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அன்பு" என்றாள் அவள்.

"அமுதா" என்றேன் நான். பின்பு நாங்கள் பேசிக் கொள்ளவில்லை. எங்கள் அதரங்கள் பேசிக் கொண்டன. அப்போதுதான் அவளை முதன் முதலாக முத்தமிட அனுமதித்தாள். நண்பா! அதுவே கடைசியாகவும் முடிந்ததே! அந்த மோனநிலையில் எவ்வளவு நேரம் இருந்தோமென்று எனக்குத் தெரியாது. என் முதுகில் ஒரு பலமான அடி விழுந்த பின்புதான் எனக்கு நினைவு வந்தது. என்னை அடித்தவன் வேறுயாருமல்ல, நஞ்சப்பனே தான். திரும்பினேன் என் கன்னத்திலே ஒரு அறைவிழுந்தது. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"டேய் அன்புக்கரசு! உனக்கு ஒரு தங்கை இருப்பதை மறந்துவிடவில்லை நான். என் தங்கையை அடைந்து விட்டதாக மனக் கோட்டை கட்டாதே" என்று கத்திக்கொண்டே அமுதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டான். பின்பு அமுதாவை நான் பார்க்கவே இல்லை. பத்து நாட்களுக்குப் பின் வழக்கம்போல ஒரு நாள் ஏரிக்கரைக்கு வந்தவன் நடுப்பகல் உணவுக்குக்கூட வீட்டிற்குச் செல்லவில்லை. அமுதாவை எண்ணிக் கொண்டே இருந்துவிட்டேன். மாலை நான்கு மணி இருக்கும். என்னை நோக்கி ஒரு சிறுவன் ஓடி வந்தான்.

199111

"மாமா, அமுதா அக்கா அறியாமை கிராமத்திலே செத்துப் போச்சு" என்று கூறி அழுதான். என் தலையில அனுகுண்டே விழுந்

தது போலிருந்தது. "தம்பி உனக்கெப்படித் தெரியும்" என்றேன் நான்.

"எங்கப்பா, அம்மா, நான் எல்லாரும் அமுதா அக்கா கல்யாணத்துக்குப் போயிருந்தோம். அறியாமை கிராமத்து மிராசுதார் மகனைக் கட்டிக்க மாட்டேன்னு அக்கா அழுதுகிட்டே இருந்திச்சு. அப்புறம் கல்யாணத்துக்கு மூந்தின ராத்திரி விஷம் தின்னு செத்துப்போச்சு. கல்யாண வீடு சாவு வீடாப்போச்சு. நாங்க அழுதுட்டு திரும்பி வந்துட்டோம். அக்கா செத்துப் போசசு நீ போகலையா மாமா?" என்றான் அச்சிறுவன்.

"ஐயோ......அமுதா...அமுதா" என்று ஓடினேன். என் இதய ராணியைக் காண ஓடினேன். ஆனால் அவள் ஓடிவிட்டாள்.

தற்கொலை செய்து கொண்டது போலீசுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக அவளை எரித்துவிட்டார்களாம். என் உடலைத்தான் எரிக்கவில்லை. உள்ளத்தை எரித்துவிட்டார்கள். என் மனக்கோட்டைகளெல்லாம் எரிந்து போய்விட்டன. நலிந்த உள்ளத்துடன் வீட்டுக்கு நடந்தேன். என்னை மறந்து நடந்து கொண்டிருந்தேன். அமுதாவைத் தவிர என் எண்ணம் வேறு எங்கும் செல்லவில்லை. என் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. கால்கள் நடக்கமுடியாமல் தள்ளாடின. தெருவில் படுத்திருந்த ஒரு நாயின் மீது எனக்குத் தெரியாமல் கால் வைத்து விட்டேன். அது என்னுடைய காலைப் பதம் பார்த்து விட்டது. காலில் இரத்தம் வழிந்து ஓரிடத்தில் கட்டியாகிப் போயிருந்தது. நான் வீட்டை அடைந்தபோது மணி இரவு ஒன்பது இருக்கும். அப்போதும் வீட்டில் விளக்கேற்றப் படவில்லை. கதவு பாதி திறந்திருந்தது. என் தங்கை இன்மொழியின் நடமாட்டமும் வீட்டில் இல்லை. எனக்கு அச்சமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. விளக்கை ஏற்றிவிட்டு என் மேசைக்குச் சென்றேன். அதன் அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். மணி பன்னிரண்டு அடித்த பின்புதான் தங்கை இன்மொழியைக் காணவில்லை என்று உணர்ந்தேன். என் மேஜையின் மீது ஒரு கடிதம் நன்கு தெரியும்படி வைக்கப் பட்டிருந்தது. அதன்மீது "அண்ணன் அன்புக்கரசுவுக்கு" என்று எழுதி இருந்தது. எழுத்துக்கள் என் தங்கையின் கையெழுத்தைப் போன்று இருந்ததால் உடனே எடுத்துப் படித்தேன். நஞ்சப்பன் செய்த இரண்டாவது நாசவேலைதான் அந்தக் கடிதம். நண்பா! நஞ்சு என்னைத்தான் நாசமாக்கியது என்றால் இன்மொழியையும் கொன்றுவிட்டது. அந்தக் கடிதத்தைப் படித்தேன்.

"அன்புள்ள அண்ணா,

இன்று மாலைவரை உங்கள் தங்கை மாசற்றவளாகத்தான் இருந்தாள், ஆனால் இறக்கும்போது மாசு நிறைந்தவளாக, கற்பிலே குறைந்தவளாக இறக்கிறாள். நீங்களும் அமுதாவும காதலர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் காதல் களங்கமற்றது. நஞ்சப்பன் அதைக் களங்கமாக்கி விட்டான். அதன் முடிவு அமுதாவின் ஆவி பிரிந்ததுதான். இன்று மாலை நஞ்சப்பன் நம் வீட்டிற்கு வந்தான். "இன்மொழி! உன் அண்ணனால் என் தங்கை இறந்துவிட்டாள். அவன் இல்லாதிருந்தால் அமுதா எப்படியாவது வாழந்திருப்பாள். காதலாம்........ காதல், என் தங்கையைக் கெடுத்த அவனுடைய தங்கையாகிய உன்னை கெடுக்கத்தான் வந்திருக்கிறேன். உன்னைக் கெடுத்து ஊர் சிரிக்க வைக்கிறேன் பார்" என்று இது போல எவ்வளவோ தகாதவற்றைப் பேசினான். அவன் பேச்சோடு மட்டும் நிற்கவில்லை. அவனுடைய மிருகப் பிடியிலிருந்து மீளமுடியாமல் தன்னுடைய வெறிக்கு என்னை ஆளாக்கிக் கொண்டான். பெண்மைக்கே சிறப்புஉரிமையாம் கற்பை இழந்து நான் வாழவிரும்பவில்லை. நீங்கள் இக்கடிதத்தைப் படிக்கும் போது நான் எங்காவது இருப்பேன். உயிரோடு அல்ல—பிணமாகத்தான் இருப்பேன். வணக்கம்.

இப்படிக்கு,
உங்கள் தங்கை
இன்மொழி."

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்தேன். "ஐயோ இன்மொழி... நஞ்சப்பனின் சதிக்கு நீயுமா இரையாகிவிட்டாய். ஒரு பாவமும் அறியாத உன்னைக் கெடுத்தானே வஞ்சகன்......அமுதா இன்மொழியைத் துணைக்கு அழைத்துக் கொண்டாயா? அமுதா......என் அன்புக் களஞ்சியமே! இன்மொழி......என் அருமைத் தங்கையே! எங்கே நீங்கள்?" அவர்கள் பிணமாகிவிட்ட பின்பு கதறி என்ன பயன் நண்பா? அமுதும் நஞ்சும் என் வாழ்வில் குறுக்கிட்டன. நஞ்சு அமுதத்தை வென்றுவிட்டது. அமுதத்தைச் சேர்ந்தவர்களையும் கொன்று விட்டது. அன்பே உருவான காதலி — நற்பண்பே உருவான தங்கை, இனி பார்க்க முடியாதவர்களாகிவிட்டனர். இனி நான் எங்குசெல்கிறேன்? எதற்காக? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

நண்பா, ஓயாத கடல் அலையைக் கேள்! பாசி படிந்த பாழும் கிணற்றைக் கேள்! மரத்தின் கிளையைக் கேள்! அதற்குத் துணையாகும் முழக் கயிற்றைக் கேள்! ரயில் பாதைகளைக் கேள்! அதன் மீது செல்லும் வண்டியின் சக்கரங்களைக் கேள்! ஆழமான ஆற்றைக் கேள்! அங்கே இருக்கும் பாறைகளைக் கேள்! கோப்பைகளைக் கேள்! அதன் மூலம் வாழ்வுக்கு முடிவு காணும் நஞ்சைக் கேள்!

ஆனால் நீதி மன்றத்தைக் கேட்டு விடாதே! அவைகளின் போக்கே விசித்திரமானது! சாதி, மதங்களிடம் கேட்டு விடாதே! அவை நீதியை விட விசித்திரமானவை! அவற்றை வளர்ப்போரிடம் கேட்டு விடாதே! அவர்கள்தான் இந்தப் பாழும் நிலையைப் பாரில் வளர்த்ததற்காக எதிர்காலத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்கப்படவேண்டியவர்கள். நண்பா நான் எங்கு இருக்கிறேன் என்பது உனக்குத் தெரியாது, ஏன்? எனக்கே தெரியாது.

●


ஊடுருவி—எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. | வீரமங்கை ஜோன் | 1 0 |
| 2· | ரோமியோ-ஜூலியத் | 1 0 |
| 3 | லைலா—மஜ்னு | 1 0 |

விபரங்களுக்கு :
கலைமன்றம்—சென்னை-1

## இலக்கியப் பகுதி

இரண்டாவது

# யாவளோ இவள்?

வே. கபிலன்

காதல் என்பது ஒரு பெரிய நோய். அப்பப்பா! அந்த நோய் மன அடக்கத்தோடு நிற்பதனறு; வெளியுலகத்திற்கும் 'தான் யார்' என்பதை சுட்டிக்காட்டுவது என்பதை அவள் உணர்ந்தாள்; உணர்ந்த நிலையில் தன் தலையை கீழே சாய்த்தாள். நோய் கொண்ட ஒருவன் அந்த நோயை பிறர் காணாதவாறு அதாவது வெளியுலகத்திற்கு தெரியாமல் இருப்பதற்கு மறைக்கிறான, இருந்தாலும் அந்நோயின் வலிமையால் அது சில நாளில் வெளியாகிவிடுகிறது. அதுபோல் ஆகிவிடுமோ என்று பயந்தாள். காற்றின் மிகுதியால் மணங்கமழும் மலர்கள் வளைந்து வளைந்து ஆடுவதுபோல் அவளின் கருவிழிகண்கள் அவனையே மருண்டு மருண்டு பார்த்துக்கொண்டிருந்தன. நாம் வந்த நேரம் சரியில்லையோ என்னவோ தெரியவில்லை என்று அவள் நினைத்தாள். இத்தனை நாள் வருவதுபோல் விடியற்காலையிலேயே வந்திருந்தால் இந்த வேதனைத் தருகின்ற நோயை நாம் அடைய வேண்டியதில்லை. ஆனால் எப்படியோ-எந்தவிதமோ சூழ்நிலை நம்மை காட்டிக் கொடுத்துவிட்டது. அதற்கு நான் எனனதான் கொடுமை செய்தேனோ தெரியவில்லை. எப்படியோ என்னை சுட்டிக் காட்டிவிட்டது. இதுதான் அதனுடைய குணம்போல் தோன்றுகிறது! என்று தனக்கு துயரத்தை உண்டாக்கிய சூழ்நிலை மீது பகைத்துக் கொண்டாள். இனி ஊராருக்கு பயப்படவேண்டும், உற்றார் உறவினருக்கு அஞ்சவேண்டும், பெற்ற அன்னைக்கும், வளர்த்த செவிலித்தாயிக்கும் என்றும் ஒரு குற்றமும் செய்யாதவள் போல் இனிமேலும் தோன்றவேண்டும்; அதுவல்லாமல் நள்ளிரவில் சந்திக்கவேண்டும் அவ்விதம் அந்த சந்திப்பிற்கு ஒரு நாள் தலைவன் வாராவிடில், மாணிக்கத்தை இழந்த நல்லபாம்புபோல் துடிக்கவேண்டும். இவ்வளவிற்கும் காரணம் என்ன? இவ்வித எண்ணங்களைத் தூண்டிய சூழ்நிலைக்கு முறையாக என்ன தண்டனை அளிப்பது? என்றெல்லாம் அவளின் மனக்குரங்கு மாறிமாறிப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. அவள் எண்ணுவதுபோலவே மானைத் தேடி வந்த மணாளன் கற்பனை செய்கிறான். அவனின் இதய அலைகள் மெல்ல மெல்ல அவனிடையே மணங்கமழ ஆரம்பித்தது.

துள்ளித் துள்ளி ஓடும் முயலின் அழகைப் பருகாமல், மானைத் தேடி வந்தது பெருங் குற்றமாய்விட்டதே! அந்தப் புள்ளிமானால் ஏற்பட்ட தொல்லைதானே இவ்வளவும்! மல்லிகையைத் தேடிவந்தவன் முல்லையைக் காண்பதுபோல் அல்லவா இம் மங்கையைக் காண்கிறோம். இவளை விட்டுப்போகலாம் என்றாலோ மனம் இடங்கொடுக்கவில்லையே! இதென்ன பெரிய வேதனையாகி விட்டதே! இந்நாள் வரையில் இன்பத்தோடு இருந்ததை விட்டு விட்டு துனபத்தையல்லவா விலைகொடுத்து வாங்கவேண்டியதாகிவிடடது. தன் குஞ்சுவைக் காணாது தேடிச் சென்ற பறவை கடைசியில் கழுகுக்கு இரையாகியது போலல்லவா நம் கதையும் முடிந்துவிட்டது. முன்பெல்லாம் முன்னோர்கள் கூறுவார்களே, காதலென்று; அதுதானா இது? அப்படி உண்மையாகவே இதற்குத்தான் காதலென்று பெயரெனக் கூறிவிட்டால், அந்தக் காதலுக்குரிய கடுமையான துயரத்தை அடைந்துதான் தீரவேண்டுமோ? பாலைவனத்திற்கு ஒப்பிடும் அந்தப் பாழாய்ப் போன காதல் இதுவாகத்தான் இருக்குமோ? அப்படி இருந்துவிட்டால் தப்பவே முடியாதா? வலையிலே சிக்கிய மானின் நிலைதானா? அய்யோ! இபபடி முன்பே நடக்குமென்று ஜோசியம் தெரிந்திருந்தால் இவ்வழியாக வந்திருக்கவே மாட்டேனே! தடாகத்தில் உள்ள தாமரை மலரை கரையிலே கொண்டு வந்தவுடன் வாடி வதங்கி விடுவதுபோல் நாமும் ஆகிவிட வேண்டியது தானா? மானைத் தேடிவந்த நமக்கு இந்தப் பொல்லாத நோய்தான் ஏற்படவேண்டுமா? இதனை நீத்துக்கொள்ள வேறு மருந்தே கிடையாதா? இந்தக் கடுமையான காமநோய்க்கு பலியானவன் மன்னனால் அளிக்கப்பட்ட மரணத்திற்குத்தான் ஒப்பாகுமா? என் உள்ளத்தால் தோன்றிவிட்ட இந்தப் புதிதான வேட்கை என்றுமே மறையாதா? இந்த நோய்க்கு ஆளாகிவிட்டால் நள்ளிரவில் சிங்கத்திற்கும், புலிக்கும் அஞ்சிதான் வரவேண்டியதாக இருக்கும் என்பார்களே, அது என் வாழ்விலும் தலைகாட்டி விடுமா? என்கின்ற கேள்விக்கிடையே அவன் மனம் தன் நிலையிழந்து கிடந்தன.

அவளின் மனம் தடாகத்திலே ஒளிந்தாடும் ஞாயிறுபோல் உணர்வெனும் உருவம் அவள் முன் ஆடிக்கொண்டிருந்தன. அதுபோலவே அவன் கண்முன் தோன்றி நிற்கும் கோமேதகச் சிலையை நினைத்து நினைத்து வெய்யிலைக் கண்டு பனிக்கட்டி உருகுவதுபோல் அவன் உள்ளம் கசிந்துக்கொண்டிருந்தது. உணர்வால் நிகழ்ந்த நிகழ்ச்சி; காதலாக மாறிவிட்டது. 'காந்தமோ அவள்!' என்கின்ற ஆச்சரியம் அவனிடையே தோன்றியது. இவ்வித இருவரின் மனமும் ஒருவரை ஒருவர் சந்திக்க முற்பட்டது. இருவரின் கருவிழிகளும் ஒன்றோடு ஒன்று பார்வையில் பட்டு பதிந்தன. அப்போது அவன் மிகவும் துயரம் கொண்டான். அவள் பார்க்கின்ற பார்வை அவனை அப்போதே கொன்றுவிடுவது போல் தோன்றின. இவள் இரவிலே தோன்றி இன்னல் விளைவிக்கும் மோகினி, என்பார்களே; அவளோ இவள்! என்கின்ற ஒருவித அச்சம் அவனை குடிகொண்டது.மக்களால்ஏற்

(அடுத்த பக்கம் பார்க்க)

இலக்கிய நூல்கள்

| | | |
|---|---|---|
| திருக்குறள் மூலம் | 0 | 8 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 |
| திருக்குறள்விளக்கவுரை | 3 | 8 |
| திருக்குறள் பரிமேலழகருரை | 5 | 0 |
| நீதிநூல் தொகை I | 1 | 8 |
| ,, II | 3 | 0 |

ஸ்ரீமகள் கம்பெனி - சென்னை-1

## பெண்கள் பகுதி

# நர்ஸ் நந்தினி

கோவி. மணிசேகரன்

என் வாழ்வு அகராதியிலே தோல்வி என்ற வார்த்தைக்கே மரண தண்டனை அளிக்கப்பட்டிருந்தது. இது நான் அளிக்கப்பட்டத் தீர்ப்பல்ல......இயற்கையும், மக்களும் இரண்டற கலந்து அளிக்கப்பட்ட தீர்ப்பாகும்.

குமரன் ஆஸ்பத்திரியிலே ஒரு சாதாரண டாக்டராக அமர்ந்த நான், இந்த ஐந்து வருட காலத்தில், என் கத்திக்கு அகப்பட்ட உடல், பூமியின கற்பகத்தில் மறைந்தது கிடையாது! என் மருந்திற்கு அகப்பட்ட நோய் மாற்றான் மருந்திற்கு விருந்தானதில்லை! இந்த அளவில் மருத்துவ நிபுணன் என்று பெயரெடுக்கவே, அந்த ஆஸ்பத்திரியில் தலைமை டாக்டர் பதவியை ஏற்றேன். ஆனால் நேற்று......

தோல்வி என்ற வார்த்தை என் வாழ்வு அகராதியிலே ஏறிவிட்டது. இல்லை, இல்லை......ஏற்றப்பட்டது என்று தான் என் மனச் சாட்சியின் முடிவு.

அதோடு மட்டுமல்ல. தோல்வியும், வெற்றியும் மனிதனுக்கு குளுமையும் வெப்பமும் போன்றது! என்பதை அப்போதுதான் புரிந்துக் கொண்டேன்.

நான் டாக்டராக அமர்ந்த மூன்றாவது வருடம் தான் நந்தினி நர்ஸாக அமர்ந்தாள்.

நந்தினி நல்ல அழகி. முகத்தின் வடிவம் சாதாரணமாக இருந்தாலும் அந்தக் கெண்டைக் கண்களும், பாலைச் சிரிப்புத் தரும் பவழ வாயும், அவளுக் கென்றே அமைந்த ஒரு தனிரசம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த இரண்டும்தான் என் மனதை இஞ்சி தின்ற குரங்காக்கி விட்டது என்று சொன்னால் இதில் ஆச்சரியப்பட வேண்டியதற்கு ஒன்றுமில்லை.

ஆஸ்பத்திரியில் அவளை கண்டால், மற்ற நர்ஸுகளுக்கு ஏனோ பிடிக்கவில்லை...! அவள் என்னிடம் அதிகமாகப் பழகுவதினாலோ அல்லது, மற்ற நர்ஸுகளிடம் நான் பேசுவது போல். அவளிடம் பேசாது, ஏதோ எழுத்தால் சேர்க்கமுடியாத ஒருகாந்த சக்திக்கு அடிமைப்பட்டு பேசுவதைக் கண்டோ, இந்த பசையில்லாத இதயங்கள் அவளை ஒதுக்கின!

சில நாட்களின் ஆராயுதலுக்குப் பிறகே, 'அவள் அழகைக் கண்டுப் பொறாமைப்படும் காரணம்' என்பதை யுணர்ந்துக் கொண்ட நான், பெண்களிடம் பொறாமை இயற்கையிலே குடிபுகுந்துக் கொண்டிருக்கிறது' என்பதை எண்ணிச் சிரிக்காமலிருக்க முடியுமா?

ஒரு ஆண் மற்றொரு ஆணை அழகன் என்று ஒப்புக்கொள்வான். ஆனால் ஒரு பெண், தான் அகோரமாக இருந்தாலும் அழகின் பிறப்பிடமாக இருக்கும் மற்றவளை அழகி என்று மனமார ஒப்புக்கொள்ள மாட்டாள். "உம்...! அப்படி என்ன பிரமாதமாயிருக்கிறாளாம்!" என்று தான் சொல்லுவாள்! என்பதை படித்தறிந்த நான், உண்மை வடிவத்தை செயல் மூலம் ஆஸ்பத்திரியில் நந்தினியின் வருகைக்குப் பிறகுதான் தெரிந்துக் கொண்டேன்.

சிறு பிராயத்திலிருந்து என்னுடன் ஒன்றிப் பழகி வந்த நண்பன் ஜெகத் பிரசாத் ஒரு விஞ்ஞான ஆசிரியர். ஓய்வு நேரங்களில் என்னுடனே ஆஸ்பத்திரியில் இருந்த காரணத்தால், அவனை அங்கு தெரியாதவர் இல்லை. நந்தினி அம்மாளும், எனக்குத் தரும் மரியாதையை அவனுக்கும் தந்து வந்தாள். என்னிடம் சிரித்துப் பேசுவது போல் அவனிடமும் சிரித்துப் பேசுவாள். ஆனால் வித்தியாசம், 'ஒருவன மனைவியுடன், தங்கையுடன் பேசும் வேறுபாடு' இருக்கத்தான் செய்தது.

நந்தினியின் அழகிற்கு நானதான் உயிரைப் பணயம் வைக்கும் அளவிற்கு இருந்தேனே யொழிய, அவள் எனக்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன், 'என் தொழில் திறமைக்கும், நான் அவள் பால் கொண்ட அன்பிற்கு... இல்லை, காதலுக்காக பல ஆப்ரேஷன் நுணுக்கங்களையும், பல நோய்களின் சிகிச்சைகளையும், பக்கத்தில் வைத்துக்கொண்டே காட்டி விளக்கினதற்கு மட்டும் அவள் என்றும் நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறாள்! என்பதை அவள் என்னுடன் நடந்துக் கொண்ட விதத்தில் தெரிந்துக் கொண்டேன்.

அவள் வந்து இந்த இரண்டு வருடங்களில் அவள் உதட்டில் புன்னகை மிதந்தோ, கண்களில் சந்தோஷம் வீசியோ கண்டறியேன். எப்போதும் ஏதோ ஒன்றை பறி கொடுத்தவள் போல் காட்சி யளிப்பாள். அது என்ன வென்பதை அவள் கடிதத்திற்குப் பிறகுதான் தெரிந்துக் கொண்டேன். நான் சந்தேகிப்பது யாவும் பொய்யல்ல என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டேன்.

அன்று விடுமுறை நாள். வீட்டில் சோபாவில் அமர்ந்தவாறு என் வாழ்விலே மிக உயிருள்ளதாகக் கருதும் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தேன். சதா சர்வகாலமும் என் கண் முன்னே தாண்டவமாடும் நந்தினி, அப்போது மட்டும் எப்படி-

(முன் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்ட அந்த பயம் அவனையும் அச்சமுறுத்த இச்சை கொண்டது. அவளும் அந்த ஆண் சிங்கத்தைப் பார்த்தாள். பெரிதும் நாணம் குடிகொண்டன. திருப்பிக் கொண்டாள் தன் முகத்தை! ஆனால் அவனைப் பார்க்க அவளின் உள்ளம் மிகவும் வேட்கையோடு இருந்தன. மறுமுறையும் அவனை நோக்கினாள். அதே நிலையில் அவனும் நோக்கினான். அந்த சந்திப்பு ஒருவரை ஒருவர் மறக்காமல் இருக்கச் செய்யும் காதலாக மாறின.

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து"
—குறள்

இத்தகைய இனிமை பயக்கும் இன்பத்துப்பாலை அடுத்துவரும் குறளில் மேலும் காண்போம்.

○

விலகி இருக்க முடியும்? அவள் அழகை என் சிந்தனை ரசித்துக் கொண்டிருந்தது. ஒரு டாக்டர் சாதாரண நர்ஸின் மேல் காதல் கொண்டிருக்கிறானே, இது என்ன புறம்பான செயல்? கெம்புக் கற்கள் முன்னே மாதுளம் மணிகளை ஒப்பிடுவதா? என்ற மனப்பான்மை உங்களுக்கு ஏற்படலாம்! உண்மையில் சொல்லப் போனால் நான்தான் மாதுளம் பழத்தின் மணி. நோயாளியை வாழவைக்கும் காரணத்தால்! அவள் கெம்புக் கல்தான்! காரணம் பிறரை வசீகரப் படுத்துவதில்.

காதல்—புகழையோ, உருவத்தையோ மதிப்பிடுவதில்லை. உருவம்—கால வெள்ளத்தின் களிமண் பதுமை—புகழ்-அந்தப் பதுமைக்குப் பகட்டுதரும் வர்ணக் குழம்பு என்றால் என் இதயம் நந்தினியை நாடியதில் என்ன குற்றம்.

"ஹலோ! அரன்! என்ன, முகம் சிந்தனைக்கு முகமன் கூறுவது போலிருக்கிறது? மீண்டும் நந்தினியின் நினைவா?" என்று கேட்டவாறு உள்ளே நுழைந்தான் என் நண்பன் ஜெகத் பிரசாத்!

"என்ன செய்வது ஜெகத்! தமிழகத்துக் கடல் தன் நிறத்தை மாற்றிக் கொள்ளலாமென்றாலோ, வானம் அதை விட மாட்டேன் என்கிறதே! என்று நான் கூறவே, இதைக் கேட்ட அவன் சிரித்தவாறு எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

"அது என்னப்பா! அப்பேர்ப்பட்ட சக்தி?"

"கடலைப் போல் உப்பு நீரைக் கொண்ட அவள் கண்களும் வானத்தைக் கௌவிக் கொண்டிருப்பதால் தான்!"

"எப்பா! கேலியாகப் பேசினால் என்னை 'ஓடவுஸ்' என்று கேலி செய்யும் நீ, இப்போது ஷெல்லிக்கும், ஷேக்ஸ்பியருக்கும் போட்டியிடுகிறாய்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை!"

"எப்படித் தெரியும்? காதல், வறுமை, தண்டனை, இம் மூன்றையும் அனுபவிக்கும்போது மனிதன் எண்ணங்களின் பிறப்பிடமாக மாறுகிறான். அப்படித்தான் நீயும் மாறியிருக்கிறாய்!"

"உண்மைதான் ஜெகத்! மயில் விசிறிப்போன்ற அவள் இமைகள்தான் என்னை மயக்கிப் பைத்தியக்காரனாக்கி விட்டது!"

"அதை உன கட்டிலுக்கு காற்று வீச செய்து விட்டால், பைத்தியம் நீங்கி விடுகிறது!"

"உனக்கு எப்போதும் கேலித் தான்!"

"இது கேலியா?"

"உண்மையானால் அதை உருவாக்கும் வழி?"

"சமுதாயத்தைப் பற்றி......!"

"சற்றும் பயமில்லை! எனக்கு வேண்டியது—ஒரு சமயம் கிளியோபாட்ரா தன் மதுக் கிண்ணத்தில் போட்டுக் குடித்த, தமிழ்க் கடலின் முத்துக்களைப போன்ற......"

"நந்தினியின் பற்களை உடைத்து, உன் மதுக்கிண்ணத்தில் போட்டுக் குடிக்க வேண்டும்! அப்படித் தானே...?"

"குறும்புக்காக ஏன் இந்த அவசரம்? அந்தப் பற்களைத் தழுவி யிருக்கும் அவள் பலாச்சதை உதடு!"

இந்த வார்த்தையைக் கேட்டு அவன் 'இடி இடி' என்று சிரித்தான், ஆனால் எனக்கோ சிரிப்பு வரவில்லை!"

கஞ்சா குடித்தவனுக்குத் தானே! மயக்கத்தின் செயல் தெரியும்? இந்த உரையாடலுக்குப் பிறகு ஏதோ சிலவற்றைப் பேசினோம். இருட்டு நெருங்கியது. இருவரும் வழக்கம் போல் சினிமாவிற்குச் சென்றோம்.

சில மாதங்களின் எண்ணிக்கைகள் காலத்தால் விழுங்கப்பட்டதின் பிறகு ஒரு தினம்.

அன்றுதான் என் தோல்வியின் அத்திவாரம்! இன்ப வாழ்க்கையின் அந்தி வானம் என்று சொல்லலாம்.


**விருதை ந. இராமசாமி எழுதியவை**

| | |
|---|---|
| வழுக்கி விழுந்தவள் | 1 0 |
| மலர்புரி ராணி | 1 0 |
| தளபதி | 1 0 |
| தாமஸ் மசாரிக் | 1 0 |
| கருமுகில் | 1 0 |
| புது வாழ்வு | 1 0 |
| இலட்சியப் பெண் | 1 0 |

விபரங்களுக்கு:
கலைமன்றம் - சென்னை-1


விழுப்புரத்திலிருந்து ஒரு நோயாளி என் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார். அவருக்கு வயிற்றிலே வால்குடல் வளர்ந்து வதைக்கப்பட்ட காரணத்தால், ஆப்ரேஷனுக்காக வந்திருந்தார். அப்பன்டிஸைட் கேஸ் எனக்கு சர்வ சாதாரணம் என்று அவர்கள் கேள்விப்பட்டே, என் கத்தியிடம் உயிர் பிச்சைக் கேட்க வந்தார் என்பது முக்கிய காரணமாகும்.

ஆப்ரேஷன் நடந்தது. என் கத்தி உயிர் பிச்சைத் தருவதற்குப் பதிலாக மரணப் பிச்சைத்தான் தந்தது. என்றும் காணாத தோல்வியைக் கண்டு என் மனம் வேதனைப்படத்தானே செய்யும்? ஆஸ்பத்திரியே ஆச்சரியத்தில் மூழ்கியது. காரணம் ஆப்ரேஷன் செய்யும் போது மாண்டிருந்தாலோ பரவாயில்லை—...முடிந்த மூன்றாம் நாள் தையல் உறுதியில்லாமையால் தாரை வார்க்கப்பட்டார்! என்பதை நினைக்கும் போது ஏன் ஆச்சரியத்தில் மூழ்காது?

வீட்டிற்கு வந்த எனக்கு ஒன்றும் தோன்றவில்லை! உட்கார்ந்து உட்கார்ந்து வலம் வந்தேன்......ஆனால் ஒரு இடத்தில் நிலைத்தபாடில்லை. என் மண்டையை யாரோ கோடாலியால் பிளப்பது போலிருந்தது.

"நான் நினைப்பது சரியாகத்தானிருக்குமா? சீ! சீ!! அப்படி இருக்காது? பின்...? பிணத்தைப் பரிசோதித்ததின் பேரில் அது காட்டிய முடிவு...? வேறு யாராகிலும் இருக்கலாமா? உண்மையில் மரணம் தழுவப்பட்டதாகத் தெரியவில்லை......மரணத்தைத்தான் தழுவப்பட்டிருக்க வேண்டும்!"

இப்படி என் சிந்தனை அலைமோதிக் கொண்டிருக்கும்போது தபால்காரன் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்றான். வழக்கம் போல் வரும் கடிதங்களில் அதுவும் ஒன்று என்று அனாவசியமாக அதை மேசை மீது வீசி எறிந்தேன். உறையின் மேல் குண்டு குண்டான கையெழுத்தைப் பார்க்கும் போது தான நந்தினியின் விரல்கள் என் ஞாபகத்திற்கு வந்தது. அவசர அவசரமாகப் பிரித்தேன். ஆம்! நந்தினிதான் எழுதி இருந்தாள்.

டாக்டர்,

உலகத்தின் பிரிவு உபசாரத்திலே, வாழ்க்கையின் அந்திக் கேட்டிலே, உயிரின் கடைசி மூச்சிலே இதை

எழுதுகிறேன். பாதியிலே பறிபோகுமோ என்று பயந்தே கடைசி வரியில் செலுத்தும் நன்றியை முதலில் செலுத்த ஆசைப்படுகிறேன், தாங்கள் எனக்குக் காட்டிய பரிவிற்காக வருத்தம் தெரிவிக்கிறேன், என் மீது கொண்ட காதலுக்காக.

**உலகம் என்னைப் பெண் ருபத்தில் வரவேற்றது—புண் ருபத்தில் வேதனைப் படுத்தியது—விஷ ருபத்தில் ஏற்றுக் கொள்ளுகிறது.**

அன்று ஒருநாள் என்னை, தாங்கள் காதலிப்பதாவும், மணக்கப் போவதாகவும் என்னிடம் கூறினீர். நானும் மறுப்புக் கூருமல் மௌனம் சாதித்தேன். மூன்று தினங்களுக்கு முன், 'அந்த நோயாளி' வராவிட்டால், ஒரு வேளை அது நிறைவேறி இருந்தாலும் இருக்கலாம்" ஆனல் இப்போது?

**நான் பூதத்தின் புதையல். அதைத் தோண்டி எடுத்த ஒருவன், அதன் பசியை அடக்கிவிட்டான்.**

நீலப் பார்வையிலே பிறந்து உமிழ் நீர் ருசித்து—இதயத்தால் வளர்க்கப்பட்டு வாழ்க்கையில் புகுவதுதான் "காதல்" என்று நீங்கள் அன்று சொன்னீர். ஆனல் கடைசி வார்த்தை தான் தவறு. **'மரண வாசலிலே புகுவது தான் காதல்!'** என்பதை இதைப் படித்த பிறகு தெரிந்துக் கொள்வீர்!

அன்று வந்த நோயாளிக்கு நான் ஏன் உங்களைவிட அதிகமாகப் பணிவிடை செய்தேன்? நீங்களே குரோதப் பார்வையில் பார்க்குமளவில் நான் ஏன் நடந்துக் கொண்டேன்? அவன் என் மாஜி காதலன்; இல்லை, மறக்க முடியாத காதலன்!

கல்லூரியிலே இடைநிலை (Inter) வகுப்புவரை ஒன்ருகப் படித்த நாங்கள், காதலின் உச்சத்தை தாவிக் கொண்டிருந்தோம். அம்பிகாபதி அமராவதியோ, லைலாமஜ்னுவோ, ரோமியோ ஜூலியத்தோ எங்கள் எதிரிலிருந்தால் தாங்கள் கட்டுவது காதல் ராஜ்யமல்ல—களி மண் கட்டிடம் என்ற முடிவிற்கு அவர்களே வந்திருப்பார்கள்.

நட்பின் காரணமாக கல்லூரியிலே எங்கள் வாய் பேசும். காதலின் காரணமாக புஷ்பக் காட்டிலே இதயம் பேசும். ஆனல் களங்கமில்லை. அப்படித்தான் நாங்கள் வாழ்ந்தோம். ஆச்சரியப்படாதீர். காதல் என்பது உடல் சம்பந்தப்படுவதல்ல—உள்ளங்களின் சந்திப்பு! இன்பம் என்பது நேர்மைக் கெடுவதல்ல — அதைக் கெடாமல்—மணக்கு முன் — காப்பாற்றுவதே பேரின்பம்' என்று கருதினேம்.

நல்ல குடும்பத்தில் பிறந்த அவர் என்னைத் தவிர வேறு ஒருவரையும் இதயத்தாலும் தீண்டமாட்டேன் என்று தன் பெற்ருேரிடம் கூறவே, அவர்கள், தன் குடும்பக் கௌரவத்தைக் காப்பாற்ற என்னைத் தியாகம் பண்ணும்படி வேண்டினர். அதற்கு பரிசாக 5000 ரூபாய் தருவதாகவும் கூறினர். காரணம் வேற்று ஜாதி பசை எங்களை ஒட்ட மறுத்தது!

ஒரு முடிவின் கீழ் வந்த நான், "காதலன் வாழ்வே தனது வாழ்வாகக் கருதுபவள் எவளோ அவள் தான் உண்மையான காதலி" என்பதை உணர்ந்து நான் அவரிடம் சொல்லாமலே, கல்லூரியை விடுத்து என் ஒரே கிழத்தாயாரை அழைத்துக் கொண்டு சென்னை வந்தேன். நர்ஸ் படிக்க முயன்றேன். படிப்பும் முடிந்தது. நானும் இங்கு வந்தேன். தாயாரும் காற்ருேடுப் பறந்தாள்.

இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் அவரைக் கண்டேன். ஆப்ரேஷன் முடித்த அன்றிரவு அவர் வாழ்க்கையை விசாரித்தேன். ஏதோ குடும்ப காரணமாகத் தள்ளப்பட்ட விவாகம் நேற்று வரையிலும் நடை பெருமல் போய்விட்டதாம். அவரைக் கேட்டால் 'உனக்கு செய்த துரோகம் துரத்திக்கொண்டு வருகிறது' என்கிருர். என் கண்களும் தான் நீர்த் துளிகளைச் சிந்தின.

இப்போது தெரிந்துக் கொண்டிருப்பீர், அப்போதெல்லாம் தங்கள் கேள்விக்கு தக்கபதில் தராத காரணம். நான் சோங்கி இருந்ததின் மர்மமும் இதுதான்!

அவரைத் தேற்ற வேண்டியே அவருக்கு தனி அறை தரச்சொன்னேன். நான் இரவும் பகலும் பக்கத்திலே இருந்து பாது காத்தேன். நீங்கள் நினைத்திருக்கலாம் உங்கள் கேஸ் வெற்றியடைய பாதுகாப்பதாக!

நேற்றிரவு மணி பனிரெண்டிருக்கும். நித்ராதேவியின் அணைப்பால் எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. பால் கொண்டுபோய் அவருக்குக் கொடுத்தேன். அவர் "ஆண், பெண் இதயத்தோடு பேசும் பாஷைக்கு பெயரென்ன" வென்று கேட்டார். இது ஒரு காலத்தில் நான் அவரைக் கேட்ட கேள்வி. நான் பதில் சொல்லவில்லை. மீண்டும் தொந்தரவு செய்ததின் பேரில் "காதல்" என்று அவர் அன்று சொன்ன பதிலை திரும்பச் சொன்னேன். பிறகு ஏதோ பேசினர். எனக்கே சரியாக நினைவில்லை. காரணம் என் புத்தியை அவரை சமாளிக்கப் பிரயோஜனப் படுத்தியிருந்தேன். அப்படியும் என் ரோஜா வலிமை அந்த புயலிடத்தில் பலிக்கவில்லை. நாங்கள் இருவரும் சில நிமிஷங்கள் பிணமானேம். பிறகு நான் உயிர்ப்பித்துக் கொண்டேன். அவர்...?

மறுநாள் நீங்கள் அவர் பிணத்தண்டையில் நின்று கொண்டிருந்தீர் விசனததுடன்! உங்கள் முகத்தில் தோல்வி ரேகை ஓடிக்கொண்டிருந்ததை நான் கண்டேன்.

பரிசோதித்து அறிந்துக் கொண்ட தாங்கள், என்னை பார்த்தப் பார்வை "இப்படியும் ஒரு பெண் இருப்பாயா?" என்று கேட்பது போலிருந்தது. அதை அறிந்த நான் "தவறு என்னுடையதல்ல" என்று வாயால் சொல்வதற்குப் பதிலாக கண்ணீரால் கூறிவிட்டு வீட்டை நோக்கினேன்.

எதற்காக நான் வதங்கப்பட்டேனே, அது என்னல் அழிந்து விட்டபோது, நான் மட்டும் உயிர் வாழ முடியுமா? அப்படித்தான் வாழ்ந்தால் நான் உங்களிடம் வாழ்க்கையின் தித்திப்பை ருசிக்கமுடியுமா? மானச்சாட்சி...

வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தைப் புரட்டும்.

**நந்தினி**

இதைப் படித்து முடித்த நான், அவள் மீது கோபப்படுவதோ, வருத்தப்படுவதோ வென்று தோன்ருமல் தவித்தேன். அவளைக் காணப் புறப்படலாமென்று வாசற்படியைத் தாண்டினேன். அவளைக் கண்ட பிறகு என்ஞல் கணமும் வாழ முடியாது என்று நினைத்த நான் மீண்டும் உள்ளே வந்து அந்த கடிதத்தை தீக்குச்சுக்கு இரையாக்கினேன்.

"என்னைத் தான் கொளுத்த முடியும், உன் நினைவில் நர்ஸ நந்தினியைக் கொளுத்த முடியுமா?" என்று கேட்பது போலிருந்தது அந்த கடிதத்தில் எழுந்த தீசுடர்!

சரித்திர இதழ்

# சாக்கிய குமாரி

விருதை ந. இராமசாமி

அசோகரது அரண்மனைக்கு வரும் போது சாக்கிய குமாரி தாயில்லாத சிறுமி. மலை நாட்டு வியாபாரியான அவளுடைய தந்தை அசோகரிடம் அடைக்கலமாக சேர்ப்பித்து விட்டு சுற்றுலா சென்றார்.

நாட்கள் எவ்வளவு விரைவாக நகர்கின்றனவோ அவ்வளவுக்கு சாக்கிய குமாரியின் பால்ய பருவமும் மாறி யௌவனம் வந்தது. மேனி அழகு முழுக்க முழுக்க அவளைத் தழுவிற்று. பொதுவாகவே பூரணமான அழகைப் பெறுதவர்களுக்குக் கூட இயற்கை ஏதேனும் ஒரு புதுமையை விதைப்பது இயல்பு. ஆனால் பிறப்பிலேயே எழிலின் பொற் குடமாய் திகழ்ந்த சாக்கிய குமாரி இப்போது இளமைப் பருவத்தின் அணைப்பால் மலர் மங்கையென மிளிர்ந்தாள். அவளைக் கண்டோர் சுழற்றி விட்ட பம்பரம் போல ஆடுவர்.

அரச பவனத்திலிருந்து சற்று தொலைவிலுள்ள பௌத்த ஹேத்திரத்திற்கு 'மஞ்சள் நீர்' கொண்டு போய் கொடுப்பது அவளுக்கு தரப்பட்டிருந்த அன்றாட பணி, அசோககால. இந்தத் தொண்டை, வேண்டா வெறுப்புடனேதான் அவள் செய்து வந்தாள். இந்து மத போதனையினால் உருவாக்கப் பட்டவள் அவள். பெற்ற தகப்பன் மதப் பற்றை ஊட்டி வளர்த்து விட்டான். அதன் விளைவு பௌத்த ஹேத்திரத்தின் மீதே வெறுப்பு அவளுக்கு.

இனி தனது தந்தை வரமாட்டாரோ என்ற ஏக்கம் அவள் மனதில் எழ எழ அவர் புகட்டிய மத எண்ணம் மேலும் மேலும் அவளை திடசாலியாக்கிற்று. அதனால் பௌத்த நிலையத்திற்கு நீர் எடுத்தூற்றும் தன் நிலைமையை நினைத்து நினைத்துப் புண்பட்டாள்.

இளமை வாழ்விலே எவருக்குமே பலமான தொரு திருப்பம்—மகத்தானதொரு மாறுதல் ஏற்படுவதுண்டு. இவ்வாறு ஏற்படும் வேளையில் பால்யத்திலே பதித்திருந்த சில கருத்துகள் கூட சிதைவுறும்.

அந்தத் திருப்பம்—மாறுதல் சாக்கிய குமாரியின் பருவகால வாழ்விலும் நிகழ்ந்து விட்டது.

நீர் சுமந்து செல்லும் அந்த பணி மட்டும் கிடைத்திருக்காவிடில் அவள் ஒரு இதய மன்னனை கண்டிருக்க முடியுமா? காதல் மலர்தான் அரும்பு விட்டு துளிர்த்திருக்குமா? தற்செயலாக மகேந்திரனை சந்திக்க நேரிட்டது ஒரு நாள்.

0 0 0

மகேந்திரன்—அசோகரின் இளைய சகோதரன். பேரரசின் எப்பகுதிக்கும் பிரதிநிதியாகப் போக மறுத்து விட்டான. பிந்துசாரரின் மறைவுக்குப் பின் அவனுக்கு அரசியலில் எத்தகைய பொறுப்பையும் ஏற்க பிடிக்கவில்லை.

குங்கும வர்ணக் குடமேந்தி இடை குலுங்க தனிமையில் நடந்து செல்லும் அந்தத் தங்க நிற மேனியாளை—சாக்கிய குமாரியை தினந் தோறும் தரிசிப்பதிலேதான் தனி ஆர்வம்—ஆசை அவனுக்கு.

அசோகர் அவனுக்காக நிர்மாணித்திருந்த பளிங்கு மாளிகை கூட அவன் மனதுக்கு மகிழ்ச்சி யூட்ட வில்லை, சாக்கிய குமாரியின் சுந்தர வதனத்தின் முன்னிலையில். எந்த செயலில் ஈடுபட்டாலும் சரி மகேந்திரனுக்கு அந்தத் திவ்வியமான முகத்தை மட்டும் மறக்கவே முடியவில்லை. அவனது உள்ளத்து பிரேமை நாளுக்கு நாள் பிரகாசிக்க தொடங்கியது.

முடிவு......? வழக்கம் போலவே தான் காதலர் இருவரின் கருத்துக்களும் கலந்தன. இடையே இன்ப முழக்கம்! பிரிவு ஏற்படாத அளவுக்கு பிணைப்பு வலுத்தது-வாஞ்சை வளர்ந்தது.

0 0 0

இதற்கிடையே கலிங்கப் போருக்குப் பின் அசோகர் பௌத்தத்தை தழுவிய போது அவர் மீது அளவிடற்கரிய வெறுப்பு மூண்டது அவளுக்கு.

பௌத்தப் பிரச்சாரம் ஓங்கியது. விரைவில் அசோகரே பிக்ஷுவாகி விடுவார் என்பதை முன்னறிவிப்பாக காட்டுவது போல் அவரது பேச்சும்—செயலும் விளம்பின. மன்னரின் பிரச்சார இயந்திரமாக பிரதிநிதிகள் நாடெங்கும் கிளம்பினர். தான் மாறியதுமல்லாமல் தனது குடிகளையும் மத மாற்றத்திற்கு அழைப்பதை அவள் உள்ளூரக் கண்டித்தாள். ஆனால் இந்து மதம் இது காறும் சாதித்தது என்ன என்று ஒரு வினவை எழுப்பினால் விடையளிக்க முடியாது விழிப்பாள்.

வசந்த காலத்து வளப்பம் மிகுந்த ஆகாயத்தில் நிறைமதி தவழ்ந்து கொண்டிருந்தது. நீலவர்ண மெத்தையின் ஒரு கோடியில் வெண்முகில்கள் நிலவைப் பிடிக்க முயன்றன. பாடலிபுத்திரம் மனோகரமாக விளங்கிற்று. புத்த பெருமானின் சுவர்ண பிம்பத்தை பட்டத்து யானை மீது வீதி வலம் எடுத்து வரும் விழா பிரமாதக நடை பெறும். எங்கு நோக்கினாலும் விழாவின் சோபித சின்னங்கள் அசைந்தாடின. பட்டத்து யானையின் பரந்த முகத்திலே கம்பீரமும்—கர்வமும் ததும்பின. முக்கிய வீதிகள் வழியே பவனி வந்தது விழாவைக் குறித்து விளம்பரப் படுத்திட—அதனைப் பின் பற்றி பல்வேறு இசைக் கருவிகள் முழங்க பரிவாரங்கள் புடை சூழ அசோகர் ஊர்வலம் வந்து கொண்டிருந்தார். இப்படிக்கான உற்சவ சமயங்களில் யானையை வழி நடத்திச் செல்லும் மகேந்திரன் இன்று காணப்பட வில்லை. அவன் இருக்க வேண்டிய இடத்திலே வேறு யாரோ இருப்பதை சாம்ராட் கவனித்தார்.

உடனே ரத குப்தரை அழைத்து "மகேந்திரனை எங்கே?" என்று அதட்டிக் கேட்டார். ரதகுப்தர் மெல்லிய குரலில் பதிலிறுத்தார்.

"நகரின் புற வீதியிலே பார்த்ததாக அக்னி குப்தன் அறிவித்தான்."

"அங்கே அவனுக்கென்ன வேலை?"

"மாமன்னரே! அது விபரம் தங்கட்கு தெரிந்திருக்கு மென்று நினைத்திருந்தேன். அங்கேதான் சாக்கிய குமாரி........"

அசோகர் புரிந்து கொண்டார் இப்போது.

மகேந்திரனை உடனே அழைத்து வருமாறு ஏவலாளனை அனுப்பி விட்டு தாம் தனியாக அரண்மனையை நோக்கி விரைந்தார். இருக்கை கொள்ளாமல்

இங்கும் அங்கும் எண்ணற்ற எண்ணங்கள் ஊசலாட போய்க் கொண்டிருந்தார்.

0 0 0

மகேந்திரன் அமர்ந்திருந்த முற்றத்து தூண் அருகிலே சாக்கிய குமாரி நின்றாள். சந்திரனின் ஒளி அக் கூடத்திலே சொரிந்து கொண்டிருந்தது. அவள் மன திடலில் போர் நடப்பதை அந்த லளித முகம் பிரதிபலித்தது. போரினால் பெருமூச்சின வெப்பம் மகேந்திரனையும் சுட்டெரித்தது.

"குமாரி! ஏன் பேசாமல் நிற்கிறாய்? இதோ கேள் நமது மண விழாவிற்கு ஒருவரும் தடை சொல்ல மாட்டார்கள. அப்படியாரேனும் தடுக்க முயன்றால் பாஞ்சாலமோ அவந்தியோ எங்கு வேண்டுமானாலும் போய் விடலாம் நாம்"! என்று ஆறுதல் தந்தான் அவன்.

அவள் நிமிர்ந்து நோக்கினாள். மறுகணம் அவனுடைய முகத்தில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஒளி விட்டன. அடுத்த வினாடி தனது மௌனத்தை மாறுதலாக எடுத்துக் கொண்ட அவனைப் பார்த்து மனம் நொந்தாள் அவள்.

"அன்பரே! நமது திருமணம் நடைபெறும் என்ற நம்பிக்கையே கிடையாது எனக்கு. என் தந்தை இங்கே இருந்தால் இந்த விவாகத்திற்கு உடன் படுவாரா? நீங்கள் புத்தரைப்போற்றுபவர்கள். யாகத்தையும் ஆத்திகத்தையும் வெறுப்பவர்கள். அசோகர் பௌத்தர். அதிலும் தீவிரவாதி. மன்னியுங்கள். கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது என்றால். என் தந்தையாரின் தூய அன்பை மறக்காமல் வாழ்வு நடத்துகிறேன் என்பதற்கு அறிகுறியாக நானும் எனது மதப்பற்றை இழக்க மாட்டேன். இங்குள்ளசூழ் நிலையை எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. பற்றி எரியும் நெருப்பிற்கு காற்று ஊக்கமளித்தது போல நிலைமை சுழல்கிறது. இந்த சிக்கலில் இருந்து விடுபட— நான் ஆத்ம சாந்தி அடைய—சித்தம் சிறந்த வழி காட்டி விட்டது. தீர்க்கமான முடிவு. எனக்காகத் தாங்கள் அசோகரின் ஆத்திரத்திற்கு ஆளாக வேண்டாம். எனது வழியினின்று விலகி விடுங்கள்."

இவ்வாறு மளமளவென ஆவேசத்துடன் பேசுவாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்தவனல்ல. அவனால் சகிக்க முடியவில்லை—மறுப்பான பதிலும் கொடுக்க மார்க்கமும் தோன்றவில்லை.

அதுவரை முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த வெண்ணிலவின் ஒளி திடீரென்று மறைந்தது-மேகங்களுக்கிடையே கவிந்து கொண்டது. முற்றுப் பெறு காதலிலே முழு இருளா?

அதே சமயம் அசோகர் அனுப்பிய பணியாள் வந்து சேர்ந்தான். அரசர் இட்ட கட்டளையை மகேந்திரனிடம் சமர்ப்பித்தான். ஏதோ பேசலாமென வாய் திறந்தான். சக்தியற்ற நிலையில் நாக்கு அசைய மறுத்தது. வந்த பேச்சும் அப்படியே அவன் இதயத்திலே ஆடி அயர்ந்து புதைந்து விட்டது. வழிந்தோடிய கண்ணீரை துடைத்து விட்டவாறு வாயிலை நோக்கி நடந்தான.

காலடியோசை சிறுகச் சிறுக அடங்கியது.

சாக்கிய குமாரி சேலை முந்தானையால் தன் மதி முகத்தை மூடி மறைத்தபடி விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். அமைதியைக் கிழித்து எழுந்த அந்த விம்மல அதல பாதாளத்தையும் பிளந்து விட்டது போல அதிர்ந்தது.

0 0 0

வெகு தொலைவில் கேட்ட மந்தமான ஒலியைத் தவிர அரண்மனை பூராவும் அமைதியில் மூழ்கிக் கிடந்தது. மகேந்திரனைக் கண்டார்—எழுந்தோடிச் சென்று குழந்தை போல அணைத்துக் கொண்டார் அசோகர்.

"மகேந்திரா! பாராளும் அரசர் என்ற முறையிலே அல்ல உனக்குப் பாத்திய பட்டவன் என்ற முறையிலே வேண்டிக் கொள்கிறேன் உன்னிடம். இன்று முதல் நீ நகரின் கடைசி வீதிக்கு செல்ல வேண்டாம். உறுதி கூறு"

தாக்குதலுக்கு ஆளான நிலையில் திகைத்து நின்ற மகேந்திரன் திடீரென்று ஏதோவொரு உணர்ச்சியால் தாக்குண்டு மறுகணம் உறுதி கூறினான் "போவதில்லை இனி" என்று.

பொருத்தமற்ற ஒரு தொடர்பை அறுத்தெறிந்த வெற்றியின் பெருமை சாம்ராட்டின் கண்களில் ஜொலித்தது.

அங்கிருந்து மகேந்திரன் வெளியேறினான். மதப் பித்து பிடித்து பிதற்றிய காதலியின் கர்ணகடூரமான பேச்சும்—கௌரவத்தைக் காப்பாற்றத் துடிக்கும் அசோகரின் வேண்டுகோளும்—அவனுடைய மனதில் மோதி மோதி வாட்டின.

புத்த பீடத்திற்கு முன்பிருந்த தடாகத்தினோரமாக உலாவினான்—சில்லென்று தண்ணீரின் குளிர்ச்சியை அள்ளி வந்த காற்று அவன் மீது மெல்லென வீசிற்று.

கீழே குளத்தின் படிக்கரை அருகில் சல சல என்று சப்தம் கேட்டது. ஓர் உருவம் கடைசிப் படியில் கை கூப்பி நின்றது. மகேந்திரன் மனம் பதறினான், படித்துறையில் வேகமாக இறங்கினான்! அவனும் நீரினுள் குதித்தான். வீணான முயற்சி. விபரீதத்தின் விளையாட்டை அவனால்நிறுத்த முடியவில்லை.

கைகளை நீட்டி அவ்வுருவை எட்டிப் பிடிப்பதற்குள்ளாக நீரில் ஆழ்ந்தது. அந்த இடத்திலே தோன்றி மறைந்தன நீர்க் குமிழிகள். சிறிது நேரப் போராட்டம்.

அந்த உருவத்தை கையிலேந்திக் கரை சேர்ந்தான். சாக்கிய குமாரியின் கனிவான முகம் தென்பட்டது. "அந்தோ! மதப் பற்று மகத்தான காதலையும் மாய்த்து விட்டதே" என்று அலறினான் மகேந்திரன்.

0 0 0

அடுத்த வசந்த காலமும் வந்து விட்டது.

புதிய பௌத்த பிக்ஷு ஒருவர் அரண்மனைக்கு வருகை தந்தார். வரவேற்பு வழங்க—எதிர் கொண்டு அழைக்க—விரைந்து வந்த அசோகர் பிக்ஷுவை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். "மகேந்திரா!" என்று வாய் விட்டு அலறினார். அந்தக் குரலில் எத்தனை ஆச்சரியம்- ஆனந்தம்.

அசோகருக்குப் பின்பு பௌத்த மதத்தைப் பரப்ப இலங்கைக்கு சென்றவரும் இந்த மகேந்திர பிக்ஷுவே!

அசோகர் தம்மால்தான் மகேந்திரன் பிக்ஷுவாக மாறினான் என்று எண்ணி மகிழ்ந்தார், ஆனால் சாக்கிய குமாரிதான் அவனுடைய மாற்றத்திற்கு ஆதிகாரணமென்பதை அவர் எபபடி அறிய முடியும்! இந்து மதப் பற்றினால் ஈடு இணையற்ற மகேந்திரனின் காதலை மறந்தாள்—உயிரையும் துறந்தாள். இதனால் மகேந்திரன் இந்துவாக அல்ல புத்த பிக்ஷுவாகத் தான் மாறினான். மத வெறி இளமை

விஞ்ஞானம்

# மழை பெய்விக்க...

பா. கலைச்செழியன்

"பஜ கோவிந்தம் பாடு!"

"வேள்வி நடத்து-வேத பாராயணம் செய்!"

"வருண பகவானை நோக்கி துதி பாடு!"

மேற்கண்ட பதில்களை அள்ளி வீசுவர் மதத்தலைவர்களும் ஆத்திக்கத் தோழர்களும்—"மழையை பெய்விக்க!"

இத்தகைய ஆலோசனைகளும்—வேள்விகள் நடத்தி வேதபாராயணம் செய்வோரும் இங்குதான்—நம் நாட்டில் தான்!

ஆனல் மேலைய நாடுகளில்...?

மழையை பெய் விக்கின்றனர்—தேவையான அளவிற்கு,—வேண்டிய இடத்தில்—வேண்டியபோது! ஆனல் பஜகோவிந்தத்தால் அல்ல! வேத பாராயணத்தால் அல்ல!! வேள்வியின் மூலமல்ல!!! விஞ்ஞானத்தால்—அறிவின் துணையால்!

நான் இப்படிக் கூறியதும் "என்னப்பா செழியா! ஏது கதை யளக்க ஆரம்பித்து விட்டாயா?" என்று கேலியுடனும், ஆச்சரியத்துடனும், கேட்பர்.

ஆனல் உண்மையான செய்தி—கற்பனையல்ல—புராணப்புளுகுமல்ல! டாக்டர் வொன்னிகட், டாகடர் லாங்மூர், வின்சென்ட் ஜே. ஷேபர் என்ற மூன்று விஞ்ஞானிகளால் இத்தகைய அரிய காரியத்தை—செயற்கையால் மழை பெய்விக்கும் விஞ்ஞான வித்தை தோன்றியது.

அவர்கள் கண்ட செயற்கை முறை மழையைப் பற்றி இக்கட்டுரை வாயிலாக இனி நாம் தெரிந்து கொள்வோம்.

o o o

ஆறு, நதி, கடல் போன்ற நீர் நிலைகளின் வெப்பமான பாகத்திலிருந்து ஈரம் காற்றில் செல்லுகிறது. இதை ஆவி என்று கூறுவர். ஆவியின் கண் உள்ள ஈரம் கண்களுக்குப் புலப்படாது. காற்றிலுள்ள மற்ற வாயுக்களுடன் ஈரம் கலந்து மேலே செல்லுகிறது. ஈரம் நிறைந்த, காற்று மேலே செலல செல்ல 180 அடி உயரத்திற்கு 1°F வீதம் குளிர்ச்சி யடைகிறது. மேலே உயரும் காற்றின் வெப்ப நிலையும் அதைச் சூழ்ந்துள்ள காற்றின் வெப்பநிலையும் சமமாகும் வரை உயர்ந்து கொண்டுபோய்—சமமான நிலை வந்தவுடன் நின்றுவிடுகிறது. சமநிலை யெய்தியவுடன் மேலும் போக முடியாது நின்றுவிடுகிறது. மெலெழுந்த காற்றின் நீராவி தங்கும் நிலை குளிரகுளிர குறைந்துவிடுகிறது. காற்று மேலெழுந்து குளிரும் நிலை வெகுநேரம் நிகழுமாயின் பூரித (Saturated) மடைகிறது. மேலும் அக்காற்று குளிரும் நிலையை யடையுமாயின் பனி நிலையை யடைந்துவிடும். நீராவியானது சிறு திவலைகளாக மாறும் பனி நிலை யெய்தியவுடன். நீர் திவலைகள் மிக நுண்ணியதாகையால் இவற்றை நீர்த்தூள் (Water Dust) என்று கூறுவர். இவைகளே நமக்கு மேகமாகவும், மூடுபனியாகவும் நமக்குத் தெரிகின்றன. வெகு தொலைவிலிருந்தால் மேகமாகவும், அருகிலிருந்தால் மூடுபனியாகவும் தெரியும்.

மேகத்தின் மேல் பாகத்தில் உறைநிலை (Free Zing) க்குக் கீழாக வெப்ப நிலையை அடையும் போது அவற்றின் நீர்த்துளிகளில் சில பனிப்படிகங்களாக (Ice Crystals) மாறுகின்றன. பனிப்படிகங்களின் உட்கருவைச் சார்ந்து மற்றைய நீர்த்துளிகள் உறைந்து மேலெழுந்து குளிர்வடைகின்றன. குளிர்வடைந்த பனிப்படிகங்கள் வெண்பனி ஏடுகளைப் போல் (Snow Flake Size) வளர்ச்சியுற்று, பெருகி கீழே இறங்கும் நேரத்து வெப்பக் காற்றால் அவை உருகி மழையாக மாறுகின்றன.

டாக்டர் லாங்மூரும், வின்சென்ட் ஜே ஷேபரும் மின்னியக்கச் சம்பந்தமாக ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியின்கண் உள்ள ஆராய்ச்சிசாலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். உலோகத் தகடுகள் மூடுபனியாலும், மழையாலும் பாதிக்கப் படும்போது ஏன் மின் சக்தியை உலோகத் தகடுகள் பெறுகின்றன என்றும்—புயல் வீசும் வெளியில் ஆகாய விமானங்கள் சென்று வந்தவுடன் அதனின் இறக்கைகளில் மின்சக்தி எவ்விதம் காணப்படுகிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தார். இவற்றைப் பற்றிய விவரங்கள் புரியாத நிலையிலிருந்த போது—சற்று மன நிம்மதிக்காக நியூஹாம்ஷைர் எனும் இடத்திலுள்ள மவுன்ட் வாஷிங்டன் மலைமீது லாங்மூரும், ஷேபரும் ஏறிக்கொண்டிருந்தனர். தற்செயலாக பனிக்கட்டிகள் மேகத்திலிருந்து விழும நிலையை கண்டார்கள். உலோகத்தின் பரப்பின் மீதும் பனிக்கட்டிகள, பனியோ, மழையோ விழாமலிருந்தும் கூட உருவாகும் விந்தையை கவனிக்க நேர்ந்தபோது, வெறும் வெளியிலுள்ள நீரணு மாறி பனிக்கட்டியாக மாறும்போது—மேகங்களை பனிக்கட்டிகளாக உருவடையச் செய்து செயற்கையால் மழையை ஏன பெய்வித்தல் இயலாது என்று அவர்களது உள்ளத்தில் எழும்பியது. அதன் விளைவுதான் செயற்கை மழை கண்டு பிடிக்கப்பட்டது.

மழைக்குரிய கருப்பொருளாக சில்வர் அயோடைட் என்ற ரசாயனப் பொருளை உபயோகித்து மழையை பெய்விக்கின்றனர். சில்வர் அயோடைட் எனும் ரசாயனப் பொருளை எரித்து புகை பிறப்பியின் (Smoke Generotons) வாயிலாக மேகங்களை யடையச் செய்து—மேகத்தினகண் பனிப்படிகங்களை உண்டாக்கி விடுகின்றன. பனிப்படிகங்கள் சில மணி நேரங்களில் மழையாக உண்டாகிவிடுகிறது. 1949-ல் ஆல்புகர்க் எனுமிடத்தில் லாங்மூரும், ஷேபரும் ஒரு சோதனை நடத்தினர். அச்சோதனையில் சரியாக காலை 5-30 மணிக்கு

[அடுத்த பக்கம் பார்க்க]

---

உணர்ச்சியையும் தோற்கடிக்கும் திறமை பெற்றிருந்தது அந்த நாளிலே.

இலங்கையிலிருந்து மீண்ட மகேந்திரன், பாடலிபுரத்தில் புத்த நிலையம் கட்டினன். அங்கேயுள்ள சாசனங்களில் சாக்கிய குமாரியின் வாழ்வு பற்றி தெளிவுற அவன் எழுதி வைத்திருப்பதை இன்றும் காணலாம் பார்வையாளர்கள், பாடலிபுரத்திலே.

ஃ

சிறுவர் பகுதி தொடர் கதை

# மல்லிகா



ஜெ. எத்திராஜன்

## 5. கெட்ட எண்ணம்

அன்று மத்தியானம், மல்லிகாவுக்குக் கடுமையான ஜுரம்! வீட்டு வேலைகளைச் செய்ததால் ஜுரம் இன்னும் அதிகமாகிவிட்டது.

அவள் மாமா அவ்வூர்த் தபாலாபீஸில் 'குமாஸ்தா' வேலை செய்து வந்தார். அன்று மத்தியானம் சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வந்தவர், மல்லிகா படுக்கையில் படுத்தபடியே முனகிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

"மல்லிகா! உனக்கு என்ன உடம்பு? அத்தை அடித்தாளா?" என்று கேட்டார்.

"அத்தை என்னை அடிக்கவில்லை, மாமா!......சும்மா...ஜுரம் வந்து விட்டது....." என்றாள் மல்லிகா. அவளால் சரியாகப் பேசமுடியவில்லை. மாமா அவள் உடம்பைத் தொட்டுப் பார்த்தார். உடம்பு அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது!

உடனே அவள் மாமா அருகிலிருந்த நகரத்திற்குச் சென்று, டாக்டரை அழைத்துவந்தார். இதற்குள் மணியாகி விட்டதால, டாக்டருக்குப் பணம் கொடுத்துவிட்டு, மல்லிகாவுக்கு நல்ல மருந்து கொடுக்கும்படி சொல்லிவிட்டு, ஆபீஸுக்குச் சென்றார் மாமா.

அவர் சென்றதும், டாக்டர் மல்லிகாவின் உடம்பைப் பரிசோதித்துப் பார்த்தார். பிறகு அமிர்தம்மாள் அவரைத்தனியாக அழைத்து, "டாக்டர்! உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும்...." "என்ன...?" என்று கேட்டார் டாக்டர்.

"தயவு செய்து நான் இப்போது சொல்லும் விஷயத்தை யாரிடமும் சொல்லிவிடாதீங்க........" என்று கூறிக்கொண்டே 'ஐந்து ரூபாய்' நோட்டை டாக்டரிடம ரகசியமாக அவர் கையில் திணித்தாள். டாக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு அவளேமெல்ல பேச்சைத் தொடர்ந்தாள்:—

"அந்தப் பெண்ணுக்குக் காய்ச்சல்—அதிகமாகும்படியா ஏதாவது மருந்து கொடுத்துவிட்டுப் போங்க..." என்று கூறி முடித்தாள்.

அவள் கூறியதைக் கேட்டதும், டாக்டரின் முகம் மாறிவிட்டது! ஒன்றும் பேசாமல் அவள் கொடுத்த ஐந்து ரூபாயைப் பெற்றுக் கொண்டார். ஏதோ மருந்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அமிர்தம்மாள் அவர் கொடுத்த மருந்தை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டாள். 'அந்த மருந்தினால் மல்லிகாவின் காய்ச்சல் அதிகமாகும்' என்பது, அவள் எண்ணம். 'கெடுவான் கேடு நினைப்பான்' அல்லவா?

ஆனல் அவளுடைய கெட்ட எண்ணம் ஈடேறவில்லை! மருந்தைக் குடித்ததும், மல்லிகாவின் ஜுரம் குறைந்ததே தவிர, அதிகமாக வில்லை! உடம்பு வலியும் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்தது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

சில்வர் அயோடைட் புகைபிறப்பியின் வாயிலாக எரிக்கப்பட்டது, 10-10 மணியிறசெல்லாம் மின்னலும் உண்டாகியது. 13. 4 டாலர் மதிப்புள்ள சில்வர் அயோடைட் எரிக்கப்பட்டு. 13மணி நேரத்தில் 320,000,000,000 காலன் மழையை பெய்வித்தனராம்! இச்சோதனையால் பீகாஸ் எனும் நதியில் மட்டும் 3,000,000,000 காலன் தண்ணீர் ஓடியதாம்!

புகைப பிறப்பியை அமைத்துக் கொடுத்தவர் டாக்டர் வொன்னிகட் என்ற அறிஞராகும். அவரும் ஷேபர், லாங்முர் என்ற மூன்று விஞ்ஞானிகளும் மேலும் பலவித ஆராய்ச்சிகளை நடத்தி மழை பெய்விக்கவும்—குறைந்த செலவில் உண்டு பண்ணவுமான வழிகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். ரஷ்ய விஞ்ஞானிகள் 'கால்ஸியம் க்ளோரைட்' எனும் நீர் உறிஞ்சும் உப்பை மேகங்களில தூவி மழை பொழிவிப்பதாக மேலைநாட்டு பத்திரிகைகள் செய்திகளை அறிவிக்கின்றன! இன்னும் சில ஆண்டுகளில் குறைந்த செலவில்—சிக்கல்கள் இல்லாத வகையில் செயற்கையால் மழையை பெய்விக்க முடியும். அதற்காக விஞ்ஞானிகள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். முடிவில வெற்றியும் பெறுவர்!

ஆனல் நம் நாட்டில்......?

இங்கு மழை பெய்யாததற்கு காரணம் ஆண்டவனின் கோபமென்றும், நாட்டில நாத்திகர்கள் பெருகிவிட்டனரென்றும், காலம் கெட்டுப் போச்சு என வேதாந்தம் கூறியும் பஜ கோவிந்தம் பாடுங்கள் மழை பெய்யும் என கூறுகின்றனர்.

மழையை பெய்விக்க பஜகோவிந்தம் தேவைப்படுகிறது இங்கே! மேலை நாடுகளில் விஞ்ஞானம் தேவைப்படுகிறது மழையை பெய்விக்க!

இவற்றில் எது தேவை? பஜகோவிந்தமா? விஞ்ஞான ஆராய்ச்சியா? மழை பெய்விக்க?...

டாக்டர் மிகவும் நல்லவர்; அமிர்தம்மாள் சொல்லியபடி, காய்ச்சல் அதிகமாகும்படியாக அவர் மருந்து கொடுத்துவிட்டுச் செல்லவில்லை. அவள் பேசிய பேச்சிலிருந்து, அவளுடைய கெட்ட குணத்தை அறிந்து கொண்ட டாக்டர், நல்ல மருந்தையே கொடுத்து விட்டுச் சென்றார்.

அமிர்தம்மாள் மல்லிகாவின்மேல் ஏன் அவ்வளவு வெறுப்பு கொள்ள வேண்டும்? ஏன் அவளைக் கொடுமை செய்யவேண்டும்? 'சிற்றன்னைகள்தான் கொடுமை செய்வார்கள்' என்று மல்லிகா கதைகளில் படித்திருக்கிறாள்; கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் அத்தை அவளைக் கொடுமை செய்கிறாளே! அதற்குக் காரணம் என்ன? அமிர்தம்மாள் மல்லிகாவிடம் வெறுப்பு—கோபம் கொண்டிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அது அவளுக்குத்தான் தெரியும். மல்லிகாவுக்குத் தெரியாது!

## 6. கனவு

மறு நாள் மல்லிகாவின் உடம்பு குணமாகிவிட்டது.

'மல்லிகா! மல்லிகா!' என்று கூப்பிட்டுக்கொண்டே, அவள் வீட்டிற்குள் நுழைந்தான், மாணிக்கம்.

'டேய், மாணிக்கம்! இனிமேல் நீ இங்கே வராதே! வந்தாயானால் உன் அப்பாவிடம் சொல்லி உதைக்கச் சொல்வேன்.''—இந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டான், மாணிக்கம். அமிர்தம்மாள் அவனெதிரில் 'காளி'போல் காட்சியளித்தாள்!

மல்லிகா அப்பொழுது கடைக்குப் போயிருந்தாள்.

மாணிக்கம் ஒன்றும் பேசவில்லை. வந்த வழியே திரும்பிச் சென்றான்.

அவனும் மல்லிகாவும் அன்றே தங்களுடைய கல்வி போதிக்கும் திட்டத்தை ஆரம்பிப்பதாக இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய திட்டத்திற்கு அமிர்தம்மாள் பெருந் தடையாக இருந்தாள். அவர்களுடைய இணைபிரியா நட்புக்கே உலை வைக்க நினைத்துவிட்டாள்! ஆனால் அவள் எண்ணம் பலிக்கவில்லை. 'எப்படியாவது இந்தக் கோடை விடுமுறையில் படிப்பு வாசனையறியாத மக்களுக்குக் கல்வி போதிக்க வேண்டும்' என்ற எண்ணம், மல்லிகா—மாணிக்கம இருவருடைய மனத்திலும் வேரூன்றிவிட்டது. அவர்கள் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க எப்படி முடியும்?

மல்லிகாவுக்குக் காய்ச்சல் கண்ட இரண்டாம் நாள்; அமிர்தம்மாள் படுக்கையில் படுத்தவள்தான்! பிறகு அவளால் எழுந்திருக்க முடியவில்லை. கடுமையான காய்ச்சல் அவளையும் பற்றிக்கொண்டது! அவள் வஞ்சகக் குணம் அவளையே வாட்டி வதைத்தது!

மல்லிகாவே வீட்டு வேலைகளையெல்லாம் கவனித்து வந்தாள். அதனால் அவள் எண்ணம் மேலும் தடைப்பட்டது!

அன்று மாலை; அமிர்தம்மாளின் ஜுரம் இன்னும் அதிகமாகிவிட்டது! வாய் பிதற்ற ஆரம்பித்தாள்.

அப்போது மல்லிகாவின் மாமா வீட்டில் இல்லை. அவர் நண்பர் ஒருவரின் கல்யாணத்திற்காக வெளியூருக்குச் சென்றிருந்தவர், இன்னும் திரும்பிவரவில்லை.

"அத்தை! நான் போய் டாக்டரை அழைத்து வரட்டுமா?" என்று கேட்டாள், மல்லிகா.

"டாக்டருக்குக் கொடுக்கக் கையில் பணமில்லையே டீ...!" என்றாள் அமிர்தம்மாள், தாழ்மையான குரலில்.

"பணத்தைப் பற்றிக் கவலைப் படவேண்டாம், அத்தை! முதலில் உன் உடம்பு குணமாகட்டும். நான் போய் எப்படியாவது டாக்டரை அழைத்துவருகிறேன். உங்களுக்குக் கஞ்சி வேண்டுமானால், இதோ பக்கத்தில் வைத்துவிட்டுப் போகிறேன்...'' என்று கூறிவிட்டு, மல்லிகா டாக்டரை அழைத்துவரச் சென்றாள்.

மல்லிகா டாக்டர் வீட்டை அடைந்தாள். "டாக்டர்! டாக்டர்! என் அத்தைக்கு ஜுரம். சீக்கிரம் எங்கள் வீட்டுக்கு வாங்களேன்'' என்று மல்லிகா பரபரப்புடன் டாக்டரை அழைத்தாள்.

அதே சமயத்தில் 'டிரிங்... டிரிங்...' என்று அங்கிருந்த 'டெலிபோன்' மணி அடித்தது. டாக்டர் 'ரிசீவ'ரைக் கையில் எடுத்து, "ஹலோ...ஹலோ...யார் பேசறது...?'' என்று கேட்டார். பிறகு அவர், "ஓஹோ! ராவ்சாஹிப் சண்முகானந்தம் பிள்ளையா? நமஸ்காரம்...உங்கள் உடம்புக்கு என்ன?... சரி...சரி...ரொம்ப அவசரமா? இதோ ஐந்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு, 'டெலிபோன் ரிசீவ'ரைக் கீழே வைத்தார்.

வெளியே டாக்டரின் கார் தயாராக நின்றுகொண்டிருந்தது. டாக்டர் அதில் ஏறிக்கொண்டார்.

"டாக்டர்! டாக்டர்!!...'' என்று மல்லிகா கூப்பிடுவதை அவர் சட்டை செய்யவில்லை. காருக்குள் 'ஜம்' மென்று உட்கார்ந்துவிட்டார்!

"டாக்டர்! டாக்டர்! உங்களுக்குக் கோடிப் புண்ணியம். தயவு செய்து எங்கள் வீட்டுக்கு வந்து என் அத்தையைக் காப்பாற்றுங்கள்; டாக்டர்! டாக்டர்......!''—காருக்கு முன்னால் வந்து நின்று, டாக்டரைக் கெஞ்சி அழைத்தாள், மல்லிகா. ஆனால் டாக்டர் அவளை வெறுப்புடன் பார்த்து, "இப்போ வர முடியாது. போ...நான் அவசரமாகப் போகணும்'' என்றார்.

மல்லிகா, அவர் கூறியதைப் பொருட்படுத்தவில்லை. நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு, டாக்டரைக் கெஞ்சி அழைத்தாள். பூம்... பூம்...பூம்...

கார் புறப்பட்டது. மறுகணம் மல்லிகா மூர்ச்சையடைந்து கீழே சாய்ந்தாள். காரணம், கார் அவளைத் தள்ளிவிட்டுச் சென்றது! அவள் வாய் "டாக்டர்! டாக்டர்!'' என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தது!

(தொடரும்)

### முழுமதி போல்...!

பத்திரிகை வானிலே
பளிங்கு ஒளி தான் வீசும்
சித்திரை மாதத்து
சிறந்த முழுமதி போல்
பாட்டாளி மகனுக் கொரு
கூட்டாளி வாய்த்தது போல்
பகுத்தறிவு இயக்கத்தை
பாதுகாக்க வந்தனையே!

ச. மு. குமார் பொன்னக்சேஞ்

# முன்னேற்றம்

மூலம்: இங்கர்சால் - தமிழ்: ஊடுருவி

## 2. மாந்ரீகம்

எனது நண்பர்களே! அடுத்தபடியாக உங்கள் கவனத்தை ஒரு விஷயத்தில் திருப்பவேண்டும் படியாய் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த விஷயம் தான் பழைய காலத்தில் மக்களை முரட்டுத் தனமாகவும், பயங்கரமாகவும் தாக்கி வந்தது. அதன் பெயர் தான் **மாந்ரீகம்.**

மத்திய காலத்தில் வாழ்ந்த மக்களில் எவராயிருப்பினும், அதாவது அவர்கள் படித்தவர்களாயினும் பாமரர்களாயினும், ஆண்டானாயினும், அடிமையாயினும், மத உபதேசிகளாயினும், மதவாதிகளாயினும், வழக்கறிஞர்களாயினும், வைத்தியர்களாயினும், ராஜ தந்திரிகளாயினும், ரணகளச் சூரர்களாயினும், அரசர்களாயினும், ஆண்டிகளாயினும், மாந்ரீகத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர்.

பிசாசுகள் தங்கள் செயல்களைச் செய்துகாட்ட, சேஷ்டைகளைப்புரிய மக்களைப் பிடித்துக் கொண்டனவென்று கருதினர். மக்களை மட்டுமா அவை பிடித்துக்கொண்டன? இல்லை. மிருகங்களையும் பிடித்துக் கொண்டன. சிறு கிருமிகளையும் அவை விட்டுவிடவில்லை பிடித்துக் கொண்டன. இப்படியெல்லாம் நம்பிவந்தனர் அந்தக் காலத்து மனிதர்கள்.

ஆகவே அந்தக் கொடிய, பாதகம் புரியும் பிசாசுகளை ஒழித்துக் கட்ட வேண்டுவது மனிதனின் கடமை என்று தீர்மானித்தனர். அந்த ஒழிப்பு வேலையை செய்ய அவர்களுடைய முழுச் சக்தியையும் செலவிட்டனர். அவர்கள் அறிவுக்கு பட்ட எல்லா வழிகளையும் கையாண்டனர். மனித வர்க்கத்தின் விரோதி பிசாசுகள் என்று அவர்கள் முடிவு கட்டிவிட்டனர்.

ஆகவே அந்த அப்பாவி மனிதர்கள் மக்கள் விரோதியான பிசாசு ஒருவனிடம் தொடர்பு வைத்திருப்பதாக சந்தேகப்பட்டால் அவனைத் தூக்கிலிட்டு கொல்லத் துணிந்தனர். நெருப்பிலிட்டுப் பொசுக்கவும் பின் வாங்கியதில்லை.

அவர்கள் காட்டும் காரணத்தை ஒப்புக்கொள்வதனால், அவர்கள செயலைச் சரி என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

பேய்களோடு என் இவர்கள் ஒப்பந்தம் செய்துக் கொள்கின்றனர் என்றால், "பேய்களோடு சேர்ந்து சதி செய்து மற்ற மனிதர்களை கெடுத்து விடுவதற்காக," என்று கூறுகின்றனர். ஆகவே இவர்களைப்பூண்டோடு ஒழிக்க மக்கள் முயன்றனர் தங்கள் வாழ்வுக்காக. இதில் தவறில்லை. சரியான செயலாகும். இதற்குப் பெயர் மாந்ரீகர் குற்றம்.

இதுபோல் பல மாந்ரீகக் குற்றங்கள் ஐரோப்பிய நகரங்களில் உள்ள ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ருசுபிக்கப்பட்டிருக்கின்றன. பேய், பிசாசுகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டதற்காக குற்றம் சாட்டப்பெற்ற ஆயிரக் கணக்கானவர் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளனர். அந்தக் குற்றவாளியை நோக்கி "பிசாசு உன்னிடம் என்ன பேசிற்று சொல்" என்று மிரட்டி யிருக்கின்றனர். அந்த மிரட்டலுக்குப் பயந்த மக்கள் "இதைச் சொன்னது அதைச் சொன்னது" என்று பதில் கூறியிருக்கின்றனர். மக்களிடம் பிசாசு தொடர்பு கொண்டதாலும், மக்கள் பேய்களிடம் பேரம் நிகழ்த்தியதாலும் தான் பெற்ற மக்களை இழந்தனர், மனைவியை இழந்தனர். பொருளைப் பறிகொடுத்தனர். வீடின்றி வெளியிலேயும் தாராளமாகத் திரிய மனமின்றி அலைந்தனர். இத்துடன் முடிந்ததா? பாவம் அவர்கள் இறந்தனர். இறந்த பின்னும் பழிச் சொல்லையேற்றனர்.

அவர்கள் தங்கள் மனைவி மக்களை-இன்பத்தை, வாழ்வை, உடல் பொருள் ஆகியவற்றை இழந்து இறந்துவிடப் போகின்றோம் என்று தெரிந்த பிறகுகூட, ஆம்! மரணத்தின் வாயில் நின்றுக் கொண்டிருக்கும்போதும் கூட—சாவின் வாசலில் நின்றிருக்கும் சமயத்தில் கூட—சமாதியின் ஒரு மூலையில் நின்றுக் கொண்டு தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர்.

ஏன் அவர்கள் அந்தக் குற்றங்களை ஒப்புக்கொண்டனர் என்பது பற்றி நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

நான் குற்றவாளியல்ல என்று மறுத்துக் கூறும் மனிதன் தான் கூறியது உண்மையானது என்று எண்ணுகின்றான். அத்துடன் உண்மையைக் கூறுவதால் நல்லவர்களுடைய அனுதாபத்தைப் பெறலாம் என்று நினைக்கின்றான். எதிர்காலத்தில் தோன்றப் போகும் நல்லறிவாளர்கள் அவனுடைய பெயரை நன்றியறிதலுடன் உச்சரிப்பார்கள் என்று அறிகிறான். அத்துடன் நியாயமான—உண்மை


### இங்கர்சாலின் நூல்கள்

○

| | |
|---|---|
| வால்டையர் | 1—0 |
| மூடநம்பிக்கை | 1—0 |
| மதங்கள் | 1—0 |
| அறியாமை | 1—0 |
| உண்மை | 1—0 |
| கோயில்கள் | 1—0 |
| கடவுள் | 1—0 |
| மக்கள் உரிமை | 1—0 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0—8 |

கலைமன்றம், சென்னை-1.

யான கடவுள் ஒன்று இருக்குமானால் அதனுடைய ஒப்புதலையும், ஆதரவையும் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கின்றான்.

ஆனால், தான் ஒரு மந்திரவாதி என்பதை ஒப்புக் கொள்ளும் மனிதன் ஏன் அப்படிச் செய்கின்றான் என்றால், தன்னுடைய பெயர் பிறரால் தூற்றப்படும் என்று நினைத்தும், தான் அப்படி ஒப்புக்கொள்ளாவிடில் தன்னுடைய ஆன்மா மீளாத நரகத்தில் சிக்கி அழியும் என்று எண்ணியும் அந்த குற்றத்தை ஒப்புக் கொண்டால மன்னிக்கப் படுவோம் என்று முடிவு கட்டியும் அக்குற்றத்தை ஒப்புக் கொள்ளுகின்றான்.

இஃதோர் புதுமையிலும் புதுமை. அவர்கள் தங்களைக் குற்றவாளிகள் என்றே தீர்மானித்துவிட்டனர் என்றுதான் நான் நம்புகிறேன். அந்தோ! அவர்கள் தங்களுடைய நிலைமை நம்பிக்கை அற்றது என்று கருதி குற்றத்தை ஒப்புக்கொண்டு, யாதொரு மதப் பிரார்த்தனையுமின்றி இறந்து ஒழிந்தனர்.

அந்தக் காலங்களில் ஒரு சில சமயங்களில் இந்த உலகில் வாழ்ந்த மக்கள் பைத்தியக்காரர்களாகி இருந்தனர். அப்போது இந்த உலகமே காப்பாளர் அற்ற ஒரு பைத்தியக்கார விடுதியாக இருந்திருக்கின்றது என்ற உண்மையை மேற்குறித்த நிகழ்ச்சிகள் நமக்குச் சுட்டிக் காட்டி நம்பும்படி செய்கின்றன.

செய்யாத குற்றங்களை ஒப்புக் கொண்டவர்கள், தாங்கள் குற்றவாளிகளே என்று ஒப்புக்கொண்டனர். இதனை நான் மறுபடியும் எடுத்துச் சொல்லுகின்றேன்.

மனிதர்கள் முதலில் மாந்ரீகத்தின் மீது நம்பிக்கைக் கொண்டனர். அதன் பிறகு மக்கள் அடிக்கடி சைத்தான் வசமாயினர் என்றும் நம்பினர். அவர்கள் குற்றம் சாட்டப்பட்டபோது, அதனால் ஏற்பட்ட பயமும், வேதனையும் அவர்களைப் பைத்தியக்காரர்களாக்கின.

இந்த பரிதாபத்திற்குரிய ஏழை மக்கள் மறுக்க முடியாத குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டு — மதிப்பிற்குரிய நண்பர்களால் கைவிடப்பட்டு-மூட நம்பிக்கை என்னும் கயிற்றால் கட்டப்பட்டு—பயம் என்னும் மயக்க மருந்தருந்தி தனியாக விடப்பட்டு—வாழ்வு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையை இழந்துவிட்டு நம்மால் புரிந்து கொள்ள முடியாத பெருங் கொடுமைகளுக்குப் பரிசாக மரணத்தை அடைந்தனர்.

முதலாம் ஜேம்ஸ் காலத்தில் அரச குடும்பத்தை கடலிலே மூழ்கடிக்க வேண்டி கடலிலே புயலை உண்டாக்கியதாக ஒரு மனிதனை ஸ்காட்லாந்திலே உயிரோடு எரித்துச் சாம்பலாக்கி இருக்கின்றனர்.

குழந்தைகள் வளைந்த குண்டூசிகளை வாந்தி யெடுக்கச் செய்த குற்றத்திற்காக ஒரு பெண் குற்றவாளியாக்கப்பட்டு, ஆங்கில நாட்டு படித்த புகழ் வாய்ந்த வழக்கறிஞர் சர். மேத்யூ ஹேல் என்பவர் முன் விசாரிக்கப்பட்டு அவள் பேய்களை ஆதரித்து வந்தாள் என்று குற்றஞ் சாட்டப்பட்டாள். அந்த அபலை பெண்ணுக்குத் தீர்ப்பளிக்கும் நீதிபதி ஜூரர்களைப் பார்த்து "சூனியக்காரிகள் இருப்பது பற்றி யாருக்கும் சந்தேகம் கிடையாது. வைதீகம், லௌகீகம் இவைகளின் வரலாறுகளும், ஒவ்வொரு நாட்டின் அனுபவமும் இதனை ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பித்திருக்கின்றன" என்பதாகும். பாவம் அந்தப் பெண் செய்ததாகக் கூறப்பட்ட குற்றத்திற்கு தூக்குத் தண்டனையோ—அல்லது தீயிலிட்டு எரிக்கப்பட வேண்டும் என்ற தண்டனையையோ பெற்று மாண்டாள்.

மேலும், பேயினால் ஆட்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் மக்கள் தங்கள் மனித உருவத்தை ஓநாய் உருவமாக மாற்றிக் கொள்ளுவார்கள் என்றும் கருதப்பட்டது அந்தக் காலங்களில்,

ஒருவன் ஓநாய் உருவங்கொண்ட மற்றொருவனால் தாக்கப்பட்டதாக ஒரு நிகழ்ச்சியைப்பற்றி சொல்லுகின்றார்கள்.

ஓநாய் மனிதனால் தாக்கப்பட்டவன் தன்னைக் காப்பாற்றிக் கொண்டதுடன் நின்றுவிடாமல், அந்த ஓநாயின் பாகத்தை வெட்டி யெறிந்தான். உடனே ஓநாய் ஓடிவிட்டது. அந்த வெட்டப்பட்ட ஓநாயின் ஒரு பாகத்தை தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான். அங்கே அவனுடைய மனைவி ஒரு கையை இழந்துவிட்டு இரத்தம் ஒழுக ஒழுக உட்கார்ந்துக் கொண்டிருந்ததைக் கண்டான். அதனைக் கண்டதும் தன் பைக்குள் கையை விட்டு ஓநாயின் வெட்டப்பட்ட பாகத்தை வெளியில் எடுத்தான். அது ஒரு மனிதனுடைய கையாக இருந்தது. இதைக் கண்ட அவன் தன் மனைவியை ஒரு சூனியக்காரி என்று குற்றம் சாட்டினான். அவள் எந்த ஆதாரத்தை காட்டி தான் குற்றவாளி அல்ல என்று வாதாட முடியும்? ஒப்புக்கொண்டாள் தான் குற்றவாளிதான் என்று. இதற்காக அவள் உயிரோடு எரிக்கப்பட்டாள்.

மேலும் கோடை காலத்தில் உரைபனியை உண்டாக்கிய குற்றத்திற்காகவும், பயிர்களைக் கல் மழை வரவழைத்து அழியச் செய்ததற்காகவும், பசுக்களை பால் கொடுக்காமல் தடுத்ததற்காகவும், பீர் என்னும் மதுவை புளிப்பாக்கியதற்காகவும், மக்கள் பலர் தீயிலிட்டு எரிக்கப்பட்டனர்.

அந்தக் காலங்களில் எவரும் பயமின்றி வாழ முடியாது. நிம்மதியோடு உலவ முடியாது. ஒருவன் தன் விரோதியை ஒழிக்க வேண்டுமென்றால், அவனை ஆயுதங் கொண்டோ, கொலைக்காரர்களை ஏவியோ கொலை செய்ய வேண்டியதில்லை. "அவன் ஒரு சூன்னியக்காரன்" என்று சொல்லிவிட்டு அதற்கான சில ஆதாரங்களில் ஒன்றிரண்டைக் கூறிவிட்டால் போதும், அவ்வளவுதான். அவர்கள் அழிந்து ஒழிவார்கள்.

மாந்ரீகத்தை மறுப்பவர்கள்—சந்தேகிப்பவர்கள் பட்ட கஷ்டங்களுக்கு எல்லையே கிடையாது. பலர் உயிரையே இழந்து இருக்கின்றனர்.

இந்த பிசாசுகள் மனிதர்களை பிடித்துக் கொண்டதுடன் நின்றுவிடவில்லை. அது மிருகங்களையும் பிடித்து ஆட்டியிருக்கிறது. (தொடரும்)

கலைமன்றம் & கலைஅரங்கம்
விற்பனையாளர்
T. S. லிங்கம்
56. மொகல் தெரு
இரங்கூன் (பர்மா)




## பெண்

'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்பது முதுமொழி. ஆனால் இந்தப் 'பெண்' அயல் நாடு சென்று, கடல்கடந்து சென்று நமது நாட்டின் பெருமையையும், புகழையும், கலை உணர்வையும் நிலை நாட்டுகிறாள். ஆணவமிக்க ஸ்பெயின் நாட்டு நடனக் காரியை, நம் நாட்டுப் 'பெண்' தன் கலைத் திறனால் அடக்குகிறாளாம். இப்படி பல அழகிய காட்சிகளும், உயர்ந்த நடனங்களும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பாடல்களும், கருத்துக்களடங்கிய வசனங்களும் 'பெண்'ணில் நிறைந்துள்ளன.

இந்தப் 'பெண்'ணை 'வாழ்க்கை'யிலே புகழடைந்த ஏ. வி. எம். கலைக் கூடம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இப்படத்தில் வைஜயந்திமாலா, அஞ்சலிதேவி, நாகய்யா, எஸ். பாலசந்தர், ஆர். கணேஷ், சகஸ்ரநாமம், சாரங்கபாணி முதலியோர் நடிக்கின்றனர். அழகும், புதுமையும் நிறைந்த இந்தப் 'பெண்' இம்மாதக் கடைசி வெளிவருவாள் எனத் தெரிகிறது.

## துளிவிஷம்

'துளிவிஷம்' என்றதும் படமும் பார்க்க விஷமாக இருக்கும் என்று நினைத்து விடாதீர். படம் பார்க்க சுவையாகத்தான் இருக்கும். காண களிப்பாக இருக்கும். வசனங்கள் கேட்க அழகாக இருக்கும். பாடல்கள கேட்க இனிமையாக இருக்கும். இந்த 'துளிவிஷ'த்தை நரஸு பிக்சர்ஸ் தயாரிக்கின்றனர். இதில் கே. ஆர். ராமசாமியும், சிவாஜி கணேசனும் சேர்ந்து நடிக்கிறார்கள். மேலும் கிருஷ்ண குமாரி, பி. கே. சரஸ்வதி, டி. வி. நாராயணசாமி, ரங்காராவ், ராதா கிருஷ்ணன் ஆகியோரும் இடம் பெறுகின்றனர். 'துளிவிஷ'த்தை எழுதிய ஏ. எஸ். ஏ. சாமியே அதை டைரக்ட் செய்கிறார். 'துளிவிஷம்' கூடிய சீக்கிரம் வெளிவரும் என எதிர்பார்க்கபபடுகிறது.

## ரத்தபாசம்

'ரத்தபாசம்' கதை பம்பாயிலும் சென்னையிலும் நடப்பதாக அமைக்கப்பட்டது. ஸ்ரீதர் எழுதிய 'ரத்தபாச'த்தை ஔவை புரொடெக்ஷன்ஸ் உரிமையாளர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் தயாரித்து வருகின்றனர். வெளிப்புறக் காட்சிகளை எடுப்பதற்காக பம்பாய் சென்ற டி. கே. எஸ். சகோதரர்கள் அங்கேயே தங்கியிருக்கிறார்கள். இதில் டி. கே. பகவதி, டி. கே. ஷண்முகம், பாலையா,



ஏ. வி. எம். 'பெண்'ணில்

அஞ்சலி தேவி, வித்தியாபதி முதலியோர் நடிக்கின்றனர். இதை ஆர். எஸ். மணி டைரக்ட் செய்கிறார். முடியுந்தறுவாயி லிருக்கும் 'ரத்தபாசம்' ஜூலை கடைசியில் வெளி வருமெனத் தெரிகிறது.

## ராஜா—ராணி

'ராஜா—ராணி' என்ற பெயரைக் கேட்டால சரித்திரப படம்போல தோன்றுகிறது. ஆனால் மேகலா புரொடக்ஷன்ஸார் நியூடோன் ஸ்டுடியோவில தயாரிக்கும் 'ராஜா-ராணி' சரித்திரப படமா, சமூகபபடமா என தெரியவில்லை. இதில தற்காலத்தில் புகழேணியின் உச்சியில நிற்கும் சிவாஜி கணேசன், லலிதா, பத்மினி, முதலியோர் நடித்து வருகின்றனர். இந்த 'ராஜா—ராணி'க்கு கலைஞர் கருணாநிதி கதை வசனம் எழுதியிருக்கிறார். இது சீக்கிரம் திரையிடப படுமெனத் தெரிகிறது.

## மாங்கல்யம்

மாங்கல்யம் தமிழ் நாட்டு மங்கையரின் கழுத்தில கொஞ்சி விளையாடும் விலை மதிக்க முடியாத ஆபரணம். இதை கோவை சென்டரல் ஸ்டுடியோவில எம். ஏ. வி. பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'மாங்கல்யம்', அதன் சிறப்பையும, பெருமையையும் விளக்குமாம். இதன் கதை வசனத்தை எழுதிய ஏ. பி. நாகராஜனே பிரதான பாகத்தில் நடிக்கிறாராம். மற்றும் நம்பியார், டி. எஸ். சரோஜா, ராஜ சுலோசனா, முதலியோர் நடித்து வருகின்றனர் இதை சோமு டைரக்ட் செய்கிறார்.

இது இம்மாத கடைசியில் வெளியாகும் படங்களில் ஒன்று.

## கூண்டுக் கிளி

ரேவதியில் ஆர். ஆர். பிக்சர்ஸாரால் வளர்த்து வரும் 'கூண்டுக்கிளி' முடி வடையும் தறுவாயிலிருக்கிறது. இதை ராமண்ணா டைரக்ட் செய்து வருகிறார். புதுமையான கதைப் போக்குடையதும், புரட்சிகரமான கருத்துக்கள் நிறைந்ததுமான 'கூண்டுக் கிளி'க்கு 'விந்தன்' வசனங்கள் எழுதியிருக்கிறார். இதில் திரையுலக மன்னன் சிவாஜி கணேசன், எம். ஜி. ராமசந்திரன, கே. சாரங்கபாணி, பி. எஸ். சரோஜா முதலியோர் நடித்து வருகின்றனர். ராகினி கோஷ்டியாரின அற்புத நடன மொன்று 'கூண்டுக் கிளி'யில் இடம் பெற்றிருக்கிறது. விரைவில் இப்படம் திரையிடப்படும்.

## செய்திச் சுருள்

### தி. மு. க. பொதுக்கூட்டம்

பொறையார்

6—6—54 ஞாயிறு மாலை மணி 7க்கு தோழர் M. H. M. அபூபக்கர் தலைமையில் கலைஞர் மு. கருணாநிதி தோழர் N. S. இளங்கோ நடிப்புச் செல்வர் S. S. ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

### வெற்றி விழா

கல்லுப்பட்டியில் ஜூன் 1-ம் தேதி S. சுப்புலட்சுமி அம்மையார் அவர்கள் வீட்டில், ஆச்சாரியாரின் புதுக் கல்வி திட்டம ஒழிந்ததுபற்றி வெற்றிவிழா நடைபெற்றது. அது போது பல தோழர்கள் பேசினார்கள். சிலர் இயக்கப் பாடல்கள் பாடினார்கள். அடைந்த வெற்றிக்காக சிறு குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டது.

### படிப்பகத் துவக்க விழா

குடந்தை தாலுகா, திலலையம்பூர் வட்டம் மாதாகுடியில் 23—5—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு தில்லையம்பூர் பஞ்சாயத்போர்டு தலைவர் உயர் திரு. ரா. ஆறுமுகத் தேவர் தலைமையில் இளங்கோ படிப்பகத் துவக்கவிழா நடைபெற்றது. அவ்வமயம் எம். ஆர். சம்பந்தம் படிப்பகத் தலைவராகவும், இரா. சுந்தரமூர்த்தி செயலாளராகவும், க. நட





ஆர். ஆர் பிக்சர்ஸ் 'கூண்டுக்கிளி'யில்

ராசன் பொருளாளராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின் தலைவர் முடிவுரை கூற; செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

### ஆரம்ப விழா

கருங்கடல் கிராம தி. மு. க. ஆரம்ப விழா 29—5—54 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு களக்காடு தோழர் சி. சேதுராமலிங்கம் தலைமையில் புளியங்குளம் வ. உ. சி மைதானத்தில் நடைபெற்றது. அது பொழுது நெல்லை மாவட்ட துணை செயலாளர் தோழர் எஸ் கந்தசாமி; கலைஞர் அப்துல்காதர், சாத்தான்குளம தி. மு. க. செயலாளர் K. சோமதுரை, தோழர் வீ. சு. காசி முதலியவர்கள் தி. மு. க. கொள்கைகள் பற்றியும், திராவிட நாடு பிரிவது பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள்.

தீர்மானம:— இலங்கை வாழ் தமிழர்களை தென்னகத்தவர் என்று பாரபட்சமாக நினைக்கக் கூடாது. தமிழர்களது வாழ்வுப் பிரச்சனைகளில் மத்திய சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொண்டது.

### பொதுக் கூட்டம்

பரமக்குடி 29—5—54 சனிக்கிழமை இரவு 9 மணிக்கு திரு. பி. நாகலிங்கம் தலைமையின் கீழ், கலைஞர். மு. கருணாநிதி; மதுரை எஸ். முத்து; மு. வசனபித்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார். திரைப்பட பின்னணி பாடகர் அழகேசன் திராவிட கீதங்களை பாடி மக்களை மகிழ்வித்தார். இரவு 2 மணிக்கு செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

### திருந்திய திருமணம்

வள்ளுவர் ஆண்டு 1985 வைகாசி மாதம் 27-ம் நாள் (9—6—54) புதன்கிழமை காலை 8 மணிக்கு திராவிட கழக மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவர் அறிஞர் தெ. பொ வேதாசலம் B. A. B. L. அவர்கள் தலைமையிலும், டி. வி. டேவிஸ் பி. ஏ. எல். டி., பி. ஒ. எல். அவர்கள் முன்னிலையிலும் து. மு. பன்னீர்செல்வத்திற்கும், வே. கண்ணகிக்கும் வேங்கடசமுத்திரம் வே. வேங்கியாக் கவுண்டர் இல்லத்தில் திருந்திய திருமணம் நடைபெற்றது.

# கேள்விகள்

கே: அரசியல் சாணக்கியர், ராசதந்திரி குல்லூகப்பட்டர், அரசியல் குள்ளநரி என்றெல்லாம் புகழப்பட்ட, புகழ்கிற மாஜி முதன் மந்திரி கனம் ஆச்சாரியார் (ராஜாஜி) செய்த சட்ட திட்ட மெல்லாம் தன் வகுப்பு நலன் ஒன்றேயே முன்னிருத்தி, மனோதிடமாய் செய்துவைத்து விடுகிறார். குலத்தொழில் திட்டத்தை ஒழித்ததுபோல் வியாபாரிகளையே நாசப்படுத்தும் 'விற்பனை வரி'யை சீர்திருத்தம் செய்து ஒரு முனைவரியாக்கினால், ஓங்கி வளருமே தற்போதைய முதன் மந்திரி காமராசர் செய்வாரா?

ஜே. சத்திய நேசன்,
தூத்துக்குடி.

பதில். காமராஜருக்கு கடிதம் எழுதிக்கேளுங்கள்.

O O O

கே: கடவுள் என்பவர் யார்?

டி. என். திராவிட மணி,
ஈப்போ - மலேயா.

பதில்: யாருக்கும் தெரியாதவர்! இல்லாதவர்!

O O O

கே. தி. மு. க. கலை வளர்க்கும் கழகமா? அரசியல் கழகமா? சமூக நிறுவனமா? தி. மு. க. வில் அரசியல் அல்லது சமூக தொண்டர்கள் அதிகமா? அல்லது கலையன்பர்கள் அதிகமா? தி. மு. க. தலைவர்களிடம் சீர்திருத்த சிந்தனைகள் அதிகமா? இல்லையேல் புரட்சி திட்டங்கள் தான் அதிகமா?

மெர்சி.
ஆலங்குடி.

பதில்: உங்கள் எல்லா கேள்விகளுக்கும் ஆம்! என்ற விடையே பொருத்தமானது.

O O O

கே: மொழிவாரி மாகாணம் பிரிந்தால் திராவிட நாட்டுப் பிரச்சனை மாண்டுபோகும் என்று சின்ன அண்ணாமலை கூறுகின்றாரே தங்கள் கருத்தென்ன?

மு. நன்மாறன்,
வத்தலக்குண்டு.

பதில்: திராவிட நாடு வாழுமா? வீழுமா? என்ற பிரச்னையை நன்கு அலசி ஆராய்ந்து முடிவு கட்ட திராவிட இயக்கத்தவருக்கே நன்கு தெரியுமே அல்லாது சின்னதுகளுக்குத் தெரியாது.

O O O

கே: ராஜாஜி மந்திரி சபையை எதிர்த்த உங்கள் கழகம், திரு. காமராசர் மந்திரி சபையை ஆதரிப்பதின் மர்மம் என்ன? இன வேறுபாட்டை மட்டிலும் கருதி கட்சி வேறுபாட்டை விட்டு தள்ளுவது முறையாகுமா?

என். பூபதி,
நாகர்கோவில்.

பதில்: நண்பரே உங்கள் கேள்வியே தவறு. ஆகவே பதில் எழுதவேண்டிய அவசியமில்லை,

O O O

கே: நான் படித்த சீர்திருத்தம், கொள்கைகள் எல்லாம் என் ஊர் பெரியவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதற்கு நான் என்ன செய்வது?

கு. சி. சிவலிங்கம்,
குருவரெட்டியூர்.

பதில்: நோயாளிகளுக்கு உடம்பின் நோயை நீக்கும் கசப்பான மருந்து பிடிக்காது. அது போலவே பழமை நோய் பிடித்தப் பெரியோர்களுக்கு சீர்திருத்தம் என்னும் நல்ல மருந்து பிடிக்காது. மருந்துண்டால் நோய் நீங்கும் உடல் நலமுறும், இல்லையென்றால் உடல் அழியும் அதுபோலத்தான் சீர்திருத்தம் விரும்பாதவர்களும்.

O O O

### பொள்ளாச்சி தி. மு. கழக ஆண்டு விழா

30—5—54 தி. மு. கழக ஆண்டு விழாவும் ஆச்சாரியாரின் புதுக் கல்வித் திட்ட ஒழிப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலையில் மாபெரும் ஊர்வலமும், அணி வகுப்பும், இரவு சி. பி. சிற்றரசு அவர்களின் தலைமையில் "பரப்பிரமம்" என்ற நாடகமும் நடைபெற்றது.

கலைமன்றம்
விற்பனையாளர்
M. தேவராஜன் & பிரதர்
ஜோதி டெயிலரிங் & பிக்சர்ஸ் ஹவுஸ்
பஜார் தெரு, வடக்கன்குளம்

19/9/11

வட ஆற்காடு மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்

ஜூன் 19, 20 தேதிகளில் வேலூர் பாரக்ஸ் மைதானம்
அழகிரி பந்தல் P. முத்து அரங்கத்தில் நடைபெறும்.

| சமூக சீர்திருத்த மாநாடு | அரசியல் மாநாடு |
|---|---|
| தலைவர் : | தலைவர் : |
| **ஈழத்துசிவானந்த அடிகள், B. A.** | **கே. ஏ. மதியழகன்** அவர்கள், B.A. |
| திறப்பாளர் : | திறப்பாளர் : |
| **இரா. நெடுஞ்செழியன்** அவர்கள், M.A., ஆசிரியர், 'மன்றம்'. | **கி. மனோகரன் அவர்கள்** |

| முதல் நாள் மாநாட்டின் சொற்பொழிவாளர்கள். | | பொருள். |
|---|---|---|
| ஈ. வி. கே. சம்பத் | — | ஐரோப்பாவில் மறுமலர்ச்சி |
| அ. பொன்னம்பலனார் | — | புராணமும் இந்து மதமும் |
| மு. கருணாநிதி | — | புதுமை இலக்கியம் |
| இரெ. இளம்வழுதி | — | சட்டமும் சமுதாயமும் |
| என். வி. நடராசன் | — | வர்க்கப் போராட்டம் |
| கவிஞர் கண்ணதாசன் | — | தமிழ்நாட்டு சித்தர்கள் |
| க. அன்பழகன் | — | தமிழகம் அன்றும் இன்றும் |

இரண்டு நாட்களிலும் அறிஞர் அண்ணா, ஆசைத்தம்பி, அருண்மொழி, பூங்கோதை, சத்தியவாணிமுத்து, இராம அரங்கண்ணல், தில்லை வில்லாளன், A. கோவிந்தசாமி, M.L.A., N. S. இளங்கோ, M. S. ராமசாமி, C. P. சிற்றரசு, ப. உ. சண்முகம், தூத்துக்குடி K. V. K. சாமி, தங்கபழம், நடராசன், சிவசாமி, புரட்சி நடிகர், M. G. ராமச்சந்திரன் மற்றும் இயக்க முன்னணி வீரர்களும் கலந்து கொள்வார்கள்.

கலைவாணர் N. S. கிருஷ்ணன் குழுவினரும், நாகூர் அனிபா குழுவினரும் கலந்து கொள்வார்கள்.

| வரவேற்புக் குழு தலைவர்கள் : | செயலாளர்கள் : | தொண்டர் படைத் தலைவர்கள் : |
|---|---|---|
| மா. பா. சாரதி, நகராண்மைக் கழக உறுப்பினர். | போளூர் K. சுப்ரமண்யம். | A. கருத்தோவியன் |
| A. L. C. கிருஷ்ணசாமி, செயலாளர். வ. ஆ. மா. தி. மு. க. | V. R. ஆதிமூலம், வேலூர் நகர தி.மு.க. செயலாளர். | A. S. குப்பண்ணா. |

Printed and Published by— S. Francis, at Srimagal Press, 122, Varadamuthiappan Street, Madras-1. Editor: Palvannan.